www.padippakam.com

உள்ளே:

ஆல் போல் விழுதூன்றி, அருகு போல் வேரோடி,

## நம்மை ஆளுகின்ற வைதிகம்.

## ி. க. சி. அறிய...

## மேலும் சில விமர்சனங்கள்

இந்த இதழை விமர்சியுங்கள். சிறந்த இரண்டு விமர்சனங்களுக்கு ஈராண்டு சந்தா வழங்கப்படும்.

செப்டம்பர், 1994 விலை ரூ. 6.

படிப்பகம்

www.padippakam.com

( பாரதியின் பிறந்த நாள் நினைவாக )

## மகாகவி பாரதியின் காற்று

காற்றே வா. மெதுவாக வா.
ஜன்னல் கதவை அடித்து உடைத்துவிடாதே.
காயிதங்களையெல்லாம் எடுத்து விசிறி எறியாதே.
அலமாரிப் புத்தகங்களைக் கீழே தள்ளிவிடாதே.
பார்த்தாயா? இதோ தள்ளிவிட்டாய்.
புஸ்தகத்தின் ஏடுகளைக் கிழித்துவிட்டாய்.
மறுபடி மழையைக் கொண்டுவந்து சேர்த்தாய்.
வலி யிழந்தவற்றைத் தொல்லைப்படுத்தி
வேடிக்கை பார்ப்பதிலே நீ மகா சமர்த்தன்.

நொய்ந்த வீடு, நொய்ந்த கதவு,
நொய்ந்த கூரை, நொய்ந்த மரம்,
நொய்ந்த உடல், நொய்ந்த உயிர்,
நொய்ந்த உள்ளம்— இவற்றைக்
காற்றுத் தேவன் புடைத்து நொறுக்கிவிடுவான்.
சொன்னாலும் கேட்க மாட்டான்.
ஆதலால், மானிடரே வாருங்கள்.
வீடுகளைத் திண்மையுறக் கட்டுவோம்.
கதவுகளை வலிமையுறச் சேர்ப்போம்.
உடலை உறுதிகொள்ளப் பழகுவோம்.
உயிரை வலிமையுற நிறுத்துவோம்.
உள்ளத்தை உறுதி செய்வோம்.
இங்ஙனம் செய்தால்,
காற்று நமக்குத் தோழனாகி விடுவான்.
காற்று மெலிய தீயை அவித்து விடுவான்.
வலிய தீயை வளர்ப்பான்.
அவன் தோழமை நன்று.
அவனை நித்தமும் வாழ்த்துகின்றோம்.

— உள்ளே பக்கங்கள் 57, 58, 59 வரிசை மாறியுள்ளன —

படிப்பகம்

www.padippakam.com


# கவிதாசரண்

தனியிதழ் விலை ரூ. 5.
ஆண்டுச் சந்தா ரூ. 60.
ஆயுள் சந்தா ரூ. 600.
சந்தாவை **M. O.** செய்க.

படைப்பிலக்கிய மாத இதழ் ★ ஆசிரியர்: **கவிதாசரண்**



முகவரி:
**ஆசிரியர்,**
**"கவிதாசரண்",**
**31, டி. கே. எஸ். நகர்,**
**சென்னை–600 019.**
தொலை பேசி எண்: 54 44 99


---

படைப்பாளி, தனது சுகத்துக்காகப் பிறன் முதுகைச் சொரிவதை நிறுத்தட்டும்; படைப்பிலக்கியம் தனது வீரியத்தை மீட்டுக் கொள்ளும். சக்வாசப் பிழை யாவும் சகவாழ்வுச் சுகமாகிவிடாது. விமர்சனம் தவிர்ப்பதும் வீரியம் இழப்பதும், காசு கிடைக்குமென்றால் கொடுக்கிறவன் கொள்கைக்கேற்பக் கதைக்கிறவன் வேலை.

---

## அடுத்த இதழ் அக்டோபர் 21 இல் வெளிவரும்.

"மனித நேயப் பார்வையோடு, தமிழின் கலாச்சார - பண்பாட்டு மதிப்பீடுகளை இலக்கியத் தேடலாக்கும் இதழியக்கப் பயணம். தமிழுக்கான பரிமாணங்கள் யாவும் இதழுக்கான திசைகளாகும்.

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள். கடிதங்கள். கடிதங்கள்.

● சென்ற இதழில் வெளியான பி. விஜயகுமாரின் கடிதம் தொடர்பாக சில விஷயங்கள். கடிதம் எனக்கு உடன்பாடானதே; அதன் சாராம்சத்தை வைத்துச் சொல்கிறேன். ஆனால் அதில் தவறான புரிதல் காரணமாக ஒரு தவறு நடந்துள்ளது. 'சுந்தர ராமசாமியின் எடுபிடிகளான அ. மணிவண்ணன், டி. வி. பாலசுப்ரமணியம் ஆகியோரால் நடத்தப்படும் சிலேட்.........' என்று வரும் வாக்கியத்தில் தவறு நடந்துள்ளது. எதை வைத்து அவர் அப்படிச் சொன்னார் என்று எனக்குத் தெரியவில்லை. மேற்படி வாக்கியத்தில் என் பெயர் இணைக்கப்பட்டது மட்டும் தவறாகத் தோன்றுகிறது. நான் என்றுமே சுந்தர ராமசாமியின் அனுதாபியாகவோ, ஆதரவாளனாகவோ இருந்ததில்லை. குறைந்த பட்சம், அவரின் கருத்துக்களில் கொஞ்சம்கூட உடன்பாடு கிடையாது. என்னுடைய பாதையும் சுந்தர ராமசாமியின் பாதையும் வேறு வேறு. எங்கும் இணைப்பு கிடையாது. நான் ஒரு கம்யூனிஸ்ட். என் அரசியல் தளங்களில் அதி தீவிரமாக இயங்கிக்கொண்டிருப்பவன். எனக்கு அரசியல் முக்கியம். இலக்கியம் மயிரு. நான் எப்படி வெறும் இலக்கியவாதியான சுந்தர ராமசாமியின் எடுபிடியாக முடியும்? தமிழ் பத்திரிகையில் வெளியாகும் என் எழுத்துக்களில் எல்லாம் என்னுடையவும், என் தளத்தினுடையவும் அடையாளங்கள் அழுத்தமாகவே தெரிகின்றன. அதைப் படிக்கின்ற எவரும் என்னைப் பற்றிய விஜயகுமாரின் அசட்டுப் புரிதலுக்கு வரமுடியாது. ஆனால் 'சிலேட்' இதழில் இதற்கான காரணம் இருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன். வெளிவந்த மூன்று சிலேட் இதழிலும் சுந்தர ராமசாமி எழுதியிருந்தார். மூன்றாவது இதழ் ஒருவித புரிதலை ஏற்படுத்தியிருக்கும். அதன் காரணமாக விஜயகுமார் எடுபிடி என்று எழுதியிருக்கலாம். 'சிலேட்' இதழின் உள்ளடக்கத்தில் எனக்கு அவ்வளவாகப் பங்கில்லை என்றே நினைக்கிறேன். நிர்வாகப் பொறுப்பைமட்டுமே கவனித்து வந்தேன். அவ்வளவுதான்.

**டி. வி. பாலசுப்ரமணியம், கோட்டார்–659005.**

● அட்டையே அசத்தல். கடிதங்கள் மகுடங்கள் சார். 'மீண்டும் என் தலையங்கம்' செம ஜிப். கவிதைகளும், கதைகளும் டாப். கவிதாசரண் தமிழ் பத்திரிகை உலகுக்கு கிடைத்த பொக்கிஷம். கங்ராஜுலேஷன்ஸ்.

**கே. ஆர். சண்முகம், ஆசிரியர்– முதல் முரசு, திண்டுக்கல்**

● இதழ் கிடைத்து, உடன் படித்து, படித்த கையோடு கடிதம் எழுதத் தூண்டிய ஒரு அதீத வேகம் இதழுக்கான வெற்றி என்று கொள்ளலாம்தான்.

படிப்பகம்

www.padippakam.com



இதழ் வழக்கம் போல் இலக்கியத்தரம் மிக்க படைப்புகள்... சில குறைகள்... கூர்மையான ஆசிரிய வெளிப்பாடுகள்... வழக்கமான சாடல்கள்... கருத்து முரண்பாடுகள்... நயமிக்க கவிதைகள்... போன்ற முகங்களுடன் கவிதாசரணுக்கே உரிய தனித்துவத் தன்மையோடு மலர்ந்திருக்க ... இதழ் படித்த மறுகணம் கடிதம் எழுத வைத்ததும் ஒரு கடிதம்தான். தஞ்சாவூர் மணிவண்ணனின் முதல் கடிதம்தான் அது.

எல்லா சிற்றிதழ்களைப் பற்றியுமே என் மனதுள் நீண்ட நாட்களாய் கனன்றுகொண்டிருக்கும் ஒரு சினக்கொழுந்தின் வெளிஜ்வாலையாக இருந்தது மணிவண்ணன் அவர்களின் கடிதம். முதலில் ஒரு விஷயம்... நிறைவான விஷயம்... ஒரு வாசக அன்பரின் கடிதத்திற்கு ஒரு நீண்ட தலையங்கத்தையே பதிலாய்த் தந்த தங்கள் பண்பு வாசகர்கள்பால், இலக்கிய ஆர்வலர்பால் தாங்கள் கொண்டுள்ள மரியாதை, அக்கறை, நேசம் ஆகிய நல்லியல்புகளை முழுமையாக வெளிப்படுத்துகின்றது. மகிழ்ச்சி... நன்றியும் கூட.

இந்த ஜனநாயக நாட்டில் எது குறித்தும் எவரும் எழுதும் உரிமை உண்டு.... குறிப்பிட்ட ஒரு இனம் தவறிழைக்கும்போது அந்த இனத்தைக் கண்டிப்பாய் தாக்க வேண்டும். தவறைச் சுட்டிக் காட்ட வேண்டும். சாடவேண்டும். ஆனால் சொல்ல வந்த கருத்துக்கு அணுவளவு சம்பந்தமும் இன்றி இடைச்செருகலாக தேவையற்ற ஒரு சம்பந்தத்தை நுழைத்து சம்பந்தம் இருப்பதுபோல் காட்டி, அப்படியாவது ஒரு இனத்தை சாடித்தான் தீருவேன் என்பதுதான் கண்டனத்திற்குரிய வேதனையான விஷயம்.

**சாந்தா தத், ஹைதராபாத்.**

★ சினக் கொழுந்தின் காரணம் ஒவ்வாமைதான். ஒவ்வாமை மருந்து பற்றியதல்ல; உடம்பு பற்றியது. கடிதத்தின் கடைசி வாக்கியத்தை இன்னும் விளக்கியிருக்கலாம். (ஆ ர்.)

● இந்த இதழில் கதை கவிதைகளைவிட கடிதப்பகுதியும், தலையங்கமும்தான் சுவாரசியமாக, சிந்திக்க அதிக விஷயங்களைத் தந்து நிறைவு தந்தன. விமர்சனங்களால்தான் ஒரு இதழ் மீது வாசகனுக்கும், வாசகன் மீது இதழுக்கும் பூரண உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக உணரப்படுகிறது. உண்மையை வெளிக்கொணரவும், செயல்பாட்டை நிலைப்படுத்திக் கொள்ளவும், வெளிப்படையான விமர்சனங்கள் அவசியம் தேவை. அப்படிப்பட்ட (விமர்சனத்) தருணம் இப்போது கவிதாசரணுக்கு கிடைத்துவருவதில் மிகுந்த சந்தோஷம்.

வழி சுடுது என்று ஒதுங்கி நிற்காமல் பதம் பார்த்து முன்னேறுவது நிறைவு தரக் கூடிய விஷயம். இந்த சாதீய கூறுகள் எதை எடுத்துச் செல்ல இப்படி இழிவுத் தனமாய்ப் பயணம் செய்கிறது என்று புரியவில்லை. உங்கள் தலையங்கம் படித்த பின், எனக்கு

படிப்பகம்

www.padippakam.com



ஏற்பட்ட சில சம்பவங்களை இப்போது யதார்த்தமாக நினைக்க முடியாமல், மனசு தவிக்கிறது.

அஸ்ரப் முஸ்தாபா. செகந்திராபாத்.

● இதழின் சிகரமே கவிதைப் பக்கங்கள்தான். ஹெச். ஜி. ரகுலின் 'அலைகளின் ஆல்பம்' பாதி வழியில் கவிதையினூடே பயணம் செய்பவர்களை ஒரு உலுக்கு உலுக்கி விடுகிறது. அருமையாய் கவிதை தந்தவருக்கு பாராட்டுகள். அடுத்து கோ. இராஜேந்திரனின் இந்தியப் பெண் கேட்கிற கேள்விகளில்... விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட கவிதை அது. நிஷாவின் 'தடயம்' என்னவொரு யதார்த்தம்! மானுட உறவுகளை மறுபரிசீலனைக்குள்ளாக்கும் கவிதை. முடிவுகளில் முகம் காட்டும் புத்தகன். ரசிக வெறியின் குரல்வளையைப் பிடிக்கும் கௌசல்யா ரங்கநாதன்; என் தேவையாவது தீருமா என்ற யதார்த்த ஏக்கத்தில் நட. சிவகுமார். இன்னும் அகதி, கமலி, கரிகாலன்... அடேப்பா! கவிதைகளுக்கு விரிவாக இடம் அளித்திருக்கிறீர்கள். 'கவிதா'சரணல்லவா? அது தான் இப்படி கவிதையாய்ச் சரம் தொடுத்திருக்கிறீர்கள்.

வழக்கமான தனது இயல்பான நடையில், ஆரவாரமில்லாத அமைதியான நதியோட்டம் போல மூத்த இலக்கியர் வல்லிக்கண்ணனின் 'நினைவுத் தடங்கள்.'

கதைத் தளத்தில் 'கூடை' அருமையாகவே இருக்கிறது. தலித் இலக்கிய வரிசையில் 'கூடை' ஒரு பாதிப்பை ஏற்படுத்தும்.

பெங்களூர் கருத்தரங்குப் பாதிப்பு இன்னும் அகலவில்லையா? 'வந்து கொண்டிருந்தான்' வரை—யைத்தான் குறிப்பிடுகிறேன். இலக்கிய சண்டியர்கள் என்று நினைக்கிற வேளையில் போர் இடிபாடுகளுக்கிடையில் எழுந்த பூவைப் போல், அது தரும் மகிழ்ச்சியைப்போல், நம்பிக்கையைப்போல், இறுதியில் கதிரேசன் வந்து "எப்படி நடந்துச்சு எல்லாம்" என்று கேட்கிறபோது மானுட உறவுகள் இன்னும் பொய்த்துவிடவில்லை என்ற நேயக் கருத்தை அழகாக, போர்க்களத்துப் பூவைப்போல் (தலைப்புக்குரியவர் மன்னிக்கவும்) அருமையாக இயங்கியிருக்கிறார் இரா. நடராசன். வாழ்த்துக்கள் நண்பரே!

மா. அரங்கநாதன் தொடர் மிகவும் பயனுள்ளவை. சரியான திசையில் மிகச் சரியாய் சிறகு விரிக்கிறார். ஜெயந்தன் அவர்களின் தொடருக்கான முன்னுரை... இடி இடித்து விட்டது. தொடருமாவென தொடர்ந்து பார்க்கலாம். உங்களோடிணைந்து நானும் எதிர்பார்க்கிறேன்.

பாட்டாளி, திருச்சி.

**கடிதங்கள். கடிதங்கள். கடிதங்கள்.**

படிப்பகம்

www.padippakam.com

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.


# கவிதாசரண்

மலர் மூன்று | செப்டம்பர், 1994 | இதழ் 8 & 9


## ஆல் போல் விழுதூன்றி, அருகு போல் வேரோடி,
# நம்மை ஆளுகின்ற வைதிகம்.

**(தி. க. சி. யின் இரு கடிதங்கள்.)**

அன்பு மிக்க சகோதரர் அவர்களுக்கு, வணக்கம்.

ஜூலை - ஆகஸ்ட் 'கவிதாசரண்' நேற்று மாலை வந்தது. கடிதங்கள், 'மீண்டும் என் தலையங்கம்', வ. க. கட்டுரை ஆகியவற்றை மட்டும் உடனே படித்தேன்.

வ. க. வின் அரிய தொடரைப் போலவே ஜெயந்தன் தொடர் ஒன்றும் தொடங்கவிருப்பது குறித்து மகிழ்ச்சி. அந்தச் சாதனையாளரின் பகுத்தறிவும், மனித நேயமும், தோழமையும் செறிந்த கருத்துக்களை வரவேற்கிறேன். தமிழ் நாடகத்துறை வளர்ச்சிக்கு அவர் உதவ முடியும்.

கவிஞர் தமிழன்பன் கட்டுரைகளும் 'கவிதாசரணு'க்குத் தேவை. குறிப்பாக, லத்தீன் அமெரிக்கக் கவிதைகள் பற்றிய அவரது ஆழ்ந்தகன்ற கருத்துக்கள், 'கவிதாசரண்' படைப்பாளிகளுக்கும் வாசகர்களுக்கும் விருந்தாக விளங்கும் என்பது உறுதி.

'சேரிடம்', 'நெஞ்சு பொறுக்குதிலையே' என்னும் பகுதிகளும் நன்று.

என் கடிதத்தை வெளியிட்டு, ஒரு குறிப்பு எழுதியிருப்பதற்கு நன்றி. "தி. க. சி. அவர்கள் தம் அரசியல் வைதிகத்தோடு அருட்செல்வருக்கு முதலாளித்துவ, இந்துத்துவ போன்ற பதங்களைப் பூட்டி ஆயிரம் குறை காணலாம்," என்று எழுதியிருக்கிறீர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



'வைதிகம்' என்ற சொல்லை, என் விஷயத்தில் நீங்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை என்று தோன்றுகிறது. எந்தப் பொருளில் தாங்கள் பயன்படுத்துகிறீர்கள் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா? அருள் கூர்ந்து விளக்குக.

ஏறத்தாழ 50 ஆண்டுகளாக நான் மார்க்சியம்-லெனினியம் என்னும் பொதுமை அறத்தை விழைபவன்; உலகெங்கணும் சமூக நீதியையும், சமூக முன்னேற்றத்தையும் விரும்புகிறவன். நான் விரும்பும் மார்க்சிய - லெனினியம், இந்திய வரலாற்றுச் சூழ்நிலைக்கும் மரபுகளுக்கும் ஏற்ப, மேன் மேலும் வளர்க்கப்பட வேண்டும்; செழுமைப் படுத்தப் பெற வேண்டும் என்றும், இதற்காகப் பொது மக்கள் நலம் பேணும் அனைத்துச் சக்திகளும் அணி திரட்டப்பட வேண்டும் என்றும், நெடுங்காலமாக வலியுறுத்தி வருபவன். தமிழ்க் கலையும் இலக்கியமும், பாரதி - பாரதிதாசன் - வ.ரா. - புதுமைப் பித்தன் பாதையில் முன்னேற வேண்டும் என்னும் குறிக்கோள் கொண்டவன். இவையெல்லாம் எப்படி 'வைதிகம்'' ஆகும் என்று என் சிற்றறிவுக்கு எட்டவில்லை. எனது கொள்கைப் பிடிப்பையும் மனித நேயத்தையும், புரட்சிகர சமுதாய அமைப்பின்பாலுள்ள வேட்கையையும், 'வைதிகம்' என்று தாங்கள் வரையறுத்தால், தாங்கள் எனக்குப் பெரும் அநீதி இழைக்கிறீர்கள் என்றே சொல்ல வேண்டும். பொது மக்கள் நலம் விரும்பும் கொள்கைப் பிடிப்புக்குத் தாங்கள் 'வைதிகம்' என்று பட்டம் சூட்டுவது மிக வருந்தத்தக்கது.

பின் குறிப்பு: 'அருட்செல்வர்' மகாலிங்கம் அவர்களின் அரசியல், காந்தி மற்றும் வள்ளலார் வழியிலிருந்து தடம் புரண்டு தடுமாறி விட்டது என்பதில் ஐயமில்லை; தமது தவறுகளை அவர் உணர்ந்து திருந்துவாராயின், மிக நல்லது. அவரது தமிழ்ப் பற்றுக்கு என் உளமார்ந்த பாராட்டுகள்; வாழ்த்துகள்.

★

வைதிகம் என்ற சொல்லை நீங்கள் சகட்டு மேனிக்குப் பயன்படுத்துகிறீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் நினைப்பது போல் நான் Orthodax Marxist அல்ல; Creative Marxist; இதை விளக்குவதே என் சென்ற கடிதத்தின் நோக்கம். மார்க்சியம் - லெனினியம் என்பது ஒரு வளரும் விஞ்ஞானம்; அந்த அந்த நாட்டுக்கு, காலத்திற்கு ஏற்றவாறு, சமுதாயச் சூழலுக்கு ஏற்றவாறு அது வளர்க்கப்பட வேண்டும்; செழுமைப் படுத்தப் பெற வேண்டும் என்பதே 40 ஆண்டுகளுக்கு மேலாக என் கொள்கை; நடைமுறை. அதனால்தான் கவிதாசரண், முன்றில் மற்றும் பல ஏடுகளுடன் என்னால் ஒத்துழைக்க முடிகிறது. இல்லாவிடில் 'தாமரை' 'செம்மல'ருடன் என் உறவுகள் நின்றிருக்கும். வ. க. அவர்கள் கிராம ஊழியன்' ஆசிரியராக இருந்த காலம் முதல் (அதாவது 1945 தொடக்கம்) இதுவே என் நடைமுறை. பழமைக்கும் மூடப் பழமைக்கும் வேற்றுமையுண்டு; 'மூடப்பழமை'யை ஒழிக்க வேண்டும். ஆக்க

படிப்பகம்

www.padippakam.com



பூர்வமான பழமையை (Tradition) வளர்க்க வேண்டும். அதில் வேர் ஊன்றிப் புதுமையை மேன்மேலும் வளர்க்க வேண்டும். இதில் நீங்களும் நானும் இடையறாது ஈடுபடுவோம். 'கவிதாசரண்' வளர்க, வெல்க!

என்றும் அன்புடன்,

**தி. க. சி.**

**என் பதில்:**

அன்புமிக்க சகோதரர் அவர்களுக்கு,

வணக்கம். பிரசுரத்திற்கென்று குறித்து, ஒன்றுக்கு இரண்டு கடிதங்கள் எழுதி, 'வைதிகத்தை' எந்தப் பொருளில் பயன் படுத்துகிறேன் என்று விளக்கும்படி தாங்கள் கட்டளையிட்டபடியால், தவிர்க்க முடியாமல் இதை என் தலையாய பணியாகக் கொள்ளும் படியாயிற்று.

இப்போதெல்லாம் தங்களுக்கு இதுபோன்ற விவாதங்களும் சர்ச்சைகளும், உற்சாகமும் புத்துணர்ச்சியும் அளிக்கின்றன எனத் தோன்றுகிறது. தங்கள் மகிழ்ச்சியே எங்களின் வேட்கையும் வேண்டுதலும்.

'வைதிகம்' எனும் என் ஒற்றைச் சொல், தங்களைத் தாங்களே பரிசீலித்துக் கொள்ளவும், தங்கள் 50 ஆண்டுகால இயங்கு தளத்தின் அடியூற்றை மீட்டுக் காட்டவும் பயன் பட்டிருப்பது ஒரு வகையில் கிடைத்தற்கரிய பேறுதான்.

'அரசியல் வைதிகம்' என்று ஒர்முனைக் குறிப்பீடாய் நான் பயன்படுத்திய சொல்லைத் தங்களின் இயக்கம் பற்றிய பரந்த தளத்துக்கு நகர்த்திக் கொண்டு போய், என்னைச் சிற்றறிவாளனாக்கிப் பார்க்க ('என் சிற்றறிவுக்கு எட்டவில்லை' என்று சொல்லிக் கொள்ளும் மரபுப்படி) முனையும் முயற்சியை என்னால் ரசிக்க முடியும். ஆனால் என் நியாயங்கள் அதனாலெல்லாம் பதுங்கிக் கொள்ள வாய்ப்பில்லை.

'வைதிகம்' என்பது மனித நாவில் கருக்கழிந்து, கறுத்துக் களிம்பேறிப் போனவொரு தீட்டுச்சொல் போலாகிவிட்டது. வைதிகம் என்றால் என்ன என்பதைவிட, வைதிகத்தின் ஊற்றுக்கண் ஆதிக்க மனோபாவம் என்பதும், அந்த ஆதிக்க மனோபாவத்தின் வயது மனிதனது அச்சத்தின் வயது என்பதும் எனக்குக் கொஞ்சம் ·· ளங்கும்படியாய் இருக்கிறது. ஆதிக்க மனோபாவம்தான் நமது ஆசைக் கேற்றபடி மதம் என்றும், இனம் என்றும், மொழி என்றும் அரசியல், கலை, இலக்கியம், ஆசாரம், மரபு, பாரம்பரியம், பண்பாடு என்றெல்லாம் போர்வை போர்த்திக் கொள்கிறது. உண்மையில் இவையெல்லாம் வைதிகம் அணிந்துகொள்ளும் சட்டைகள் தான் என்றும் புரிகிறது. சட்டைகள் மாறும்; சித்தாந்தச் சட்டைகளும்தான். மாறாது, மாறக் கூடாது என்றால், அது சிலையில் செதுக்கிய சட்டை மட்டும்தான். செத்த சித்தாந்தத்தின் குறியீடு அது. இயக்கம் இருந்தால் மாற்றம் இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



சில சமயம் சித்தாந்தமே வைதிகமாய்ப் பாவிக்கப்படுவதுண்டு தானே. மார்க்சியம்கூட அப்படித்தான் ஆனது; ஆக்கப்பட்டது ஆதிக்கவாதிகளால். அது மார்க்சிய சட்டை என்பதாலேயே நமது அனுதாபத்தையும் அபிமானத்தையும் பெற்றுவிடுமானால் அதைத் தான் 'அரசியல் வைதிகம்' என்று அழைக்கத் தோன்றுகிறது.

வாழ்க்கையின் எல்லாத் தடங்களிலும் வைதிகத்தின் சுவடுகள் பதிந்துள்ளன. எல்லாத் தளங்களிலும் அதன் படிமங்கள் வளர்ந் துள்ளன, எனில் வைதிகத்தைச் சகட்டு மேனிக்குப் பயன்படுத்தி னாலும் பாவமாகிவிடாது. ஆயினும் நான் அப்படிப் பயன்படுத்த இன்னும் முனையவில்லை.

"இந்த நெம்புக்கோலை ஊன்ற ஒரு இடந் தாருங்கள். இந்த உலகத்தைப் புரட்டிக் காட்டுகிறேன்," என்றான் நியூட்டன். ஒரு விஞ்ஞானியின் அற்புதமான கவிதை இது. பறக்கும் உலகத்தை இருப்பில் நிறுத்திப் பார்க்கும் போதுதானே புரட்டும் சிந்தனை வருகிறது? சொல்லப்போனால் 'இருப்பு' என்று கொள்வதெல்லாம் தூங்கும் பம்பரம் போலான உயிர்ப்புதான் அல்லவா? பிசிறில்லாத நியதியில் இயக்கமே ஓர் இருப்பாகிறது. இதில் நெம்பு கோலின் ஊன்று தளமே வைதிகம் எனில் அது ஓர் அனுமானக் கோட்டை.

வைதிகம் எனக்கு விளங்கியது, இது மாதிரிதான். தாங்கள் விளங்கி வைத்திருப்பது அதிகமாயிருக்குமென்பதில் ஒரு நிம்மதி.

தாங்கள் நல்ல கம்யூனிஸ்ட் என்பதோடு, கம்யூனிஸ்ட்டுகள் தவறுகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என நம்புகிறீர்கள் என்பதென் புரிதல். இதனைத் தாங்கள் சொற்களால் கட்டமைத்து, செவிப் புலனில் சோதித்துப் பார்த்திருக்காமல் போகலாம். ஆனால் தங்கள் அடிமனத்தின் படிமம் அதுதான் என்பதில் எனக்கொன்றும் ஐய மில்லை. இந்தச் சித்தாந்த நெகிழ்வின்மைதான் தங்களின் அரசி யல் வைதிகமாக எனக்குப் படுகிறது.

நான் அந்தச் சொல்லைப் பயன்படுத்த நேர்ந்தது ஒன்றும் தற்செயலல்ல. தங்களின் விமர்சனமே அதற்கான காரணம்.

மேற்கு வங்க கம்யூனிஸ்ட் கட்சி நாளேட்டில் சொந்த சாதி யில் பெண் கேட்டு அந்தக் கட்சித் தலைவரே விளம்பரம் செய்கி றார் என்றால், இதைத் தங்களால் மட்டுமே சகித்துக் கொள்ள முடியும். 'கணசக்தி விளம்பரத்தை நான் பார்க்கவில்லை' என்று சொன்ன தாங்கள், 'அப்படிச் செய்திருந்தால் அது தப்புதான்' என்று ஒப்புக் கொள்ளத் தங்கள் அரசியல் வைதிகம் இடம் தர வில்லையே. வணிகப் பத்திரிகைகள் கூட சமூக நலம் கருதி, மது, புகை விளம்பரங்களைத் தவிர்க்கின்றன. ஆனால் சாதி பேத மற்ற சமத்துவ சமுதாயத்தைப் படைக்கச் சங்கல்பம் பூண்ட ஒரு கட்சி, விளம்பரப் போர்வையில் வெளிப்படையாக சாதியை வளர்க் கிறது என்றால், ஒரு சந்தைப் பத்திரிகைக்கும் இதற்கும் என்ன வேறுபாடு? இது வியாபாரம்தான் என்று இயங்கிய எஸ். ஏ. பி.

படிப்பகம்

www.padippakam.com



யின் ஜர்னலிசத்தோடு இதனை ஒப்பிடுவதில் என்ன தவறு? இது தங்களுக்குப் புரியாமல் போகாது.

ஆனால் தாங்களோ, தடாலடியாக பொள்ளாச்சி மகாலிங்கத்தின் வணிக நிறுவன விளம்பரத்தைப் போடும் என்னை இந்துத்துவ, முதாளித்துவ ஆதரவாளர் என்று முடிவுக்கு வருவது எத்தனை அபத்தமோ அத்தனை அபத்தம் நான் விமர்சித்தது என்றொரு தர்க்கத்தை முன் வைத்தீர்கள். 'இந்து மதம் வாழ்க! முதலாளித்துவம் ஓங்குக!' என்பதான விளம்பரமா போட்டேன்? அப்படியொரு விளம்பரத்தைக் காசு வரும் என்றால் நான் போடலாம் தானா? போட்டுவிட்டு இந்துத்துவம் பற்றியும் முதலாளித்துவம் பற்றியும் நான் விமர்சிக்கலாமா? சொல்லுங்கள்.

எனக்கு நானே காறித் துப்பிக்கொள்ளும் ஈனத்தனம் எனக்கு வேண்டாம், சகோதரரே. அதைச் சித்தாந்திகளும் கட்சி நடத்துகிறவர்களுமே செய்து கொள்ளட்டும். அர்த்த சாஸ்திரத்தில் அவர்களுக்கேதேனும் அரசியல் ஆதாரம் கிடைக்கும். என் போன்ற தனிமனிதனுக்கு இரட்டை முகமும் ஈனப் பிழைப்பும் வேண்டாம்.

''தமிழ்க் கலாச்சாரத்தை உருவாக்கியதில், வேதங்களுக்கும் ஆரியர்களுக்கும் பங்குண்டு என்பதுதான் உண்மை'' என ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட் சொல்கிறாரே, சரிதானா?'' என்று கேட்டிருந்தேன். தங்கள் அரசியல் வைதிகம் அதைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டதே. அப்படியே சொல்லியிருந்தாலும், ''அதை நான் படிக்கவில்லை,'' என்பீர்கள். இக் 'கண்டு கொள்ளாமை', வரலாறு பூர்வமாகத் தாங்கள் பிறந்த இனத்துக்குச் செய்யும் துரோகம் இல்லையா? தங்கள் 50 ஆண்டு பொது வாழ்க்கை அர்த்தம் உள்ளதுதான் என்று நிரூபிக்க வேண்டாமா?

''இந்தியாவில் 'ஜாதிப் போராட்டம், என்பது 'வர்க்கப் போராட்டத்தை' இரண்டாம் பட்சமாக்கிவிட்டது. காரணம், கம்யூனிசம் இந்த நாட்டில் தன் வேரை ஊன்றியபோதே, அதன் தலைமையை ஆக்ரமித்துக் கொண்டவர்கள் பிராமணர்கள்,'' என்பதாக எழுதியிருந்தேன்.

அதற்குத் தாங்கள் வைத்த விமர்சனம் என்ன?

'ஹிண்டு' பங்களாக்களிலும் டி.வி.எஸ். மாளிகைகளிலும் தங்கி இளைப்பாறத் தெரிந்த நம் கம்யூனிஸ்ட் தலைவர்கள்தாம இந்நாட்டின் புரவலர்கள்; பொள்ளாச்சி மகாலிங்கம் போன்ற முதலாளிகள் சமூகப் பிரஷ்டம் செய்யப்பட வேண்டியவர்கள் என்பதா தங்கள் கருத்து? பொள்ளாச்சியார் எனக்கொன்றும் வேண்டப்பட்டவரல்லர். என் தமிழை மதித்து அவர் செய்த உதவிக்கு, அது நின்றுபோன பின்னும் நன்றி சொல்ல மறவாத என் ஓர்மையைத் தாங்கள் கவனம் கொண்டிருந்தால் மகிழ்ந்திருப்பேன்.

'தங்கள் சொத்தையும் வர்க்கத்தையும் காத்துக் கொள்ளவே கம்யூனிஸ்ட்டுகளாக, நக்ஸலைட் இயக்கம் வரை ஊடுருவிய பூர்ஷ்வாக்கள் இந்தியாவில் நிறையவே உண்டு' என்று நான் சொன்னால், தங்கள் அரசியல் ஒழுக்கம் அதை மறுக்குமா, புறக்கணிக்

படிப்பகம்

www.padippakam.com



குமா? 'இது மாதிரியான ஆட்கள் எல்லாக் கட்சிகளிலும் இரண்டொருவர் இருக்கத்தான் செய்வார்கள்' என்று சமாதானம் கூறப் புகுமா? இந்த இரண்டொரு இரட்டைமுகக்காரர்களால்தான் உலகெங்கும் பொதுவுடைமைத் தத்துவம் மலினப்பட்டுப் போயிற்று என்றால் அதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளுதல் சரிதானா? கம்யூனிஸ்ட்டுகள் மற்றவர்களைச் சகித்துக் கொள்வதுபோய், மற்றவர்கள் கம்யூனிஸ்ட்டுகளைச் சகித்துக் கொள்ளும் கட்டத்திற்கு வந்து விட்டோம். கம்யூனிஸ்ட் அகராதியிலிருந்து 'பூர்ஷ்வா' என்ற சொல் உதிர்ந்து போய்விட்டது. உதிர்ந்தவை இன்னும் எவ்வளவோ. உலகத்தின் முகத்தையே மாற்ற வந்த மகத்தான இயக்கம், இன்று வயிற்றுப் பிழைப்பாகிப் போன அரசியல் இயக்கங்களோடு பத்தோடு பதினொன்றாய், நகத்தின் அழுக்கை நோண்டிக் கொண்டிருக்கிற நிலை வந்தாயிற்று.

கம்யூனிஸ்ட் கட்சி மேடைகளில் அமர்ந்திருக்கும் தலைவர்கள் ஒருவரொடொருவர் "இவர் யார் தெரியுமா? டெபுடி கலெக்டர். சீக்கிரம் கலெக்டராயிடுவார். அவர் நம்ம ஐ.பி.எஸ்.ஸோடா பிள்ளை. ஐ.பி.எஸ். டிபார்ட்மெண்ட்ல புலி. அதோ அந்த ஆள் இருக்கானே பாவம். செங்கொடிதான் அவனுக்கு இன்னமும்," என்று பேசிக் கொள்ளும் துதி பாடும் வைதிகர்களாய்த்தான் இருக்கிறார்கள். இந்தக் கண்ணறாவியை எனக்குக் காட்டியவர் ஜெயந்தன். ஒன்று மட்டும் உண்மை: தொண்டர்களின் அர்ப்பணிப்பு உச்சம்தான்.

என் அருமை சகோதரரே!

நான் சரியான சொல்லைச் சரியான இடத்தில்தான் பயன்படுத்தினேன். அது தங்கள் வாழ்வையும், தொண்டையும், கொள்கைப்பிடிப்பையும் எந்த விதத்திலும் மாசுபடுத்திவிடாது; மாறாக வேறொரு நியாயமான அல்லது உண்மையான கோணத்திலிருந்து பார்க்க வைக்கும் என்பதை உணர்ந்தே பயன் படுத்தினேன்.

இதை ஏன் தாங்கள் கேள்விக்குள்ளாக்க வேண்டும்?

தங்களைப் பற்றித் தாங்கள் அறிந்த நண்பர் மூலம் முதன் முதலாக நான் அறிய நேர்ந்தது, "குளவியானது ஒரு புழுவைக் கொட்டிக் கொட்டியே குளவியாக்கிவிடுமாம். தி. க. சி. யும் ஒருவனைக் கொட்டிக் கொட்டியே தன் பாதைக்குக் கொண்டுவந்து விடுவார்," என்னும் மதிப்பீட்டின் மூலம்தான். ஒரு வாக்கியம் அதனை எதிர் கொள்கின்றவனின் எதிர்பார்ப்புக் கேற்பதானே பொருள் பெறும்? நான் இம் மதிப்பீட்டைத் தங்கள் கொள்கைப் பிடிப்புக்கான விம்மிதமான விஷயமாகவே எடுத்துக்கொண்டேன்.

தங்களால் கம்யூனிஸ்ட் ஆனவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மார்க்ஸ் என்றும் லெனின் என்றும் கார்க்கி என்றும் பெயர் வைத்து, அவர்களின் ஐக்கியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் தங்கள் பிள்ளைகளின் பெயர்களோ கணபதி, கல்யாணசுந்தரம்தான். சொந்த வாழ்க்கையின் உள் கட்டுமானங்களில் தங்கள் சித்தாந்தத்தைக் கொண்டு செலுத்தி, எந்தச் சோதனையையும் செய்து பார்க்கத் தாங்கள் முயன்றதே இல்லை. காரணம், சித்

படிப்பகம்

www.padippakam.com



தாந்தம் தங்கள் சொந்த வாழ்க்கையையே மறந்துவிடச் செய்து வீடு தங்காமல் சுற்ற வைத்தது. நல்லவேளை வீட்டுப் பெண்கள், தங்கள் பிள்ளைகளுக்கு நம் மரபு சார்ந்த பெயர்களிட்டு, நன் மக்களாக, தந்தையை விடவும் அழகுணர்ச்சி உள்ளவர்களாக வளர்த்துள்ளார்கள் என்று நானே விடை தேடிக் கொண்டதுண்டு.

பொது வாழ்வில் தங்கள் கொள்கை பிடிக்காத இலக்கியவாதிகள், 'தி. க. சி. உருப்படியாகச் செய்த காரியம் வண்ணதாசனைப் பெற்றுக் கொடுத்ததுதான்' என்று சொல்வதுண்டு. ஒரு நல்ல தந்தை என்று பெயர் வாங்குவது எத்தனை மகத்தான காரியம்! அந்தப் பெருமையையும் சாதித்திருக்கிறீர்கள். "வல்லிக்கண்ணனின் தாசன் என்று தொனிக்கும்படி வண்ணதாசன் என்று பெயர் வைத்துக் கொண்டேன்" என்று அவர் சொன்னபோது, தன் தந்தையின் பால்ய கால நண்பரை அவர் எத்தனை அற்புதமாய்க் கௌரவித்திருக்கிறார் என்பது உண்மையிலேயே தாங்கள் உருப்படியாகச் செய்ததெல்லாம் வண்ணதாசனைத் திரட்டியதுதானோ என்று சந்தோஷம் கொள்ள வைக்கிறது.

ஆனாலும் ஒன்று சொல்லியே ஆகவேண்டும்.

எப்போதும் தலைவனைவிட தொண்டனே ஒருமையுணர்வில் உன்னதம் தொட்டவன். தலைவனுக்குத் தன் சித்தாந்தத்தின் மேல் சில கேள்விகள் இருக்கலாம். தொண்டனுக்கு தலைவன் மேலான நம்பிக்கை மட்டுமே இருக்கும். இறைவனைவிடவும் அவன் அடியவன் மகோன்னதமானவன். இறைவனுக்கு இருப்பே சந்தேகம். அடியவனுக்கு அவன் பெயரே சங்கீதம். இல்லாமலா ஒரு பித்தன், இறைவனைத் தொழும் தொண்டனுக்கு தொழும்பனாயிருக்கச் சம்மதித்தான்!

கதா காலட்சேபம் செய்கிறவர்களின் பிரவசனங்களைக் கேட்டு மேன்மையுற்ற பாமரர்கள் பலர் இருப்பார்கள். ஆனால் அவர்கள் மட்டும் அப்படியே... வேஷங்கள் கட்டிய ஆசார வைதிகர்களாய்...

இந்தச் சமுதாயத்தில் தலைவர்கள் யாவரும் இந்தப் பிரவசனக்காரர்கள் போலத்தான் அசலான வைதிகர்களாய்... ஊன்றி ஊன்றிப் பார்த்தாலும் ஒரு வைதிகன் உச்சபட்சமாய் எவ்வளவு நல்லவனாய் இருக்க முடியும் என்பதற்குச் சிறந்த சான்று காந்தியடிகளை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள், சொல்லுங்கள்.

சித்தாந்த ரீதியாகத் தாங்கள் ஓர் அரசியல் வைதிகர்தாம் எனினும், வாழ்வியல் பார்வையில் மரபு சார்ந்த பழமையில் வேரூன்றி, புதுமை விழையும் பெற்றியாளர் என்பது இதந்தரும் விஷயம்தான்.

★

சமீபத்திய நிகழ்வாக நான் சங்கடமாய் உணர்ந்த ஒன்றையும் தங்களோடு பகிர்ந்துகொள்ள விழைகிறேன். 'சாரதா' ஜூலை 1994 இதழில் வந்த ச. தமிழ்ச்செல்வன் நேர் காணல் பற்றியதிது.

"பேசியது போதும்; சீரியஸா படைப்புகளை முன் வைங்கப்பா!" என்று தமிழ்ச்செல்வன் கூறியிருப்பவை மிகவும் பொருள்

படிப்பகம்

www.padippakam.com



பொதிந்த சொற்கள் என்று பாராட்டியிருக்கிறீர்கள். பாராட்டுக்குரிய கட்டளைதான். ஆனால் இந்தக் கடைசி வாக்கியத்துக்கு முன்னால் கடைசி இரண்டு கேள்விகளுக்கான அவர் பதிலும் தொனியும் தங்களை ஒன்றும் பாதிக்கவில்லையா?......

பாதிக்கவே இல்லையா? பாதித்திருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். குறிப்பாக "தலித்துகள்லேயே அப்பர் மிடில் கிளாஸ், லட்சாதிபதிகள், கோடீசுவரன் கூட இருக்காங்க. அவங்களைப்பத்தி எழுதினா அது என்ன இலக்கியம்! அதையும் தலித் இலக்கியம்னா சொல்றது?... செருப்புக் கடையில் அநேகமா விதிவிலக்கு இல்லாம எல்லாத் தொழில்கள்லேயும் பிராமணர்கள் வேலை செய்யறாங்க இப்ப. அந்த பிராமணன் தலித்தா? பிராமணனா? தலித் இனத்துக்காரங்களே இன்னும் நெறைய படைப்புகளைத் தரட்டுமே. யார் தடுத்துக்கிட்டு இருக்காங்க?" என்னும் சொல்லாடல்கள் தங்களிடம் எந்த எதிர்வினையும் புரியவில்லையா?

ஆச்சரியம்தான். பொருள் பொதிந்த சொற்களைத் தாங்கள் தேர்ந்தெடுத்துச் சொல்லியதால் இதைக் கேட்கும்படியாயிற்று.

சாரதா அடுத்த இதழிலும் அவர் பேட்டி தொடர்கிறது. அதில் தலித்துகளுக்காக கொஞ்சம் கசிகிறாராம். "தலித் சுதந்திரப் போராட்ட வீரர்களைப்பற்றி முதல்ல புத்தகம் கொண்டு வாங்கய்யா," என்று வருத்தத்தோடும் வேகத்தோடும் கேட்கிறாராம்.

இதுபற்றிய முயற்சியில் 'க்ரிடிகலா' படிக்க முடியாதவர், இந்த வேலை தனக்கில்லை என்பதுபோல் மகா மேதைமையோடு பிறருக்குப் புத்தி புகட்டுகிறார்.

படைப்பாளிக்குரிய ஒரு முதிர்ச்சியோ பொறுப்போ இல்லாமல் தலித்துகள் பற்றி இவர் எழுப்பும் வினாக்களுக்குத் தங்களிடம் விளக்கம் கிடையாதா?

ஒரு தலித் கோடீஸ்சுவரனானதும் சமூகத்தில் ஒடுக்கப்படாதவனாகவும் ஒதுக்கப்படாதவனாகவும் ஆகிவிடுகிறானா? இந்த நாட்டின் துணைப் பிரதமராய் இருந்த ஜெகஜீவன்ராம் என்னும் தலித் தொட்டுவிட்டார் என்பதற்காக, கங்கை நீர் கொண்டு கமலபதி திரிபாதி ஒரு கல்லைக் கழுவியெடுத்தாரே. ஜகஜீவன்ராம் தலித்தில்லை என்கலாமா? செருப்புக் கடையில் வேலை பார்க்கிற பிராமணன் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டுவிட்டானா? தலித்தாகிவிட்டானா? தலித்தை இவர் எங்கே தேடுகிறார்? வேலையில்லாப் பிரச்சினை தலித்துகளுக்கு இல்லையா?

இது என்ன வகை மூர்க்கத்தின் பாமரப் போர்வை போர்த்திய வெளிப்பாடு? இங்கு விஷயங்கூட முக்கியமில்லை. கேள்விகள். கேள்விகள் பிறந்த மனக்கீறல் முக்கியமாகிறது.

தலித்துகளில் இலட்சாதிபதி, கோடீஸ்வரன் கூட இருக்கிறார்கள் என்று சொல்லத் தோன்றியது எதனால்? இருக்கிறார்களா? எத்தனை பேர்? தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள், நாடோடிகள், பழங்குடிகள் ஆகிய தலித் மக்கள் 25 சதவீதத்திற்கு மேல் தேறுவர் எனில் அவர்களில் எத்தனை பேர் கோடீஸ்

படிப்பகம்

www.padippakam.com



வரன்கள்? அந்தக் கோடிகளைக் கொடுத்து; சாதிக் கொடுமையையும் ஒடுக்குமுறையையும் முறியடித்தவர்கள் எத்தனைபேர்.

தலித்துகளோடு மோதிக் கொள்கிறவர்கள் யார் என்று பார்த்தால் நாயக்கர், தேவர், மறவர், கள்ளர், சேர்வை, சாணார் இவர் தாம். இவர்களும் தலித்துகளைப் போல ஒடுங்கியவர்கள்தாம். தலித்துகளின் எல்லைக் கோட்டைத் தொட்டுக்கொண்டிருப்பவர்கள் ஆனால் சாதி மேன்மை இவர்களைத் தலித்துகளாய் அடையாளப் படுத்திக் கொள்ள விடாது. இவர்களுக்கு மேம்பட்டவர்கள் இந்த மோதலில் எப்போதும் பார்வையாளர்கள்தாம்.

அடிமைகள் இருவர் அடித்துக் கொண்டு சாவதை வேடிக்கை பார்க்கும் பிரபுக்கள் அவர்கள். இவர்கள் மகிழ்ச்சிதான் அடிமைகளின் பாக்கியம்.

ச. தமிழ்ச் செல்வனின் பிரகடனம் இன்னொரு அடிமையை சண்டைக்கழைக்கும் பிரகடனமாகக் கொள்ளலாமா? இது பற்றி யோசிக்காதவர்கள் பார்வையாளராய் இருக்கலாம்தானே?

என்னிலும் தாழ்த்தப்பட்டவன் மேல் எனக்கு இரக்கமில்லை எனில், என்னைவிட உசத்தியாகப் பேசப்படுகிறவனோடு சமத்துவம் கோர எனக்கென்ன தகுதி இருக்கிறது?

இன்று ஐரோப்பிய நாடுகளில் Racism, Facism, Nazism மூன்றும் புத்துயிர் பெற்று அரசியல் மேடை போட்டுவிட்டன. இந்தியா இந்த மூன்றும் ரசாயனக் கலவையான பார்ப்னியம் மட்டும்தான். பார்ப்பனியம் என்பது ஏதோ பார்ப்பனர்கள் சொத்து அல்ல. இருந்தது ஒரு காலத்தில். இன்று அவர்களைவிடக் கொம்பர்கள் எல்லாம் அதை ஸ்வீகரித்துக் கொண்டாயிற்று. 'இது நாங்கள் ஒன்றும் ஸ்வீகரித்துக் கொண்டதல்ல. மூலத்தில் எங்களுடையது தானாக்கும்' என, தென்னாட்டுப்பிள்ளைமார்களும் யாழ்ப்பானத்து வெள்ளாளரும் உரிமை கோருவதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு.

இலக்கியத் தடத்தில் பிராமண வைதிகத்தை உடைத்துக் கொண்டு வெளியே வர ஒரு வழியைக் காட்டினான் புதுமைப் பித்தன். ஆனால் அவரைப் பின்பற்றுகிறவர்கள் அவர் காட்டிய பாதையையே அடைத்து, திறந்தவெளி மைதானமாகக்கூட விடாமல் சுற்றுச்சுவர் வைத்த உள்ளரங்காக மாற்றுகிறார்களே.

'நான் இந்துவாயிருக்கச் சகியேன். ஏனெனில் நான் சுத்த சைவன். நான் பிராமண வைதிகத்தை வெறுக்கிறேன். ஏனெனில் என் சைவத்திற்கான வைதிகத்தை அடையாளம் கண்டு கொண்டேன்' — எனில் இது என் மீட்சியா வீழ்ச்சியா?

ஒரு பிரவசனக்காரன் சொன்னவை இம்மூன்று வாக்கியங்கள்:

1. தெய்வம் மனிதனுக்குச் சொன்னது கீதை.
2. மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்.
3. மனிதன் தெய்வத்துக்குச் சொன்னது திருவாசகம்.

**தொடர்ச்சி 16ஆம் பக்கம்.**

படிப்பகம்

www.padippakam.com

# நெஞ்சு பொறுக்குதிலையே!

## செந்தமிழ் வெட்கிச் சிரிக்கிறது.

“உங்களில் பலருக்கு நாங்களாகவே விரும்பித்தான் இதழ் அனுப்புகிறோம், இலக்கியம் உங்களுக்குப் பிடித்த விஷயம் என்பதால். உங்களுக்கென்றில்லாவிடினும், உங்கள் வீட்டுப் பெண்கள்-பிள்ளைகளுக்கென்றாவது ‘குமுதம் - ஆனந்தவிகடன்’களைத் தவறாது வாங்கிக் கொண்டுதான் இருக்கிறீர்கள்”

ஏப்ரல், 1994 ‘கவிதாசரண்’ இதழின் முதல் பக்கத்தில் இப்படி சொல்லியிருந்தோம். சற்றுக் கூடுதலோ என்று நமக்கே பட்டதுதான். அந்த வாரத்தில் பார்க்க நேர்ந்தபோது, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவரும் வழக்குரைஞருமான நண்பர் செந்தில்நாதன் மிகவும் இதமாக, “ரத்த காயப் படுத்தி யிருக்கிறீர்கள்,” என்றார். என்னைக் காயப்படுத்துவது அவரது நோக்கமல்ல என்றாலும், எனக்குக் காயம் பட்டதாய் வருத்தம் மிகுந்தது. ‘ஒரு புத்திசாலியின் அபத்தமான உளறலாக இருக்கட்டுமே,’ என்று சொல்லாமல் விட்டேன்.

ஆனால் மறுநாள் திருச்சியிலிருந்து முருகேசன் என்னும் வாசகர், “இதை ஒவ்வொரு இதழிலும் வெளியிடுங்கள். சந்தாவுக்கான நினைவூட்டலாகவும் இலக்கியம் தேட வழிகாட்டலாகவும் இருக்கும்,” என்று எழுதினார். இது சற்று புரிதலைக் காட்டியது.

இப்போது நாம் அப்படிச் சொன்னது நியாயம்தான் என்று நிரூபணமாகியுள்ளது. மேலும் “உங்கள் வீட்டுப் பெண்கள் - பிள்ளைகளுக்கென்றாவது” எனச் சொன்னதை, “உங்கள் சுவைக்கென்றே” என மாற்றிக்கொண்டாலும் தப்பில்லை என்றே உறுதிப் படுத்தப்படுகிறது.

25-8-1994 குமுதம் பத்திரிகையின் வாசகர் கடிதம் பகுதியில் **சிறப்புக் கடிதம்** என மகுடமிட்டு ஒரு கடிதம் வெளியாகியுள்ளது. சாதாரணமாக கடிதங்களுக்கடியில் பேரும் ஊரும்தான் கொடுக்கப்பட்டிருக்கும். இந்தக் கடிதத்தின் சிறப்பு கருதி, எழுதியவர் பெயர், புனைபெயர், பதவி, முகவரி அனைத்தும் கொடுக்கப்பட்டுள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



கடிதம் இதுதான்:

ஒரு பக்கத்தில் வணிக நோக்கில் / விற்பனை நோக்கில் செய்திகள் அமைந்தாலும், முன்னர் என்றும் இல்லாத அளவுக்கு இலக்கியத் தரத்தையும் கூட்டியிருக்கிறீர்கள்.

டாக்டர் மா. ராமலிங்கம்
**( எழில் முதல்வன் )**
பேராசிரியர் & தமிழியல் துறைத் தலைவர்,
பாரதிதாசன் பல்கலைக் கழகம்,
திருச்சிராப்பள்ளி.

இது ஒரு வழக்கத்துக்கு மாறான கடிதம் என்பதால் 'சிறப்புக் கடிதம்' எனும் மகுடமிட்டு மகிழ்ந்திருக்கிறது குமுதம். இது மாதிரியான அங்கீகாரம் சுஜாதா சூட்டிக்கொள்ள விரும்பும் கிரீடமாயிருப்பதில் ஆச்சரியமில்லை. மெக்சிகோ சலவைக்காரி ஜோக்கை மூலதனமாக்கிக் குமுதத்தை வளைத்துப் பிடித்தவர், நிரோத் வியாபாரத்தில் இலக்கிய விசாரத்தையும் மூலை முடுக்குகளில் முடிந்து போட்டு வைப்பது எழில் முதல்வனைக் கவர்ந்திருக்கிறது.

'இந்தச் சிறப்பினை வழங்கக்கூடிய தகுதியும் திறமையும், பட்டமும் பதவியும், அறிவும் ஆற்றலும், தெளிவும் தேறலும், இன்ன பிற மேன்மைகளும் இந்த டாக்டருக்கு இல்லாமலா இருக்கும்? பல்கலைக் கழகத்தின் தமிழியல் துறைத் தலைவராயிற்றே!' என்பது குமுதத்தின் கணிப்பு.

இவருடைய சீரும் சிறப்பும் தமிழக எல்லைக்கப்பாலும் விரிந்து பரவியுள்ளது கூடுதல் சிறப்பு.

சில மாதங்களுக்கு முன் சாகித்திய அகாதமியின் தென் மண்டல உறுப்பினர் கூட்டம் பெங்களூரில் நடந்தது. டாக்டர் இராமலிங்கம் என்னும் நம் எழில்முதல்வன்தான் கன்வீனர். சிறிது காலத்துக்கு முன் காலமான A. K. இராமானுஜத்திற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டுள்ளது. A.K.இராமானுஜம் ஒரு கர்நாடக பிராமணர். தமிழ் கற்றுப் பட்டம் பெற்றவர். அமெரிக்காவில் தென்மொழிகளின் பேராசிரியராகப் பணியாற்றியவர். ஆங்கிலம், தமிழ், கன்னடம் மூன்றிலும் கவிஞர். அதற்கும் மேலாக சங்கப் பாடல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். இவருக்கு முன்னாலும் மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டிருப்பினும், இவர் மொழி ஈடுபாடும், அமெரிக்கப் பணியும், தொடர்பும் சங்கத் தமிழ் நூல்களைப் பரவலாக அறிய உதவின. இவருடைய மொழிபெயர்ப்பு சிற்சில குறைபாடுகளும் போதாமையும் (எ- டு: செஞ்சொல்: Red word என்பது போல) கொண்டிருந்தாலும் மொழி எளிமையில் அவர் பணி பாராட்டுக்குரியது.

படிப்பகம்

www.padippakam.com



அவருக்கான இரங்கல் கூட்டத்தில் சிற்பி பாலசுப்பிரமணியம், ஜெயகாந்தன், சா. கந்தசாமி ஆகிய தமிழக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். அதில் பேசிய டாக்டர் இராமலிங்கம், "சங்க இலக்கியத்தை விடவும் ராமானுஜன் மொழிபெயர்ப்பு உயர்வாக உள்ளது," என்று திருவாய் மலர்ந்துள்ளார். உடனே கூட்டத்தில் கேலிச் சிரிப்பும் சலசலப்பும். சுரந்த் அவரைப் பார்த்து, கிண்டலாக, "இதை நீங்கள் தமிழ் நாட்டில் கூறுவீர்களா?" என்று கேட்டிருக்கிறார்.

சிற்பி பாலசுப்பிரமணியம் குறுக்கிட்டு, "எழில்முதல்வன் உணர்ச்சி வயப்பட்டுச் சொல்கிறார். மூலம் முதன்மைதான். மொழிபெயர்ப்பு மொழிபெயர்ப்புதான்," என்று சொல்லவும், அகாதமி தலைவர் U. R. ஆனந்தமூர்த்தி ஜெயகாந்தனிடம், "என்ன ஜெயகாந்தன், உங்கள் ஆட்களுக்குள்ளேயே இவ்வளவு முரண்பாடு?" என்று கேட்டிருக்கிறார். ஜெயகாந்தன் சமாதானமாக, "இதெல்லாம் உணர்ச்சி மேலீட்டால் பேசும் பேச்சு. இதற்கொன்றும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம்," என்று முடித்து வைத்துள்ளார்.

இலக்கியம் பற்றி எழில்முதல்வனுக்கு இவ்வளவு தெளிவுண்டு என்பதறிய நாம் புளகாங்கிதமடைகிறோம்.

இந்தப் பேராசிரியர் நம் கவிதாசரண் இதழுக்கு நீண்ட கால வாசகர். இது அவருக்கும் தெரியும் என்பது இது அச்சாகும்போது தெரிந்துகொள்ள நேர்ந்தது.

---

13ஆம் பக்கத் தொடர்ச்சி -

தமிழ் நாட்டு மனிதர்களை இந்த மூன்று வாக்கியங்களிலேயே அடக்கிவிடலாம் என்றே படுகிறது.

முதல் வாக்கியத்தைச் சொல்லி அலுக்காதவன் பிராமணன்.

கடைசி இரு வாக்கியங்களையும் சொல்லி உவக்கிறவன் திராவிடப் பார்ப்பனன்.

மூன்று வாக்கியங்களையும் சகட்டு மேனிக்கு சொல்லி இரைகிறவன், உபதேச இரைச்சலுக்கு காது கொடுத்துப் பழகிய, சொந்த அடையாளம் விளங்காத சாமானியன்.

இந்த மூன்றுக்கும் வெளியே நிறுத்தப்படுகிறவன் தலித் என்பவன், வள்ளுவன் அவன் சாதியோடு சம்பந்தப்பட்டவனாகச் சித்தரிக்கப்பட்டாலும்.

சமூக வைதிகம் வகுத்து வைத்துள்ள வியூகம் இதுதானே?

ஏன் நாம் எல்லாரும் நடுவாக்கியத்தில் சங்கமித்து, மற்றிரண்டையும் ஓதும் வைதிகம் ஒழித்து, உறுதிப் பொருள்களாய்க் கற்றுணரக் கூடாது?

படிப்பகம்

www.padippakam.com

# எப்போதும் உள்ள ஞாபகம்

## களந்தை பீர்முகம்மது

அவனையொத்த பலரும் திருமணமாகி, குழந்தை குட்டிகளைப்பெற்று, சீராட்டி வளர்த்து, பள்ளிக்கூடம் அனுப்பி வைத்துவிட்ட நாள் வரைக்கும் ஜியா மட்டும் தனியாளாகவே இருந்தான். சந்தோச நிமிசங்களுக்காக அவனும் மற்றவர்கள் போல் பரிதவித்திருக்கவே செய்வான். யாரும் அந்த நிமிசங்களை கொடுக்கத் தயாராயில்லை.

ஆனாலும் ஜியாவுக்கும் திருமணம் நடந்துவிட்டது. நெடுந்தூரம் போய் விட்டவர்களைப் பிடிக்கும் வேகத்துடன் அவனும் முதலாண்டின் நிறைவுக்குள்ளாகவே தன்னைப் போன்ற அழகிலும் நிறத்திலும் ஆண் குழந்தை ஒன்றும் பெற்றான். அது வளர்ந்து அவனை இனம் கண்டு "வாப்பா" என்று அழைக்கப் போகும் இன்பத்துக்காகத் தவமிருந்து துடித்தவன் நேற்று மாலையில் காலமாகிப் போனான். ஊர் கூடி இன்று காலையிலேயே அவன் பூத உடலை நல்லடக்கம் செய்ததற்கு எல்லாரும் 'சாட்சியாகிவிட்டார்கள்.

அவன் மையத்தைச் சுமந்து சென்ற வழியிலும் மையம் அடக்கமான இடத்திலும் அவனது வாழ்க்கை பற்றிய பேச்சுக்கள் உண்டாகி, வருத்தம் மண்டிப் போய் இருந்தது. "கல்யாணம் ஆவாமலே கிடந்தான். அவன் அப்படியே போய்ச் சேர்ந்திருக்கக்கூடாதா? கல்யாணம் பண்ணி அழகாய் ஒரு குழந்தையும் பெத்துட்டு அப்புறமா இப்படி அநியாயமா போய்ச் சேந்துட்டானே!"

ஒரு நண்பனின் வாழ்க்கை என்பது இப்படிச் சுருக்கமான வரிகளிலேயே அடங்கி விட்டதையும் அவன் இழப்பையும் எண்ணி பெருந்துயரில் மூழ்கிப் போனான் திவான். இராத் தூக்கம் முழுவதும் கெட்டுப் போய், அவன் வீட்டிலேயே அவன் உடம்பைப் பார்த்துப் பார்த்தே உருகிப் போனான். ஆனால் ஊர்க்காரர்கள் இப்படி மாய்ந்து மாய்ந்து பேசுவதைத்தான் அவனால் ஏற்கவே முடியவில்லை.

ஜியாவுக்கு சொல்லிக் கொள்கிற மாதிரி வருமானமில்லை. ஊருக்குள்ளே வீடுகள் எத்தனை? தகுதிக்குச் சம்பந்தப் பட்டுவரும் வாய்ப்புள்ள அத்தனை வீடுகளிலும் அவன் ம்மா கால் கடுக்க கடுக்க, வெட்கம் பாராமல், மீன் வாங்குகிற பேரமாய்ப் பெண் கேட்டுப் போயிருக்கிறாள். இவன் இன்னும் சில நாளில் மவுத்தாகிப் போவான் என்றா நினைத்தார்கள்? அப்படி ஒரு நினைப்பு இல்லையென்றால் சிவப்பாகவும் வளர்த்தியாகவும் பார்க்கக் களையாகவும் சுருண்ட முடிக்காரனாகவும் இருந்த அவனுக்கு ஊரில் ஒருத்தர் கூட மனமுவந்து பெண் தர விருப்பமில்லாமல் போக என்ன காரணம்? இந்த ஆச்சரியம் ஜியாவுக்கும் கூட கடைசிவரை மிஞ்சி இருந்தது. ஆனால் 'ஊரார் மேல் திவானுக்கு உண்டாகி இருந்த கோபம் ஏனோ ஜியாவுக்கு இருக்கவில்லை.

கடைசியாக ஜியாவின் ம்மா சுஹராள் மரைக்காயர் வீட்டில்

படிப்பகம்

www.padippakam.com



போய்க் கெஞ்சியிருக்கிறாள். அவள் அறிந்த வரையில் அந்த மரைக்காயர் குடும்பம்தான் பெண் தேடி அலைவதற்கான கடைசிப் படியில் இருந்திருக்கிறது. அதற்குப் பிறகும் சுஹறாள் பெண் கேட்டு அலைய வேணுமென்றால் பெண்கள் சமைஞ்சு வந்தால்தான் உண்டு. மரைக்காயர் வீட்டில் போய் பெண் கேட்ட செய்திதான் ரொம்பவும் பிரசித்தம். "ஒங்களால ஏண்டத போட்டு உங்க மவளைக் கட்டிக் குடுங்கோ. உங்க சக்திக்கு முடிஞ்சத தாங்க. நான் வேற ஒண்ணும் அதக் கொண்டா இதக் கொண்டான்னு கேக்கல," என்று மூச்சு விடாமலேயே சொல்லியிருக்கிறாள். அந்தப் பரிதாபமான கெஞ்சலுக்கும் பதில் தரவில்லை மரைக்காயர். அவர் வெறுமனே பார்த்துக் கொண்டே இருந்திருக்கிறார். அந்த நேரம் பார்த்து இவள் மகனுக்காய்ப் கேட்டு வந்த பெண்ணும் அடுப்படியில் நின்று சோறாக்கும் வேலையில் இருந்தாளாம். அவளின் செக்கச் செவேர் அழகும் முட்டைக் கண்ணும் சற்று தாட்டியான உடம்பும் இவளைக் கிறங்கடிக்க, "எங்க பையனுக்கும் ஒங்க பொண்ணுக்கும் ரொம்பப் பொருத்தமா இருக்கும். கல்யாணம் முடிஞ்சு மாப்பிள்ளையும் பொண்டாட்டியுமா வெளில போனாங்கன்னா பாக்குற மனுஷாளுவோ மூச்சு கூட விடாமநிப்பாங்களே"ன்னாளாம்.

அப்பவாவது ஏதோ ஒரு பதில் வந்து சேர்ந்திருக்க வேண்டும். வரவில்லை. ஓடோடிப்போய் அடுப்படியில் நின்றிருந்தவளின் கையைப் பிடித்துக் கொண்டு, "சரின்னு சொல்லுங்க. நான் இப்படியே இவளைக் கையைப் பிடிச்சி இழுத்துட்டுப் போயிடுறேன்," என்று சொல்லியிருக்கிறாள். பெத்த தகப்பனுக்கு கோபம் வந்துடுச்சி. "சீ! கைய விடு. பேசாம போ வீட்டை விட்டு!" என்று கோபமாய்க் கத்தினாராம். தெருவில் வந்து நின்று அழுது கொண்டே திரும்பியதாகத் தகவல் உண்டு. விசயம் கேள்விப்பட்டவர்கள், பார்த்ததாகச் சொன்னார்கள். இந்த ஒரு அக்கப்போர் அடிக்காத விசயமாக நேற்றுவரை பேசி மகிழ்ந்திருந்ததுதான் இந்த ஊர்.

"அவன் என்ன நொண்டியா நோக்காடா? அவனுக்குப் பின்னால பொறந்தவன்லாம் இம்புட்டு இம்புட்டு உயரத்துல புள்ளையப் பெத்து வச்சிருக்கானுவளே! என் புள்ளைக்கு என்ன சாபம்னு தெரியலியே! ஒரு பெண்ணைப் பெத்து வச்சு கரையேத்துறவ தெவுங்குன மாதிரி நான் தெவுங்கிக்கிட்டு இருக்கேனே!" இப்படியாகவும் சிலர் மத்தியில் பேசி, அதிலும் காரியம் பலிதமாகாமல் போய், மனம் தரிசாகிக் கிடந்த வேளையில்தான் திவானிடமும் பேச்சோடு பேச்சாக இந்த ஆற்றாமையைச் சொன்னாள். ஜியாவும் இருக்கத்தான் செய்தான். இருவரும் வெளிக் கிளம்பிப் போனார்கள். எதையும் காட்டிக் கொள்ளாமல் ஜியா மௌனமாகவே வந்தான்.

இரவில் திவானுக்கு நிறைய யோசனைகள். ஒரு மாதிரி வழி கிடைத்தது. தன் நண்பனுக்காக வேண்டி ஒரு முயற்சி. காலையில் முழித்த கண்ணுக்கு சின்னாப்பா வீட்டுக்குப் போய் விட்

படிப்பகம்

www.padippakam.com



டான். குளிக்கப் புறப்பட்டுக் கொண்டிருந்த சின்னாப்பா திவானைக் கண்டதும் நின்றுவிட்டார். வயசு வித்தியாசம் பாராமல் சின்னாப்பா எப்போதுமே நாகரீகமாய் நடந்து கொள்வது விசேசமானதுதான். சடங்காகி வீட்டில் இருக்கிற தங்கச்சியை ஜிபாவுக்கு பேசி முடித்துவிட்டால் என்ன என்று உற்சாகமாய்க் கேட்டான். திவான் பேசியது அவன் சின்னாப்பாவுக்குத் தமாசான விசயமாகப் போய்விட்டது. சாச்சியும் கூடவே சேர்ந்து சிரித்தாள். "இப்பதான அவளும் சடங்காயி இருக்கா. அதுக்குள்ளேயே கல்யாணமா? அப்புறம் பெரியவன் வேற பாம்பேல இருக்கான். அதுலயும் பொதுவாவே தங்கச்சிய நல்லா படிச்ச மாப்புளக்கிதான் குடுக்கணும்னு அவன ரொம்ப நாளா சொல்லிகிட்டே இருக்கான். நீயே சொல்லு, அவன நெனைககிற மாதிரி இந்த மாப்பிள்ளை கிடையாதே!" இதை சின்னாப்பா சொல்லி முடித்ததும் சாச்சி உள்ளே போய்விட்டாள்.

அவனுக்கென்று பிறந்து வளரகன்றவள் இநத ஊரில இல்லையாம். அப்படி அவனுக்கானவள் பிறந்திருந்தால் இங்கேயே திருமணமாகி இருக்குமாம். அல்லாவின ஏற்பாட்டை யார் மிஞ்ச முடியும்? இந்த சூத்திரப்படி இவனுக்கெனறு பிறந்தவள் திசையன்விளைககுப் பக்கமாய் ஒரு செமமண் தேரிக்குள் ஒடுங்கிப போயிருந்த கிராமத்தில்தான பிறந்து வளர்ந்து வந்திருக்கிறாள். இது யாருக்குமே முதலில் தெரியவில்லை. இந்தப் புதிருக்கான விடை 'நிக்காஹ்' என்று ஒன்று அவர்களுக்குள்ளே நடக்கப்போய்த்தான் தன் முகம் திறந்து காட்டி இருக்கிறது. "கஷ்டம்னா கஷ்டம் இப்படி அப்பிடியான கஷ்டம் இல்லை," என்று சொல்லப்பட்ட ஒரு குடும்பத்தின் தாரகை இவனின் தாரமானாள். அவளுக்குக் கூடப் பொறந்த பொறப்புகள் என்று ஒரு தாத்தா (அக்கா வும், ஒரே ஒரு வயசு கூடுதலான காக்காவும்தான். ஆகையால் காக்காவும், தாத்தா புருஷனுமான மச்சானுமாகச் சேர்ந்து கொஞ்சம் போல நகைநட்டு போட்டு, கல்யாணச் செலவுக்கென்று ஊர் ஜமாத்துப் பெரியவங்ககிட்டே கையேந்தி வசூல் பண்ணி, சின்னதா ஒரு விருந்து வச்சி, நிக்காஹ் செய்து மாப்பிள்ளைகாரனுடன் அனுப்பி வைத்தார்கள்.

இதில் சந்தோஷமானது யாருக்கு அதிகம் என்றால், சொல்லவே வேண்டியதில்லை பெண்ணின் மாமியாராகி விட்டவளுக்குத்தான். வீட்டுக்கு விளக்கேத்த என்று அவளுக்கும் ஒரு மருமகளை ஆண்டவன் உண்டாக்கித்தானே இருக்கிறான். பெண் தராத ஊருக்குள் தலை நிமிர்ந்து நடக்கச் செய்யும் ஒரு சந்தர்ப்பம் தந்த மருமகளைத் தலையில் வைத்துக் கொண்டாடினாள். தானே பூ வாங்கிக் கொடுத்தாள். காலையில் தோழியும் தோழியும் என்னும்படிக்கு வாய்க்காலுக்குக் கூட்டிப் போனாள். மகன் திரும்பிவரும் வரை வாசல் படிக்கட்டில் உட்கார வைத்து கதைகளும் ஊர் வம்புகளும் சொல்லி வாழ்க்கைப் பயிற்சி அளித்தாள். சிறப்புக்கும் பெருமைக்கும் உரிய அவள் மருமகளைப் பார்த்து வந்தவர்

படிப்பகம்

www.padippakam.com



கள் ''அழவு போல மாப்பிள் ளைக்கி இப்படி ஒரு கரிக்கட் டைய எங்கேருந்துதான் தேடிக் கண்டுபுடிச்சி கட்டி வச்சாளோ? இந்தப் பாவி மட்டைக்கு எப்படி இந்த மனசு வந்துச்சுதுன்னே தெரியலியே...... கண்றாவி...'' என்று ஊர்ப் பேச்சாக்கி விட் டார்கள் இதையும்.

ஒரு நாளில் ஒரு பொழுதே னும் கூட தன் மனைவி பற்றி ஒரு வார்த்தையும் திவானிடம் பேசியதில்லை ஜியா. அவன் கடையில் வேலை பார்த்து வெள் ளிக் கிழமை விடுமுறையில் திவா னுடன் ஊர் சுற்றும்போது தானும் கல்யாணமாகி விட்ட வன் என்ற அந்தஸ்தைக் காட் டிக் கொள்ளவில்லை. ஜியாவின் வீடு போயிருந்த சமயங்களில் அவளும் திவான் முன் காட்சி தந்ததில்லை. அவன் தன் மனை வியை அறிமுகம் செய்யவும் இல்லை. திவன் பார்வைக்கு அந்த வீடு எப்பவும் போல மரு மக நடமாட்டம் இல்லாத வீடா கவே காட்சி கொடுத்தது.

ஒரு கட்டையான உருவம். பளபளப்பும் அழகுமற்ற ஒரு கரிக்கட்டை. நவீன காலத்தின் நடப்புகளை உட்கொள்ளாமல் ஒரு மூலையில் பதுங்கிக் கிடக் கும் செம்மண் காட்டின் கடைத் தட்டு பிரதிநிதி. இதனால்தான் இவைகள் நடக்கவில்லையோ? தானே விசாரித்துப் பார்க்கலாம் என்று திவான் ஒரு நாள் விசா ரித்த போது ''அவ நல்ல பெண் ணுதான். நல்லா நடந்துக்குறா,'' என்று சொன்னான். ஆனால் திவான் வீட்டுக்கு ஜியா வரும் போதெல்லாம், ஜியாவே வெட் கப்பட்டு ஓடிவிடும் அளவுக்கு திவானின் மனைவி நையாண் டியும் கேலியும் என்று அட்டகா சம் பண்ணியிருக்கிறாள். தானே நேரில் வந்து, முன்னே நின்று சாயா கொடுத்திருக்கி றாள். விக்கல் வந்த அவசரத் துக்கு இவனே ஓடிப்போய் அவ ளிடம் தண்ணீர் வாங்கிக் குடித் திருக்கிறான். இப்படி ரசமான துளிகளில் ஒன்றேனும் ஜியா வின் வீட்டில் இல்லை.

அப்படிப்பட்ட அந்தக் கரிக் கட்டையைத் திவான் பார்த்தது நாலைந்து நாள்களுக்கு முன்பு தான். அதுவும்அரசு மருத்துவ மனையில் வைத்துதான். ஊரில் சொல்லப்பட்ட அடையாளங்க ளால் அவளை இவன் கண்டு கொண்டான். திவானை யார் என்றே அறியாதவள் மாதிரி தான் அவள் அங்கே வந்ததும் போனதும். தன் நோயிலிருந்து தப்பிப் பிழைத்து அவன் மீண் டும் வந்து விடுவான் என்ற நம் பிக்கையில்தான் அவள் தெம் பாய் இருந்தாள்.

அந்த நம்பிக்கை அவளின் அன்பான பேச்சினில் மிளிர்ந் தது. அவனது உடம்பைத் தள மாய்க் கொண்டு மஞ்சள் காமாலை தீவிரமாய் இயங்கிக் கொண்டிருந்தது. கைப்பிள் ளைக்காரி அவனை அடிக்கடி பார்க்க வராமல் இருக்க வேணு மென்ற நினைப்பில் சுஹராம் மாதான் மகனை அருகிலிருந்து கவனித்து வந்தாள்.

கணவனைப் பார்க்க ஆஸ் பத்திரிக்கு வந்தபோதுகூட அவ னருகில் குழந்தையை கொண்டு செல்ல வேண்டாமென்று யாரோ இரண்டு பேர் வற்புறுத்தித் தடுத் ததால் வெளியே நின்றிருந்த திவான்தான் அந்தக் குழந் தையை வாங்கிக் கொண்டான். தன் குழந்தையைத் தீண்டவும்

படிப்பகம்

www.padippakam.com



அன்பு கலந்து கொஞ்சவும் அவன் கொடுத்து வைக்கப்பட வில்லை. சுகம் பெற்ற பின் மகனை ஆரத் தழுவிக் கொஞ்ச லாம் என்று நினைத்திருந்தவன் வேறு மார்க்கத்தில் இன்று மண் ணறைக்குப் போய்விட்டான். மீள முடியாத இருட்டறை! யார் நினைப்பும் இல்லாமல், எந்த முகக் குறிப்பும் காட்டாமல் ஒரு கொடிய நித்திரை! திவான் நொறுங்கிப் போய் விட்டான்.

அவள் என்ன பாடுபடுகி றாளோ? ஆறுதல் கூற தந்தை யும் தாயுமற்ற ஒரு தாயாகிப் போனவளுக்கு எந்தக் கைக ளால் யாருடைய வார்த்தைக ளால் விமோசனம் கிட்டும்? அவள் ஊருக்குச் சொல்லி விட் டபோது கூட மூன்றே மூன்று பேர்தான் வந்தார்கள். அதில் அவள் தாத்தா, மச்சான், இன் னொரு கிழவி. கல்கத்தாவில் இருக்கக் கூடிய அவள் காக்கா வுக்கு இந்த நிமிசம் கூட செய்தி போய்ச் சேர்ந்திருக்காது. கோடானு கோடி ஜனங்களால் பிதுங்கி வழிகிற தேசத்தின் ஒரு அழகற்ற, பொருளற்ற பெண் ணுக்கென்று உள்ள உறவினர் கள் ஒரு கை விரலில் அடங்கிப் போக, இன்னும் எண்ணப்படுவ தற்கு விரல்கள் உள்ள நிலை தான். துயரங்கள் நிரம்பிய திவா னின் மனசு, தடுமாறி முட்டிப் போய் சிக்குற்றுக் கிடந்தது.

கலகலத்தும் கலகலப்பற்றும் பேசியும் பேசாது திவானுக் கென்று எப்போதும் அருகிருந்த நண்பன் இல்லாமலே போனான். மண்ணின் பசி தீர்க்க நண்ப னின் உடம்பை ஒரு பண்டம் போல வெள்ளைத் துணியில் பொதிந்து வைத்துவிட்டார்கள். ஈர மண்ணோடு மேடிட்டு உயர்ந்த அவனின் கடைசி இருப் பிடம் திவானின் கண்களுக்கு ஒரு தண்டனை என ஆகிவிட் டது. அழுக்கடைந்த ஆஸ்பத்தி ரியின் மூலையில் கிடந்து நாறிப் போனவனின் கபர்ஸ்தானின் மேலே இப்போது மணம் வீசி ஊதுவத்திகளும் மலர்களும்!

வீடு திரும்பும்போது சின் னாப்பா வீடு தாண்ட வேண்டி இருந்தது. அவர் இவனைக் கண் டதும் கைதட்டிக் கூப்பிட்டு “இங் குன வந்திட்டுப் போயேம்பா!” என்றார். அங்கு செல்ல மன மில்லை. ஆனால் சின்னாப்பா மரியாதைக் குரியவர். அவனைப் பற்றித்தான் அவரும் பேசினார். அவரது துயரம் முழுதாய் வெளிப் பட்டது. இருவரும் துடிப்பற்ற வார்த்தைகளால் ஏதோ பேசிக் கொண்டிருந்த போது, அங்கு வந்த சாச்சியும் குறுக்கிட்டாள். அவள் பேச்சைக்கவனிப்பார் இல் லாமல் அது சகதிக்குள் விழுந்த கல்போல அமுங்கியது. வாப்பா வுக்கும் அண்ணனுக்கும் என்று சின்னாப்பாவின் மகள் சூடான கடுங்காப்பி கொண்டு வந்து வைத்த போது ஏற்பட்ட பேச்சு இடைவெளியில் சாச்சி நுழைந் தாள்.

“அவன் உன் கூட்டா ளின்னு வந்து சொல்லிக்கிட்டு என் புள்ளயக் கட்டிக் குடுக்கச் சொன்னியே? இப்ப பாத்தியா?

படிப்பகம்

www.padippakam.com



அப்படி அவசரப்பட்டு செஞ்சிருந்தோமுன்னா என்னாயிருக்கும்? என் மவ கழுத்துல கட்டுன கருகமணி அறுந்து போயிக் கெடப்பாள! நல்ல வேளை ஆண்டவனா பாத்து என் புள்ளயவும் என் குடும்பத்தையும் காப்பாத்துனான்.''

திவானின் உடம்பு அதிர்ந்தது. அத்துவான இருட்டுக்குள் தூக்கி வீசியது போல் மருண்டான். உச்சானிக் கொம்பில் ஏறிய கோபம் பிடித்தாட்டியது. ஆனாலும் எதுவும் பேச வாய் வராத சிலையாய்ப் போனான். வீட்டுக்குப் போக எழுந்த போது சற்று தடுமாற நேர்ந்ததை தன் இளமைக்கு நேர்ந்த களங்கமாய் உணர்ந்தான். அவனைப் புரிந்து கொண்ட சின்னாப்பா, ''சரி சரி, வாயை மூடு! எல்லாம் தெரிஞ்சவ மாதிரி பேசிக்கிட்டு'' என்று தன் மனைவியை அதட்டியவராக ''நீ போப்பா வீட்டுக்கு'' என்று கூறினார்.

சாச்சி தன் கட்சியை விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை. ''நான் மட்டுமா சொல்றன்? ஊருல எல்லாப் பொம்பளங்க கிட்டேயும் இதே பேச்சாத்தான் போச்சு. ஒரு வீடு பாக்கி இல்லாம அவன் ம்மாக்காரி ஏறி வந்து பொண்ணு கேட்டாள! இன்னா நெனச்சுப் பாக்க முடியாத மாதிரி போயிச் சேந்துட்டானே. யாராலும் காப்பாத்த முடியாம ஆயிடுச்சே. நம்ப புள்ளைங்கள ஆண்டவன் காப்பாத்திட்டான்னு மனசு நெறைஞ்சு போயி எல்லாப் பொம்பளைங்களும் சொல்லத்தான் செய்யிறாளுவோ!'' சாச்சியின் பேச்சு திடீரென்று நிறுத்த முடியாத விமானம் மாதிரி போய்க் கொண்டே இருந்தது. அவள் பேச்சு நின்றது மேலும் பேச ஏதும் இல்லாமல்தான்.

சின்னாப்பா அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டு சொன்னார். ''வாஸ்தவம்தான். ஆண்டவன் இந்த ஊருல உள்ள பொம்பளைங்க, சமஞ்ச புள்ளைங்க எல்லாத்தையும் காப்பாத்திட்டு, திசையன் விளைக்குப் பக்கத்துல பொறந்த பொண்ணையும் அவ குடும்பத்தையும் கண்ணு தெறந்து பாக்காம நட்டாத்துல வுட்டுட்டான். பாரேன்! அப்பவும் பாத்தியா— ஒரு குடும்பத்தக் காப்பாத்துறதா இருந்தா இன்னொரு குடும்பத்த பலி கொடுக்க வேண்டியதாயிருக்கு. கால் வயிறும் அரை வயிறுமா குடிச்சிட்டுக் கெடந்தவளுக்கு ஒருத்தன் புருஷனா வந்தும் வாழ முடியாம ஆனதுதான் உங்க பார்வையில நல்லதாப் படுதாக்கும்?''

சின்னாப்பாவிடமா இவ்வளவு விஷய ஞானம்? அவரின் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொள்ளனும் போல இருந்தது. சாச்சி வீசி எறிந்த இருளுக்குள் இருந்து மீண்டு வர ஒரு புதிய ஒளி கிடைத்தவனாய் சின்னாப்பாவையே பார்த்தான் திவான்.

மண்டிக்கிடந்த துக்கத்தை விலக்கிவிட்டு சந்தோசப்பட முயன்றது அவன் மனம். ●

படிப்பகம்

www.padippakam.com

# மூன்றாம் ஆப்பிள்

## நீலமணி

ஏவாள் தந்த மூன்றாம் ஆப்பிள்
ஆதாமுக்கு ஏன்
அப்படிக் கசக்கிறது?

அழகர்கள் என்றால்
கண்ணாடி பிடிக்காமற் போவானேன்?
இரைத்த முத்துகள்
மிதிபடுகின்றன.

கேள்விக்குறிகள் மீது
வெட்டுத் தீர்மானம்.

அள்ளத் தயார் — அல்லது
கொல்லத் தயார்:
துருவங்கள் மட்டுமேயான பூமி.

தலைக்கு விலை:
மூளை அபாயகரமானதா?

பேனாவைப் பார்த்தே
ஆயுத அச்சம்.

எழுத்துகள்மீது
குதிரைக்காரர்களின் படையெடுப்பு.

ஒரு குயிலைத் துரத்திக்கொண்டு
கோடி கோடரிகள்.
வீர விருதுக்கு
உங்களைத் தவிர
வேறு யார் தகுதி?

திருத்தம் என்றாலே
வருத்தம்.

தாய்மை – தெய்வீகம்.
அதற்காகப்

படிப்பகம்

www.padippakam.com



பேய்களுடனா
வாழ்க்கை நடத்தியாக வேண்டும்?

தாலியைத்
தூக்கி யெறிந்தாள்:
வேலியோடு இவர்களும்
விழுந்தார்கள்.

அந்தப் புத்தகம்
கடவுள் தந்ததாம்!
ஒத்துக் கொள்வோம்:
அதில் கொடுவாளை
வைத்தவனும்
அவன்தானா?

தங்கள் சட்டப் புத்தகங்களை
இவர்கள்
காலப் பெட்டகத்திலிருந்து எடுக்கிறார்கள்.
உணவைப்
புது அறுவடையிலிருந்து பெறுகிறவர்கள்
சட்டங்களை ஏன்
சவக்குழியிலிருந்து எடுக்கிறார்கள்?

இவள்தான் படைப்பவள்:
எவனோ படைத்ததாக
எழுதிவைத்துக் கொண்டிருக்கிறீர்கள்!

இமைகளைத் தைத்துக் கொள்வதால்
சூரியன் புறமுதுகிடுமோ?

வெளிச்சத்தின் மீது
உங்களுக்கு
அப்படியென்ன
விரோதம்!

அரசு உத்தரவாதம் செய்யும்
உரிமைகளில்
மடமையும் ஒன்று போலும்!

படிப்பகம்

www.padippakam.com

# கி. ரா. என்ற கதை சொல்லியும் கதை சொல்லியின் அரசியலும்

—ராஜ்கௌதமன்

'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்ற பெயரில், பாலியல் தொடர்பான நாட்டுப்புறக் கதைகளை, ஆசிரியர் கி. ராஜநாரயணன் (கி. ரா.) பற்பல நியாயங்களையும், தற்காப்பு நடவடிக்கைகளையும் செய்து கொண்டு தமக்கான நடையில் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். ஒரு சனரஞ்சகமான வெகுமக்கள் வியாபாரப் பத்திரிகையில் தொடராக வெளிவந்த இக்கதைகளைத் தனி நூலாக வெளியிட்டிருக்கிறார். நாட்டுப்புற இயலின் தொழில் நுட்பங்கள் ஏதுமின்றி கி. ரா. இவற்றைத் தம்முடைய பொருள் கோடலின் மறுப்படைப்பாக ஆக்கியுள்ளார். இதனைக் கி. ரா. வின் பிரதியாகவே பார்க்க வேண்டும். அசல் நாட்டுப்புறக் கதைப் பிரதியின் பேரில் கட்டமைக்கப்பட்ட ஒரு நகலையே இக்கட்டுரை தனது விமர்சனப் பொருளாக எடுத்துக் கொள்கிறது. இங்கே, அசல்—நகல் என்ற சொற்களின் வழக்கமான உணர்த்தலில் உள்ள ஏற்றத் தாழ்வான மதிப்பீட்டை இக்கட்டுரை ஏற்கவில்லை. வேறுபாட்டைச் சுட்டுவதற்காகவே இச்சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

இப்பிரதியின் 'ஆசிரியர்' எனக் கூறும்போது, கி. ரா. வை உள்ளிட்ட பலரும், பலவையும் கணக்கில் கொள்ளப்படுகின்றனர். 'ஆசிரியரு'க்குள் கி. ரா.வும், அவரை அறியாமலேயே அவரும், பிறரும், பிறவும் பிரசன்னமாகியிருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்வதானால், கதை சொல்லும் தாத்தையா நாயக்கர், கதை கேட்டு வினவும், கதை சொல்லும சிறுவர்களும், மற்றும் பிரஞ்சுப் பேராசிரியர், பழமலை, கலைப்பட இயக்குநர் வி. எஸ். வாசன், டாக்டர் சண்முகசுந்தரம், முன்னோர்கள், கண்ணன், ஆழ்வார்கள், ராமன் - சீதை, பதிப்பாளர் ஆகியவர்களும் 'ஆசிரியரு'க்குள் அடக்கம். இவர்களோடு பள்ளிக்கூடம், இந்துக் கோவில், தேர், நுழைவாயில் விதானம், சிற்பங்கள், ஆங்கிலக் கல்வி, புதுவைப் பல்கலைக் கழகம், சிபிலிஸ் நோய் குறித்த வரலாறு ஆகியவையும் 'ஆசிரியருக்'குள் அடக்கம். இவர்களோடும், இவற்றோடும் கூட கதை கூறுகிற, கதைக்கு முன்னும் பின்னும் ஊடும் பேசுகிற எழுத்தாளர் கி. ரா. வும் 'ஆசிரியர்' என்ற கருத்தியல் பிரயோகத்திற்குள் வருகிறார். இவர்களை, இவைகளை உள்ளிட்ட இந்த ஒப்பற்ற 'ஆசிரியர்' இந்தப் பிரதியை நிர்மாணித்ததின் வழியாக அசல்நாட்டுப்புற, அதாவது ஆட்பட்ட சொல்லாடலை (Dominated discourse) மேலாதிக்கச் சொல்லாடலாக (Dominant discourse) உருமாற்றியமை குறித்து இக்கட்டுரை இனி விளக்கும். இது இக்கட்டுரையின் கருதுகோளாகும். வேறு விதத்தில் கூறுவதானால்,

படிப்பகம்

www.padippakam.com



ஓரப்பகுதியின் எதிர்ப் பண்பாட்டு அம்சங்களைத் தணிக்கை செய்வதன் மூலமாக, ஆதிக்கப் பண்பாடு தன்னை ஒழுக்க சீலனாகக் காட்டுவதோடுகூட, அவற்றை மையப் பகுதிக்குரிய நுகர் பண்டமாகவும் ஆக்கியுள்ளது தெரிகிறது. சுருக்கமாக மையப் பகுதியானது, ஓரப்பகுதியைத் தனது குடியேற்றத்திற்கு உட்படுத்தியுள்ளது (Colonization) என்று கூறலாம்.

ஆசிரியர் கி. ரா. பல்வேறு தணிக்கைகள், நியாயங்கள், சிதைவுகளோடு தந்துள்ள இந்தப் பாலியல் கதைப் பிரதிக்கு, இந்தப் பிரதியைப் பலபடியாக விமரிசித்தும், பொருள் கொண்டும், நியாயப் படுத்தியும், அறுதித் தீர்வுகள் நீதிகளை வடித்தும் ஒரு உபரிச் சொல்லாடலைத் (Supplimentary discourse) தந்திருக்கிறார். இது கதைப் பிரதியின் போதாமையை நிரப்புவதாகவும், தேவைப்படாதவற்றை அகற்றுவதாகவும், பிரதியைவிடவும் சான்றாண்மை மிக்கதாகவும் செயல்படுகிறது.

**நியாயப்படுத்தல்கள்:**

மைய ஆதிக்கப் பண்பாட்டின் 'மரியாதைக்கு' இசைவாக நாட்டுப்புற பாலியல் கதைகளை நியாயப்படுத்துகிற ஆசிரிய முயற்சி என்பது, அந்த ஆதிக்கப் பண்பாட்டின் கபடமான நீதி நியாயங்களை முன்னெடுத்து வைப்பதாக அர்த்தம். மேலாதிக்க மையத்தின் 'கௌரவமான' அறிவியல், நீதிநெறி, கல்வி, மதம் முதலிய சொல்லாடல்களை முன்மாதிரிகைகளாக வைப்பதாக அர்த்தம்.

**1. அறிவியல்:**

நாட்டுப்புறப் பாலியல் கதைகளைக் கனப்படுத்தவும், அதுவுங் கூட ஓர் உயர் ஆய்வுக்குரிய தற்சார்பற்ற பொருள் என்று நிலை நாட்டவும் அறிவியல் சொல்லாடல் பயன்பட்டுள்ளது. அறிவு நிலையில் உணர்ச்சி வசப்படாமல், தற்சார்பற்றுப் பாலியலை நோக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை மேற்கொள்ளச் சொல்லுகிறது. கிராமப்புறத்துத் தாத்தையா நாயக்கர், நகரங்களில் தங்கி அந்தக் காலத்து ஆங்கிலம் கற்றவர் என்ற தகவலை ஆசிரியர் நுழைப்பதைத் தொடர்ந்து குறிப்பாக உணர்த்தப்படுகிற அர்த்தங்களின் நீட்சியானது, மேற்குலகம், அறிவுலகம், அறிவியல், தொழில் நுட்பம், முன்னேற்றம் ஆகியவை குறிப்பீடு செய்யப்படுகின்றன அல்லவா? "அந்தத் தாத்தா... பயங்கரமா கெட்ட வார்த்தை கதைகள் சொல்வார்" என்கிற ஓரப்பகுதி விசயத்தை, அந்தத் தாத்தா ஆங்கிலம் கற்றவர் என்ற தகவலானது மிக மறைமுகமாக மேல் தளத்திற்கு நகர்த்திவிடுகிறது. இறுதிக் கதையில் இதே தாத்தா வழியாக 'சிபிலிஸ்' என்ற பால்வினை நோய் குறித்த அறிவியல் - வரலாற்றுச் சொல்லாடல் இடம் பெறுகிறது. கதைக்குள்ளேயே இடம் பெறுகிறது. சாதாரணமாக, 'கெட்ட' 'பாலியல்' கதைகளைக் கூறுபவர், அதற்கு நேர் மாறானவர்; உயர்ந்த ஆங்கிலம் கற்றவர்; வரலாறு தெரிந்தவர், கல்விமான், அனுபவஸ்தர் ஆகிய உயர் பிம்பங்கள் பெற்றவர் என்ற நியாயங்கள் உண்டாக்கப்பட்டுவிடுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



'மேற்கு' பற்றிப் பதினோராவது பதினெட்டாவது கதைகளில் மேற்கோள்கள் இடம்பெறுகின்றன. இவ்விரண்டிலும் ஃபிரெஞ்சுக் கதை மற்றும் சம்பவமும், பின்னர் ஏழாவது கதையில் அந்நிய நாட்டுக் கதை(36) ஒன்றும் முன் மாதிரிகளாக எடுத்துரைக்கப்படுகின்றன. ஃபிரெஞ்சு நாட்டில் ஓர் அரசனை மரணத்திலிருந்து காப்பாற்றிய நூறு பாலியல் கதைகள் தாராளமாக வெளியிடப்படுகின்றன. அங்கு எதிர்ப்பில்லை; ஆனால் இவற்றையே தமிழில் மொழி பெயர்க்க இயலாது; தமிழர்கள் ஏற்கமாட்டார்கள் என்று ஒரு ஃபிரெஞ்சு பேராசிரியர் கூறியது எடுத்துரைக்கப்படுகிறது. அறிவியல் முன்னேற்றமும், தாராளவாத சனநாயகமும் கொண்டவர்கள் ஏற்கிறார்கள். இப்படி இல்லாத தமிழர்கள் ஏற்கமாட்டார்கள்; எதிர்ப்பார்கள். முன்னேறியவர்கள் ஏற்பார்கள்; அப்படி இல்லாதவர்கள் அசிங்கம் என்பார்கள் என்று உணர்த்தப்படுகிறது.

இங்கே மேற்கு, அறிவியல் குறித்த ஒரு தொன்மம் உருவாக்கப்படுகிறது. அறிவியல் எப்போதும் சலித்தெடுக்கப்பட்ட உண்மை என்பதோடு தொடர்புறுத்தப்படுகிறது. ஆதிக்கச் சொல்லாடலின் அறிவியல் என்பது கறாரான விதிமுறைகள், சோதனை முறைகள், வரையறைகள், அளவைகள் வழியாகத் தற்சார்பற்ற நோக்கில் உண்மையைக் கண்டு அறிந்து நிருபணம் செய்வது என்று நம்பப்படுகிறது. இந்த உண்மையின் விளைவு என்னவெனில், அறிவியலுக்கு உடைமை பூண்டவர்கள், உறவுடையவர்கள், நடுநிலையாளர்கள், எவற்றையும் சரியாகவும் தற்சார்பின்றியும் அணுகுவாரகள் என்றும், இங்கு நடப்பதெல்லாம் சரியாகவும் யாருடைய விருப்பு வெறுப்புக்கும் உரியதாக இன்றியும், உண்மையின் பேரால்தான் நடக்கிறது என்றும் ஒருவித தொன்மம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஆட்பட்ட பண்பாட்டின் உலகப்பார்வை வித்தியாசமாக இயங்குகிறது. இங்கே 1 : 1 என்ற எதார்த்த அறிவியல் பரிமாணம் செயல்படுவதாகத் தெரியவில்லை. பால் உறுப்புகள் 'எதார்த்த' அளவின்றி பிரமாண்டமானதாகவும் அதிக எண்ணிக்கை கொண்டதாகவும் நாட்டுப்புறக் கதைகளில் இடம் பெறுவது முன்னர்க் குறிப்பிட்ட அறிவியல் சொல்லாடலுக்கு முரணாக உள்ளது. பால் உறுப்பில் மட்டுமின்றி, ஏனைய கண், பல், நாக்கு, கை, கால், வயிறு முதலான உறுப்புகளும்கூட அறிவியல் தருக்கம் வரையறுக்கும் 'உண்மை'யை மீறி, அதீதமாகவும், தற்சார்பான உணர்வுப் பாங்கில் மிகையான பரிமாணமுள்ளவையாகவும் படைக்கப்பட்டுள்ளன. ஃபிராய்டு சொற்களில் கூறுவதாயின், ஆதிக்கப் பண்பாட்டின் அறிவியல் சொல்லாடல் எதார்த்தக் கொள்கை ( Reality Principle ) வழிப்பட்டதாகவும், ஒரப்பகுதிப் பண்பாட்டின் உணர்ச்சிமயச் சொல்லாடல் இன்பக் கொள்கை ( Pleasure Principle ) வழிப்பட்டதாகவும் வேறு வேறு தளங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன எனலாம். ஆசிரியர் கி. ரா. இன்பக் கொள்கை வழிப்பட்ட 'மாசற்ற' சொல்லாடலை, எதார்த்தக் கொள்கை வழிப்பட்ட அறிவார்ந்த தளத்திற்கு 'உயர்த்த' முனைந்துள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com



## 2. நீதி நெ

நீதி புகட்டுதல், போதனை, நன்னெறிப் படுத்துதல், படிப்பினை என்பவை மையத் தமிழ்ப் பண்பாட்டின் மிக நீண்ட மரபாக இருந்து வந்துள்ளன. இவை அனைத்தும் முந்த முந்த, தனி உடைமை உறவுகளுக்கிடையில் உரசல் - விரிசல் வராதவாறு கருத்தியல் பணிபுரிந்து வந்துள்ளன; இன்னும் புரிந்து கொண்டிருக்கின்றன.

கி. ரா. நாட்டுப்புறப் பாலியல் கதைகளை வெளியிடுவதற்காக நீதி புகட்டலை ஒரு நியாயமாக முன்வைக்கிறார். நூலின் ஆரம்பத்தில் கிட்டான் என்ற சிறுவன், தான் பள்ளிக்கூடத்தில் ஆசான் வழி கேட்டறிந்த நீதி புகட்டும் கதையைக் (குரங்கு குருவிக் கூட்டைப் பிய்த்த கதை) கூறுகிறான். இக்கதையின் முடிவில் 'மூடர்களுக்குப் புத்தி சொல்லக் கூடாது' என்ற நீதி கூறப்படுகிறது. இதே நீதியை உடனே தாத்தையா நாயக்கர் நூறு கழுதைகளும் கரிக்குருவியும் என்ற பாலியல் கதை வழியாக 'பல சாலிகள்ட்டெயும் முரடங்க கிட்டெயும் ஞாயம் எடுபடுமா?' என்று சற்று வேறுபட்ட வார்த்தைகளில் சொல்கிறார். பாலியல் கதைகளிலும் உயர்ந்த நீதி, படிப்பினை இருக்கிறது என்பதை ஆசிரியர் நிரூபிப்பது போலத் தெரிகிறது. எத்தனை அயோக்கியத்தனமாக இருந்தாலும், தோற்றத்தில் மிக உன்னத விஷயமாகக் காட்டுவதில் கைதேர்ந்த ஆதிக்கப் பண்பாட்டுக்கு ஏற்றபடியாக ஒரப் பகுதிப் பாலியல் கதை ஞானஸ்நானம் பெற்று விடுவதையே இங்கு அவதானிக்க முடிகிறது. இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவெனில் ஆதிக்கப் பண்பாட்டின் பார்வையிலேயே கி. ரா. நாட்டுப்புறப் பாலியல் கதைகளில் 'ஆபாசங்களை' கண்டிருப்பதுதான். பச்சையானவற்றைச் சமைத்திருப்பதாக நினைத்திருக்கிறார்.

கி. ரா. பாலியல் கதைகளை நீதிக் கதைகளாகக் குவித்திருப்பதால், குறிப்பாகப் பாலியல் போதனைகளாக மாற்றியிருப்பதால் சிக்கல்கள் எழுந்துள்ளன; சிதைவுகளும், பொருத்தமில்லாத பொருள் கோடல்களும் ஏற்பட்டுள்ளன.

ஒரு கதைக்கு (21) 'உதவாத புருஷன்னாலும், ஒரு ஆண் துணை பெண்ணுக்கு வேணும்' என்ற படிப்பினை தரப்படுகிறது. இது மூலக்கதையில் உள்ளதா என அறிய வழியில்லை. வேறு உத்தேசங்களையும், பரிமாணங்களையும் கொண்டுள்ள ஒரு கதைக்கு (3) தாத்தையா வழியாகக் கி. ரா. கோர்ட்டுக்குப் போனால் நீதி கிடைக்காது என்ற படிப்பினையைத் தருகிறார். இதனை மேலும் உறுதிப்படுத்த, நடப்பில் திருவனந்தபுரம் ஹைகோர்ட்டில் 'கோர்ட்டுக்கு வராதே. வந்தால் உனக்குச் சட்டிதான் மிஞ்சும்,' என்ற படிப்பினையை உணர்த்தும் படம் தொங்குவதைத் தாத்தையா மூலம் கி. ரா. சொல்கிறார். கபடமான மேலாதிக்க நீதி நெறிச் சொல்லாடலுக்குள் நாட்டுப்புற பாலியல் கதையைச் செறிக்க முயன்றதற்கு வாசகரை ஏற்க வைப்பது நோக்கமாக

படிப்பகம்

www.padippakam.com



இருந்தாலும், நாட்டுப்புற மக்களின் பாலியல் கதையின் உயிரையே இது திருகுவதுபோல் ஆகிவிடவில்லையா?

இந்த மூன்றாம் கதையைச் சற்று நோக்க வேண்டும். இதன் பாலியல் தன்மை கதை முடிவில், "கரு கலைந்ததற்குக் காரணமாக இருந்த ஏகாலியே அந்தக் கருவை உண்டாக்கித் தரக் கடமைப் பட்டவன்" என்ற நீதிபதியின் தீர்ப்பில் அடங்கியுள்ளது. இந்தத் தீர்ப்பு எதார்த்த தளத்தில் நடக்க முடியாத ஒன்று; ஆதிக்கப் பண்பாட்டில் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. இது யதார்த்த நீதிபதியின் தீர்ப்பல்ல; ஒடுக்கப்பட்ட ஏகாலி மக்களின் ஓர்மை யற்ற ஆசைகள் மேலாதிக்க ஆதிக்கக் கூறான நீதிமுறையைப் பகடி செய்கின்றன. அவர்களுடைய கலகப் பண்பாட்டின் அம்சம் இது.

கதையில் ஏகாலியின் கழுதை, பெரிய தனக்காரர் மனைவிக்கு ஆசையாக வளர்த்த முளைக்கீரையை மேய்ந்து விடுகிறது; அவர் அதன் காலை ஒடிக்கிறார். நியாயம் கேட்டு வந்த ஏகாலியைப் பெரியதனக்காரரின் கர்ப்பிணி மனைவி விளக்குமாற்றால் அடிக்க ஓடிவருகிறாள். ஏகாலி தற்காப்பில் இறங்கிய போது தவறுதலா கக் கர்ப்பிணி விழுந்து, அவள் கரு கலைகிறது. கழுதையும், ஏகாலியும் வேண்டுமென்று குற்றம் புரியவில்லை. பெரியதனக்கா ரரும், அவர் மனைவியும் உடைமையாளர்களுக்குப் பிறரைத் தண் டிக்க உரிமை உண்டு என்ற இயல்பின்படியே செயல்படுகிறார்கள். தொடர்ந்து ஏகாலிகளுக்கும், பெரியதனக்காரர்களுக்கும் இடையே சாதிக் கலவரத்திற்கான நெருக்கடி ஏற்பட்டுப் பிறகு சமாதான மாகிறார்கள். ஆனால் ஏகாலியைத் தண்டித்தே தீர வேண்டும் என்று வன்மம் கொண்ட பெரியதனக்காரர் நீதிமன்றம் என்ற அரசு அதிகார நிறுவனத்தை நாடுகிறார். விசாரனை நடக்கிறது. இதுவரை கூறப்பட்ட கதைப்பகுதி ஆசிரியரின் எதார்த்த வகை எடுத்துரைப்பில் அமைத்துள்ளது. நாட்டுப்புறக் கதையினும் பார்க்க, ஒரு நவீன - கி. ரா பாணிக் கிராமியச் சிறுகதை என்றே இதனைக் கருதமுடியும். ஆனால் இறுதியில் தீர்ப்பு மட்டும் இக் கதையை ஒடுக்கப்பட்ட ஏகாலி மக்கள் ஒடுக்குபவர்களைப் பார்த் துப் பகடி செய்கிற கதையாக உருமாற்றி விடுகிறது. கி. ரா. இதனை ஒரு நீதிநெறிக் கதையாக வேறு காரணங்களுக்காக மாற் றியமைத்திருப்பதால், ஓரப்பகுதி மக்களின் சிரிப்பு, நக்கல் ஆகி யவை இவ்விதப் 'பாலியல்' கதைகளில் கொப்பளிக்க எவை கார ணம் என்பதை உணர முடியாதபடி செய்துள்ளார்.

பெண்களுடைய பாலியல் தந்திரம் பற்றிய கதைகளில் (9, 10, 14) அடக்கி ஒடுக்கப்பட்ட ஆண், பெண் உடலும் மன மும் எத்தனையோ விதங்களில தீர்த்துக் கொண்டே தீரும் என் கிற உபதேசம் பக்கம் (51) இடம் பெறுகிறது. இக்கதையில் வரும் பவளக்கொடியும் பட்டி - விக்கிரமாதித்தியர்களிடம், பெண் ணின் பாலியல் பசிக்கு உணவு இடாவிட்டால், அவள் அதை எவ்விதத்திலும் நிறைவேற்றியே தீர்வாள் (பக். 64) என்று உபதே

படிப்பகம்

www.padippakam.com



சம் புரிகிறாள். ஆனால் கதை வேறு மார்க்கத்தில் செல்லுகிறது. கி. ரா சலித்தெடுத்த போதனை இக்கதையில் தென்படவில்லை.

இக்கதையைப் படிப்பவர்கள், இக்கதையில் 'பாலியல் பசி' அல்லது அமுக்கப்பட்ட, அடக்கப்பட்ட பால் ( reppressed sex ) என்பதைவிட, சவால் விடப்பட்ட பெண்ணின் பால் ( challenged sex) என்பதுதான் கதையாடலாகியிருப்பதை அவதானிக்க முடியும். ஒடுக்கப்பட்ட பெண்ணின் பாலுக்கு விடப்பட்ட சவால் என்பதில் 'பாலியல்' இருப்பது ஒரு உபவிசயமேயன்றி, அதுவே பிரதானமாக இல்லை. இக்கதையில் பவளக்கொடியால் பயன்படுத்தப்படும் ஏகாலி இளைஞனுக்கு ஆதிக்கப் பண்பாடு சவால் விடுமேயானால் அது பால் சார்ந்ததாக இராது; மாறாக சாதியைச் சார்ந்ததாகவே இருக்கும். பெண் தனது ஒடுக்கப்பட்ட பாலியல் களத்தில் நின்று மேலாதிக்க ஆணைச் சவாலிட்டு வெல்லுவது என்பது ஒடுக்கப்பட்ட மாற்றுக் கலகப்பண்பாட்டின் பொதுவான அம்சமாகும்.

**3. தணிக்கை:**

இப்படிப் பாலியல் கதைகளை அவற்றுக்குக் கொஞ்சமும் தேவைப்படாத நகாசு வேலைகளைச் செய்து கி. ரா. கபடத்தனம் மிக்க ஆதிக்கப் பண்பாட்டிற்குள் நியாயப்படுத்தவும், தம்மை நியாயப்படுத்தவும், போலிப் பண்பாட்டில் சிக்குண்ட வாசகர்களைச் சங்கடப்படாமல் ஏற்கச் செய்யவும் நீதி, படிப்பினைகளைத் தந்துள்ளார். கூடவே சில தணிக்கைகளையும் செய்துள்ளார். நீதி, படிப்பினை என்ற மேலாதிக்க நடைமுறைக்கு வந்துவிட்டாலே கூடவே தணிக்கை செய்யும் செயலும் கோர்த்துக் கொள்ளுகிறது. நீதி, நெறி, அறம் எல்லாமே தணிக்கையின் பேரில் கட்டமைவது தானே?

மேலாதிக்கப் பண்பாட்டை ஓர்மை மனம் என்றால், ஆட்பட்ட ஓரப்பகுதி பண்பாட்டை ஓர்மையற்ற மனம் எனலாம். இந்த ஓர்மையற்ற மனம் எப்போதுமே ஓர்மையின் கபடத்தனமான முறையை மீறும்; அதைப் பார்த்துச் சிரிக்கும்; பகடி பண்ணும்; இந்த ஓர்மையற்ற பண்புள்ள ஓரப்பகுதிப் பண்பாட்டின் கணக்கற்ற பகடி, கிண்டல், நக்கல் வடிவங்களை ஆதிக்கச் சொல்லாடலானது அவ்வக் காலங்களில் தணிக்கை செய்து வந்துள்ளது; அழித்தும் வந்துள்ளது என்ற பக்தின் (1895 - 1975) [1] எழுதியுள்ளதை இங்கு நினைத்துப் பார்க்கலாம். ஓர்மை மனமானது, ஓர்மையற்ற மனதைச் சதாகாலமும் தணிக்கைகளுக்கு உட்படுத்துவதைப் போலவே, இங்கே நாட்டுப்புறப் பாலியல் கதைகளின் கூறுகளை, ஆதிக்கப் பண்பாட்டின் நீதி நெறிச் சொல்லாடலானது தணிக்கை செய்கிறது.

கி.ரா. இரண்டாவது கதை முடிவில் தாமே நேரடியாகத் தணிக்கை செய்வதை வாசகர்களிடம் கூறுகிறார். தேள் கொட்டிய

—இதன் தொடர்ச்சி 36ஆம் பக்கம் பார்க்க—

படிப்பகம்

www.padippakam.com



## பாட்டாளி

காலங்
காலமாய்
பெருகிப் பிரவகிக்கும்
ஜீவ ஊற்று!

நுகர்வுச் சுழற்சியில்
ஊற்று
கிணறாய் மாற,
கிணறு குழாயடியாய்
பரிணாமம்!

குழாயடியில்
விதவிதமாய்
நவநவமாய்
பானைகள்!

ரியலிச,
மேஜிக்கல் ரியலிச பானைகள்!
லீனியர்,
நான் லீனியர் பானைகள்!
முற்போக்குப் பானைகள்!
போஸ்ட் - மாடர்னிச பானைகள்!

பானைகளின்
சுயமோகிப்பு
இடிபாடுகளிக்கிடையில்
வியர்த்தமாய்...

ஊற்று நீர்!

## கே. ஜெகதீஷ்

### 1.

எப்படி இருக்கே...?
நல்லாருக்கியா...?
விசாரிப்புகளுக்கும்
கைகுலுக்கல்களுக்கும்
எப்போதுமே பஞ்சமிருப்பதில்லை.

விசாரிப்பின் பதில் பெறும் முன்பே

படிப்பகம்

www.padippakam.com



அடுத்த விஷயத்திற்குத்
தாவுதலே நிகழ்ந்து விடுகிறது!

யாரும்
எப்போதும்
மனமுவந்து விசாரித்ததுண்டா
யாரையேனும்...?

தீய்ந்த பாத்திரத்தின்
அடிக் கருப்பாய்
எப்போதும் தேங்கி நிற்கும்
மனித உறவுகளின்
கசப்புகளை
புன்னகைகள் மூடிவிடும்.

தன் சுழலில் தான் சுழன்று,
தன் துயரில் தான் அழுது,
எப்போதும் தனித்திருப்பதன்
நிஜம் உணர்ந்தால்தான்
சிரிக்கவே முடிகிறது...!

## 2.

என் நண்பர்கள் யாவரும்
விலகிப் போயிருக்கும் கணத்தில்
எனக்கென
யாருமற்ற தனிமையும்
தவிப்புகளும் உணர்ந்து அழுதபோது —
எங்கிருந்தோ ஒரு குரல் அழைக்கிறது.

யாரது?
முகம் தெரியவில்லை.
அது சொன்னது:

"நானே சத்தியமும்
ஜீவனுமாயிருக்கிறேன்.
நான் உன்னைக் கைவிட மாட்டேன்!"

ஏசுவின் குரலா?
'யாரது?' என்று உரக்கக் கேட்டேன்.
மௌனம்.

உற்றுக் கேட்டேன்:
உள்ளத்திலிருந்து ஒலித்தது அது-
"நான்தான்!"

படிப்பகம்

www.padippakam.com

# தாய் மொழியும் தந்தை மொழியும்

மா. அரங்கநாதன்

வைதிகம் என்பதோடு சமஸ்கிருதம் மட்டுந்தானா சம்பந்தப்பட்டுள்ளது, தமிழ் இல்லையா என்ற கேள்வி நியாயமாகவே எழக் கூடியது. எபிரேயத்தில், கிரேக்கத்தில், இலத்தீனில், ஏன் ஆங்கிலத்தில் கிடையாதா என்றும் கேட்க முடியும்.

எங்கும் இருந்ததும் இருப்பதும்தான் அது. இந்நாடு அதிலே பல விசேடங்களைக் கொண்டு விட்டதுதான் முக்கியம்.

இந்த வைதிக எதிர்ப்பு பிராம்மண எதிர்ப்பு அல்ல. சிலர் தங்களுக்கு வேண்டாத பிராம்மணரை எதிர்க்க இதைப் பயன்படுத்தியிருக்கலாம்.

வைதிக எதிர்ப்பு காலங்காலமாக இருந்து வருகிறவொன்று. அது இம்மண்ணின் வேர்களிலிருந்து கிளம்பியதாகும். அப்படியானால் எப்போதும் இருந்து கொண்டுதானிருக்குமா, வெற்றி பெறாதா என்ற கேள்வியும் எழும். அப்படிப்பட்ட இரண்டாந்தர மூன்றாந்தர சிந்தனைகள் ஏற்பட்டதன் விளைவைத்தான் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஜார்ஜ் ஆர்வெலின் மிருகங்கள் பண்ணையாக மாறிக்கொண்டிருக்கும் கதை அது.

வைதிக எதிர்ப்பு என்பதே அதைத் தெரிந்து கொள்வதுதான். எது வைதிகம் என்பதைத் தெரிந்து கொள்வதிலேயே வைதிக எதிர்ப்பு அறியப்பட்டுவிடுகிறது. நடவடிக்கைகள் தொடர ஆரம்பித்துவிடுகின்றன. திருமூலர், சிவவாக்கியர், வள்ளலார் போன்ற சித்தர்கள் வெளிப்படையாகவே சொன்னார்கள் என்றால், திருவள்ளுவர் இளங்கோ போன்ற பெரியவர்கள் தமிழ் மரபைச் சொல்லி அதை உணரச் செய்தார்கள் எனலாம் வைதிகம் சிலவற்றைத் தன்னுடையதாக்கி வெற்றி கொண்டதற்கு அவ்வப்போது மன்னர்களே காரணம். வைதிகத்தை எதிர்த்த புத்தரின் தத்துவம் வைதிக மடங்களால் பின்னர் சுவீகரித்துக் கொள்ளப்பட்டன. பக்குவமாக ஞானஸ்நானம் நடத்தி முடிக்க உதவியவர்கள் மன்னர்கள்தாம். வேத காலத்தில் இருந்த எதிர்ப்பும் தெரிந்ததுதான். அப்போது நிலவிய எதிர்ப்பு பணியரிடமிருந்து.

படிப்பகம்

www.padippakam.com



அதுவும், 'கடவுள் என்பது 'இல்லை' என்பதாகும்' என்ற சமண நெறியும், இல்லை இல்லை என்பதால் அது உண்டு என்ற தென்னாட்டுச் சிந்தாந்தமும், தொல்காப்பியத்திற்கு முன்னரே நம்மிடையே புழங்கி வந்த கடவுள் என்ற தமிழ்ச் சொல்லின் பொருளும் சம்பந்தம் உடையது என்று சொல்ல முடியும்.

துளசி என்னும் செடியின் இலை மருத்துவ குணம் கொண்டது என்பதைக் கண்டு கொண்டவன் வைதிகன் அல்லன். அவன் ஓர் அறிவியல்வாதி. மதவாதிகள் அந்த அறிவை தங்களுடையதாகப் போற்றி சாதகமாக்கிக் கொண்ட உடனேயே, அந்த அறிவு எல்லாருக்கும் பயன்பட தடை ஏற்பட்டுவிடுகிறது. எப்போதாவது இந்தத் துளசி உடல் நலத்திற்குக் கெடுதி என்று தெரிய வந்தால் அந்த விஞ்ஞான அறிவையும் தனதாக்கிக் கொள்ளும் தந்திரம் படைத்தது வைதிகம்.

இதை அறிந்து கொள்வதுதான் வைதிக எதிர்ப்பு. பல உருவங்களில் வரும் வைதிகமும் அதற்கு எதிர்ப்பாக நிற்பனவும் நின்று மோதுவதைக் கவனித்தால் உண்மை புலப்படும்.

இந்த நாட்டைப் பொறுத்தவரை மொழி என்ற வகையில் தான் வைதிகமானது, அதிக வினையை விதைத்துள்ளது. வேறு வகையில் குறைவாகத்தான் சொல்ல வேண்டும்.

மொழி என்பதின் வாயிலாகக் கலைகள் யாவும் சமஸ்கிருதத்தின் பிறப்பிடம் என்ற மாயத் தோற்றத்தைப் படிப்பற்றவரிடையே ஏற்படுத்திக் கொண்டு நின்றதும் வைதிகம் தான். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை இது ஒரு பெரிய துரோகமாகக் கருதப்படுகிறது. மற்றையத் திராவிட மொழிகளில் இப்படியல்ல. அதன் முக்கிய காரணம் வடமொழி இலக்கியங்களான ராமாயண - பாரதக் கதைகள்தாம் அம்மொழிகளில் முதல் இலக்கியங்களாக வந்தன. தமிழில் அவ்வாறல்ல. இதுவே தமிழிற்கும் மற்ற திராவிட மொழிகளுக்குமான பெரிய வித்தியாசமாக நிற்கிறது. சமஸ்கிருதம் தவிர ஒரு மொழியின் பெருமை பேசுவது- அதாவது எல்லா மொழிகளுக்கும் சமஸ்கிருதம் தாய் என்று சொல்லிவிட்டு தத்தம் மொழியைப் புகழ்ந்து பேசுவது தவிர- தமிழைப் புகழ்வது நாட்டு ஒற்றுமையைக் குலையச் செய்வதாகும் என்று அபாண்டம் சுமத்துகிற அளவுக்குப் போய்விட்டது.

தமிழ் என்னும் மொழி இந்நாட்டில் வேதங்கள் வருவதற்கு முன்பேயே இருக்கிறது. அது சமஸ்கிருதம் போல

படிப்பகம்

www.padippakam.com



ஐரோப்பிய உறவு கொண்ட மொழி அல்ல என்று சொன்னால் இந்திய மக்கள் பெருமையல்லவா அடைய வேண்டும். அவ்வரலாற்று உண்மை எப்படி ஒற்றுமையைக் குலைக்கும்? வடமொழி என்னும் சமஸ்கிருதம் இந் நாட்டில் வந்து சீர் அடைவதற்கு முன்பு இங்கே நாகரிகமோ மொழியோ இல்லை என்பவனது நாட்டுப்பற்றை தமிழ் மக்கள் சந்தேகிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஒரு மதவாதியாகவோ வெறியனாகவோதான் இருக்கமுடியும். அப்படிப்பட்டவர்களில் சிலர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவராக இருந்தால் கூட, அப்படி ஈடுபட்டது இம்மாதிரி வைதிகத்தையும் தங்கள் மொழியை மீட்கவும்தானேயொழிய மக்கள் நலனுக்கு அல்ல என்று தமிழர்கள் எண்ணத்தான் செய்வார்கள்.

சில சொற்களைத் தமிழில் சேர்த்துக்கொண்ட அளவில் தான், வடமொழியானது வைதிகத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. அது சில காலமாக ஆங்கிலச் சொற்களை நாம் ஏற்றுக் கொண்டது போலத்தான். மரபையும் நாகரிகத்தையும் ஒன்றும் அவர்களால் பண்ணிவிட முடியவில்லை. ஆங்கிலத்திற்கும் சமஸ்கிருதத்திற்கும்தான் என்ன வித்தியாசம்? போப்பாண்டவர் இந்தியாவிலுள்ள கிறித்தவர்கள் சமஸ்கிருதம் பயில வேண்டும் என்று சொன்னதில் வரலாற்று உண்மை உண்டு. ஐரோப்பியப் பல்கலைக் கழகங்களில் சமஸ்கிருத மொழியைச் சேர்த்துக் கொண்டு பாராட்டுவதிலும் உண்மை உண்டு. தமிழ்ப் பெயர்களை உச்சரிக்க முடியாமல் திண்டாடும் தொலைக்காட்சி (தில்லி) ஐரோப்பிய பெயர்களில் கஷ்டப்படுவதில்லை என்பதும் உண்மை. அவ்வகை உண்மை இரகசியமாகவே பரிபாலிக்கப்பட்டு வந்தது. இனிமேலும் அப்படியேயிருந்துவிட முடியும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகவே கல்வியறிவை இதுகாறும் தமிழரிடையே தடுத்து வந்தார்கள். இப்போது காரியம் மிஞ்சிவிட்டது. என்ன செய்வது? ஓர் இனம் கலப்பு இனத்தது என்று சொல்லிக் கொள்ள எந்த சங்கோசமும் பட வேண்டிய நூற்றாண்டு அல்ல இது. எந்த மரபையும் மொழியையும் அவர்கள் சார்ந்துள்ளனர் என்பதை அவர் அவர்கள்தாம் தீர்மானித்துக் கொள்ள முடியும்.

எல்லா இனத்திலும் மொழியிலும் நல்லவரும் நல்ல இலக்கியங்களும் உண்டு. இரண்டு மரபுகளுக்கிடையே சிக்கிக் கொண்டுவிடுவதில் கஷ்டங்கள் இருக்கலாமேயொழிய கேவலமொன்றும் இல்லை. கம்பன்கூட இரு மரபுக்குள் சிக்கியவன்தான். வள்ளுவன் - இளங்கோ சித்தர் - வள்ளலார் போன்றோருக்கு அந்த நிலை ஏற்படவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



"ஆரிய மொழிகளின் தோற்றம், உண்மையான இலக்கணம் ஆகிய நிலைகளை நான் இந்தத் தமிழ் மொழியின் மூலமாகவே முதன் முதலில் உணர முடிந்தது."

பகவான் என்று போற்றப்படும் அரவிந்தரின் மேற்படி உரையை வைதிகர்கள் ஏற்றுக் கொள்வர் என்று நம்புவதற்கில்லை. இது தேசபக்திக்கு குந்தகம் விளைவிக்கும் ஒன்று என்று அந்த மகானையும் ஒதுக்கி வைக்க ஆரம்பிக்கலாம். ஆனாலும் இங்கே ஒரு சங்கராச்சாரியிடத்தில், வள்ளளார் கூறியவைதாம் நம்மைப் பொறுத்தவரை வரலாற்று உண்மை.

நமக்குத் தாய்மொழி - தந்தைமொழி எல்லாம் தமிழ்தான்.

(நிறைவு பெறுகிறது.)

---

## கி. ரா. என்ற கதை சொல்லியும்... தொடர்ச்சி

தாக பாவித்த சம்சாரியின் லிங்கத்தை வேறு வழியின்றிச் சப்பிய கடைக்காரனின் "கடை என்னாச்சின்னு கேக்கிற உங்களுக்கு ஊர்க்காரர்கள் சொன்ன பதிலே இங்க எழுத முடியாது" (பக். 17) என்று கி.ரா. எழுதுகிறார். இங்கே வெகுமக்களின் வாரப் பத்திரிகைத் தொடருக்கான உத்தியோடுகூட, பாலியல் கதையின் ஒரம்சத்தைத் தணிக்கை செய்திருப்பதும் புரிகிறது. "உங்களுக்கு" என வாசகரை விளிக்கிறபோது, ஆசிரியர் தம்மை பாலியல் கதைகளைக் கேட்டு, அவற்றை வாசகர்க்கு ஏற்ப அறிவிக்கும் ஒரு மூன்றாம் நபராகக் காட்டுகிறார். அதே சமயம், அக்கதைகளின் 'உபரியான பாலியலை' (surplus sex) தணிக்கை செய்பவராகவும் தம்மைக் காட்டுகிறார். அவர் ஓர்மையின்றியே மேலாதிக்கப் பண்பாட்டின், அதன் அதிகாரத்தின், அதன் நீதி முறையின் தணிக்கையாளராக ஆகிவிடுகிறாரல்லவா?

இத் தணிக்கையால் ஏற்படும் விபரீத விளைவுகளையும் காண வேண்டும். ஆசிரியர், கதைகளில் 'தகாத' பால் உறுப்பு, செயல், பேச்சுகளை எழுதுகிறபோது கையாளுகின்ற 'இடக்கரடக்கலான' குறியீட்டுச் சொற்களும், தொடர்களும் மூலத்தில் நாட்டுப்புறக் கதைகளில் கொப்புளிக்கின்ற குசும்பு, கும்மாளம், குமைத்தல், விளையாட்டு முதலான கட்டுமான வெளிப்பாடுகளை இடம் பெயர்த்துவிட்டு நடுத்தர வகுப்பினர் படித்து ரசிக்கும் dirty jokes-களாகக் கதைகளை ஆக்கிவிடவில்லையா?

எடுத்துக்காட்டாக, 'திருவாளர் அத்தை கொண்டான்' கதையில் இடம் பெறும், 'ரொம்ப நேர்த்தியாகவும் உறுதியாகவும் செஞ்சிருக்கலாம்', 'ரொம்ப நல்லாச் செஞ்சி பொருத்தியிருக்கலாம்', 'ஒங்க மாமனாருக்குக்கூட இப்படி வாய்ப்பா அமையலியே', 'வெள்ளோட்

படிப்பகம்

www.padippakam.com



டம்' (பக். 29) முதலான இரட்டை அர்த்தம் தரும் சொற்களும் தொடர்களும் மூல பாடத்திலுள்ள மாசற்ற தன்மையைப் பாழடிக்க வில்லையா? எவற்றை நாசூக்காக, படித்த நடுத்தர வகுப்பு, நகர்ப் புற வாசகர்களுக்குப் பிரபல பத்திரிகை வழியாகத் தணிக்கை செய்து கூற நினைத்தாரோ, அவை இரட்டை அர்த்தம் தொனிக்கிற சாதா ரண- விகாரமான- நகைச்சுவை என்ற விபரீதத்தை உண்டாக்க வில்லையா? ஆதிக்கப் பண்பாட்டின் சுயரூபம் இங்கே வெளிப்படு கிறது. இதன் கபடத்திற்குப் பெயர்தான் நாசூக்கு! இப்படி ஆக் கிய பிறகு கி.ரா. இதற்குப் பண்பாட்டு மானுடவியல் விளக்கங் களைச் செந்தரப்பட்ட தமிழில் (Standard Tamil) கூறுவதால், தொடர்ந்து அடுக்கடுக்கான விபரீதங்களே தோற்றுவிக்கப்படுகின் றன. மற்றொரு கதையில் 'அவளோட அடிவயித்துக்குக் கீழே உள்ள 'கொகை'க்குள்ளெ தள்ளி மூடிக்கிட்டாளாம்' (பக்கம் 33) என்பதில, இடக்கரடக்கலாகப் பெய்யப்பட்ட 'குகை' என்ற சொல் மூலச் சொல்லைவிடப் பல மடங்கு விகாரப் பதிவை ஏற்படுத்துகிற தல்லவா? நாட்டுப்புற மக்கள் குழுவிற்குள் அவர்களுக்கே உரிய இயல்பான அகராதியில் உள்ள, புழங்குகிற, அர்த்தப்படுகிற, ஒரு சொல், தணிக்கையாளரின் குறுக்கீட்டின் காரணமாக, மேலாதிக்க கபட நாகரிகத்தில் விகாரமான அர்த்தப் பரிமாணத்தைப் பெற்று விடுகிறது.

நாட்டுப்புற மக்களிடம் இச் சொற்கள் மனக் கரவின்றி வெளிப் பட்டு, விளையாடி, ஏற்படுத்துகிற மன நிலை வேறு; இவையே இடக்கரடக்கலாக, இரட்டை அர்த்தம் தரும் தொழில் நுட்பத்தில் இடம் பெயர்ந்து வேறுவித சமூக தளத்தை எட்டுகிறபோது ஏற்படுத் தும் மன நிலை வேறு. மேலாதிக்கக் கபடப் பண்பாட்டில், எளிய நாட்டுப்புறப் பாலியல் பகடிக் கதைகள் நடுத்தர வகுப்பாரின் வக்கிர மான ரசனைக்குரிய பண்டங்களாகவே சிதைந்துவிடுகின்றன. பூர்ஷ்வா பத்திரிகைக்கும், பதிப்பகத்தார்க்கும், ஆசிரியர்க்கும் இப் பண்டங்கள் வாசகச் சந்தையில் செலாவணியாகி இலாபத்தைத் தருகின்றன. மொத்தத்தில் விற்பனைக்கு ஏற்றபடி பாலியல் கதை கள் 'பாலிஷ்' செய்யப்பட்டுள்ளன. பாலிஷ் பண்பாட்டுக்குப் பாலிஷ் தேவையல்லவா?

ஆசிரியரின் தணிக்கை முறையால் பூடகமாக்கப்பட்ட மூலப் பிரதி, தன் பூர்வ விகாசிப்புகளை இழந்துவிடுகிறது. இது, தற்போ துள்ள கபடமான மேலாதிக்க ஒழுங்கமைப்புக்குள்ளே, இதனை அவஸ்தைப் படுத்துகிற, விலக்கப்பட்ட பண்பாட்டை முடமாக்கி, வக்கிரப்படுத்துவதில் சென்று தேய்கிறது. இதனை ஒட்டி இந்த நூலுக்கு இடப்பட்ட தலைப்பையும் காண வேண்டும். 'வயது வந் தவர்களுக்கு மட்டும்' என்ற தலைப்பு பல்வேறு குறிப்புப் பொருள் களை ஏக காலத்தில் குறிப்பீடு செய்கிறது.

**— கட்டுரை அடுத்த இதழில் நிறைவு பெறும்.**

படிப்பகம்

www.padippakam.com

# கவுச்சி ஆசை

**கரிகாலன்**

அலமேலு அப்பதான் வூட்டுக் குத்திரும்பியிருந்தாள். சனிமூல வூட்டுகாரருக்கு நடவு நடற வேல. படையாச்சி, சேத்துல நாத்து கட்ட கலச்சிகிட்டு 'கீரி போட்டு நெருக்கமா நடுங்க'ன்னு பக்கத்திலேயே நின்னுகிட்டிருந் தாரு. அங்க ஒரு குத்து இங்க ஒரு குத்துன்னு ஆவாட்ட முடியல. குனிஞ்சிகிட்டு நட்ட தால நாந்த ஒரே வலியா இருந் தது. கூட நட்ட காசாம்பு, அன் னப்பூ, நரம்பி, கன்னியம்மா வெல்லாம் வரும்போது வாய்க் கால்ல நண்டுபுடிச்சாளுவ. நண்டு ரசம் ஒடம்பு வலி வாங்கும்னு காசாம்பு சொல்லுவா. அலமேலு இன்னக்கி வேற திட்டத்தில இருந்தா.

காலயில கோழிவொள தொறந்து உடுறப்பவே கவ னிச்சா. மயில பொட்ட தலய குத்திட்டிருந்தது. நேத்தியி லேர்ந்தே எறயெடுக்குல. நோவு கண்டுட்டுது. ஒரே காங்க. மாடு கன்னுவொளுக்கு கூட கோமாரி வந்துட்டுது. அன காத்து மனுசாளையே வாட்டி வதச்சிது. நோவு கண்ட கோழிய கோழிகாரனும் வாங்க மாட்டான். பொய்சாய நசுக்கி கொழம்பு வச்சிட வேண்டியது தான்னு நெனச்சா.

அவ ராசியோ என்னவோ குஞ்சுங் குளுவானுமா பெருகியி ருந்தது. பக்கத்து ஊட்டுகாரி வொளுக்கு ஒரே பொறாம. கோழியால நெதமும் ஏதாவது சண்டைவரும்.

"வாசல்ல வந்து கழிஞ்சு வய்க்கிதே... இப்புடியா வெவஸ்த கெட்டு போயி கோழி வளக்க சொல்லுது...வித்து காசிய கொட் டிக்கிறது யாரு... ரயிச்சி பீ வாரி கொட்றது யாரு?" பக்கத்து ஊட்டு பொன்னம் பொண்டாட்டி பொழுது விடிஞ்சி பொழுது போனா புழுத்த பாட்டு உட்டு அடிச்சா.

"தெரு வாசபுடியில யெதா வாது காயவய்க்க முடியுதா... இந்த கோழிவொ பண்ணுற அஷ்ட்ட காரியம் தாங்க முடி யுல... தின்னுட்டு போறதோட வாயிருக்கு? சீய்ச்சி வேறெல்ல உட்டுடுது. கோழி வளக்க கெளம் பிடுராளுவ கோழி... இவளுவள் ளாம் யெங்கியாவது பொறம் போக்கு புளியமரமா பாத்து நாணுகிட்டு தொங்கலாம்." எதுத்தால வூட்டு தொறையூரா தொண்ட கிழியராப்ல கத்துவா.

பாட்டு வாங்கி பாட்டு வாங்கி கறி சங்கி போயிட்டுது அலமே லுக்கு. கோழி வளக்குணும்னா இதையெல்லாம் பாத்தா முடி யாது. சில சமயம் இத உட்டு டாலாம்னு நெனய்ப்பா.

"ரைசுமில்லுகார படையாச் சிய பாருடி. கோழி வளக்குறாரு, பொறா வளக்குறாரு, வாத்து வளக்குறாரு. பன்னிகூட வளக் குறார்டி... பீயில காசி கெடந் தாலும் நக்கியெடுக்குற ஒல கண்டி. பறசாதிக்கு புள்ள பொறந்துட்டு மானத்த பாத்தா முடியுமாடி. எப்பேர்பட்ட குதி ரையே எரவாணத்த புடுங்கு தாம்.., போடி, போய் பொழப்ப பாரு." காப்பிரி பொண்டாட்டி தான் தேத்தி அனுப்புவா.

படிப்பகம்

www.padippakam.com



கோழி சண்டையும் புருஷம் பொண்டாட்டிவ சண்டையும் ஒண்ணுதான். காலயில சண்ட போட்டுக்கும். நடவு நடறப்ப, கள வெட்றப்ப அதயெல்லாம் மனசுல வச்சிக்காம பேசிக்கும்.

எல்லாந்தான் கோழி வளக்குராளுவ. எல்லாத்துக்குமா பலுவுது. இவ அவயம் வய்க்கிறது மட்டும் வச்சது வச்ச படியே பொறிச்சது, குஞ்சு பொறிச்சா குங்குமத்த தண்ணியில கரச்சி நனைப்பா. செவப்பாயிடும். இப்படி செஞ்சா அடையாளம் தெரியாமலோ, பயந்துகிட்டோ பெறாந்து தூக்காதாம். குஞ்செல்லாம் கொஞ்சம் பெரிசா வுரமட்டும் தாய் கோழியோடவே சேந்துகிட்டு இவளும் காபந்தாயிருப்பா. குஞ்சிவொளுக்கு காட்டுபூனையும் கீரிபுள்ளயும் எங்கெயெங்கன்னு இருக்கும்.

இவ்ளோ கோழி வளக்குராளேயொழிய ஒரு கோழிய அடிக்கமாட்டா. ஒரு முட்டய வெவுச்சி புள்ள கையில கொடுக்க மாட்டா. இத்தனய்க்கும் ஊட்டுக்காரஞ் சின்னய்யனுக்கு கறின்னா உசுரு. நாக்க ஒலாத்திகிட்டு நிப்பான்.

ஒரு கோழி முப்பதி லேர்ந்து நாப்பது வரைக்கும் விக்கும். முட்ட எண்பது காசி. படையாச்சி வூட்டம்மாளுவ வாங்கிட்டு போவும். ஏதாவது ஒரு செலவு அடங்கும்னு நெனப்பாளே யொழிஞ்சி அடிச்சி ஆக்கி திம்போங்ற எண்ணமே வராது. சின்னய்யன் பண்ண வேல செய்ற ஆண்ட வூட்டுக்கு மட்டும் பொங்கலுக்கு பொங்கல் கோழி கொண்டு குடுப்பான். பதிலுக்கு ஆண்ட ஒரு மண் பான, கைலி, கொஞ்சம் நெல்லு, வெல்லம், தேங்காயெல்லாம் கொடுப்பாரு.

அவன் எவ்வளவு கெஞ்சி கேட்டாலும் கோழி மட்டும் அடிக்கவே மாட்டா. ஆண்ட வூட்டு நெல்லு கொல்லயில எலி புடிக்கிறத்துக்கு கரண்டு கம்பி இவந்தான் போடுவான். விடியக் காலயிலயே எலி எடுக்கூறத்துக்கு ஓடுவான். நேரா லயன் லேர்ந்தே சொரட்டுல ஒயர சுத்தி கரண்டு எடுத்திருக்கும். மொதல்ல சொரட்டு கழிய லயன் லேர்ந்து எடுத்துட்டு அப்புறமா கொல்லயில எறங்குவான். ராத்திரி முழுசும் பேஞ்ச பனியால சோலயில முத்து முத்தா பனித் தண்ணியிருக்கும். கைலிய அவுத்துட்டு அண்ராயரோடதான் நிப்பான். பட்டம் ஒதுக்கியிருக்கும் எடவெளியில் முழுங்கிகுச்சி சொருவி அதுமேல கம்பி போட்டிருக்கும்.

இப்படி போடுறது தப்புதான். எல்ப்பருக்கு தெரிஞ்சா மோட்ரு பீஸ் கட்டய புடுங்கிடுவாரு. ஆண்டய்க்கு தெரியும் அவுர எப்படி கவனிக்கணும்னு. கிட்டி போட்டு புடிக்கலாம். ஆபத்து எதுவும் இருக்காது. எலிக்கு ஒரு ரூவா கேப்பானுவ. ஏழெட்டு காணி நட்டுருக்காரு ஆண்ட. ஒரு நாளைக்கு நூறு நூத்தம்பதுன்னு விழும். கட்டுபிடியாவாது.

கம்பியில என்னென்னுமோ விழுந்திருக்கும். பெரிசு பெரிசா நொர தவுக்கள, காட்டு பூன, நரி, ஒவ்வொரு நாள்ல அவுத்துகிட்டு வந்து மேயுற மாடு கூட வயிறு உப்பி கெடக்கும். ஒரு தரம் குடிச்சிட்டு வந்த காத்த

படிப்பகம்

www.padippakam.com



டிச்சாம் மொவன் விழுந்துட் டான். ஆண்ட கா காணி எழுதி வய்க்க வேண்டியதாயிட்டுது.

அப்படி விழுந்து கெடக்குற எலிய எடுத்துகிட்டு வருவான். பெரும்பாலும் அவன் வாழ் நாள்ல தின்னதுலேயே எலிகறி தான் அதிகமிருக்கும். எண்ண செலவாவும்னு அதயும் வறுத்து கொடுக்க மாட்டா அலமேலு. ஏழெட்டு எலிய ஒண்ணா போட்டு, வைக்கல கொளுத்தி சுடுவான். மசுரெல்லாம்பொசுங்கி வெறச்சி கெடக்கும். கொடல எடுத்துட்டு உப்ப போட்டு தேச்சி மொளா தூளயும் உப்பையும் வயித்துக்குள்ள திணிச்சி திரும்பியும் சுடுவான். கூடவே அவம் மவன் கோளாரும் ஒத்தாச பண்ணுவான். அவன் மவனுக்கு வீரமணின்னுதான் பேரு வச்சிருந்தான். எப்பவும் யேதாவது எடக்கு பண்ணிகிட் டேயிருப்பான். அதனால கூட மாடு மேச்ச பசங்க 'கோளாரு' ன்னு கூப்பிட்டானுவ. பெத்தவ னும் வச்ச பேர மறந்து கோளா ருன்னே கூப்ட ஆரம்பிச்சான்.

சுட்ட எலிய கடிச்சிகிட்டே கூழு குடிப்பார்கள். எப்பவாவது படையாச்சி ஊடுவொள்ள மாடு செத்துச்சுன்னா தூக்கிட்டு வந்து பறையங் குட்டையில போட்டு அறுப்பாங்க. மழ நாள் தவிர மத்த நாள்ல பறையங் குட்டயில தண்ணியிருக்காது. மாடடிக்கிற எடமாவே ஆயிட்டது. அப்பெல் லாம் சின்னய்யன் பங்குக்கு ஒரு கிலோவோ ரெண்டு கிலோவோ கெடய்க்கும். உசுரு மாட்டுக்க கறிய தீவாளிக்கோ பொங்கலுக் கோதான் எடுப்பான்.

ரெண்டு நாளய்க்கு ஒரு தரம் கவுச்சி திங்கலன்னா நாக்கு செத்துட்ட மாதிரியிருக் கும். கோளாருக்கு கேக்கவே வேணாம். கறியில்லாம கூழு உள்ளாற எறங்காது.

எப்பவாச்சும் கருப்பங் கொல்ல உள்ளார காட கவுதாரி ஆம்புடும். அண்ணய்க்கு ஒரே கொட்டாட்டம்தான். ரோட்டுக் கடயில கடஞ்சொல்லியாவது எண்ண, மொளாதூளு, மசாலா பொட்டலம்லாம் வாங்குவான். ஊருதெருவுல புழுங்கரிசியும் அப் படியே வாங்கிப்பான். கறி சோற வெறுமெனே சாப்புடப் பிடிக் காது. சாராயத்தோட சாப்புட் டாதான் சாப்புட்ட அடவாவே யிருக்கும். அலமேலுக்குங் கொஞ்சம் ஊத்திக் கொடுப் பான். ஒடம்பு அசதி தீரும்னு அவளும் குடிப்பா.

சின்னய்யனுக்கு ஆட்டுக்கறி சாப்பிடணும்னுவெவரம்தெரிஞ்ச நாள்லர்ந்தே ஆச. முழுசா ஒரு கிலோ வாங்கி அர கிலோவ கொழம்பு வச்சி, அர கிலோவ வறுத்து, சாராயத்த குடிச்சிக் கிட்டே திங்கணும்ங்கறது வாழ் நாளில் அவனுக்கு பெரிய லட்சி யமாயிருந்தது. ஆட்டுக்கறி கிலோ அம்பது ரூபா வித்தது. ஆண்ட ஊட்டம்மா நாளு கெழ மன்னா போடும். வெறுங் கொழம்புதானிருக்கும். பேருக்கு யேதாவது ஒரு எலும்புத்துண்டு கெடக்கும். சுடுகாட்டுக்கு போற துக்குள்ள முழுசா அர கிலோ ஆட்டுகறி சாப்பிட முடியுமாங் குறது அவனுக்கு சந்தேகமா கவேயிருந்தது.

★

எல்லா கோழியும் அடய திரும் பிட்டுது. மயில பொட்டய மட்டும்

படிப்பகம்

www.padippakam.com



தனியா கூடயில கவுத்து போட்டிருந்தா. திறந்தாள். தவுட்டு மேல வெள்ள வெள்ளயா கழிஞ்சிருந்தது. தூக்கி பாத்தா. அர கிலோ தேரும். சரியான பதம். இன்னும் முட்ட விட் ஆரம்பிக்கல்ல. 'சொர பிஞ்சிலயும் கோழி குஞ்சுலயும்' ஆக்கணும்பாள் காசாம்பு.

ஊட்டுக்கு பின்னால எடுத்துட்டு போனா. கவுச்சி அருவா மணயால தலய அறிஞ்சா. கால விலுக் விலுக்குன்னு ஓதச்சிகிட்டு முண்டம் துடிச்சிது. செத்த நாழியில அடங்கிட்டுது. எடுத்து சட்டியிலர்ந்த சுடு தண்ணியில அமுத்தினாள்.

"அலமேலு, ஏ புள்ள அலமேலு,யெங்கடி போயிதொலஞ்ச. தடி செறுக்கி, இன்னம் கோழிய கூடயில கவுக்காம." ஆண்ட வீட்லேர்ந்து திரும்பியிருந்தான் சின்னய்யன்.

"தே... சும்மா கத்தாதயங்... அத புடிச்சி கவுத்துட்டு இங்க கொஞ்சம் வந்துட்டு போ."

கோழியயெல்லாம் கவுத்துட்டு சந்து வழியா பின்னால போனான். கோழி மசுர புடுங்கிகிட்டுருந்தா.

"இந்தாய்யா, இதுல மஞ்சள தடவி அறிஞ்சி சட்டியில போடு. தே மொளா அறச்சிட்டு வந்துடுறேன்."

மசுருகிசுருயில்லாம உறிச்ச கோழி வெள்ளயாயிருந்தது. நாக்கில் எச்சி ஊறியது. காலையிலயே சொல்லியிருந்தா பொய் சாய கோழி அடிக்கிறதா. சின்னய்யன் ஆண்ட மவனிடங் கெஞ்சி கூத்தாடி சாராயத்துக்கு காசு வாங்கி வச்சிருந்தான். 'ஒடம்பு சரியில்ல. ராத்திரி மோட்ரு ஓட்ட வரமாட்டன்'னும் சொல்லிட்டு வந்துட்டான். ஒடம்பு சரியில்லன்னா சாராயந் தான் மருந்து.

ஊருல யாருக்கோ கல்யாணம் போலிருக்கு. ரேடியோ பாடுற சத்தம் தெக்குத்தி காத்துல நல்லா கேக்குது. சட்டியில எல்லாத்தயும் அறிஞ்சி போட்டிருந்தான்.

"இந்தா புள்ள வந்து எடுத்துட்டு போ. சீக்கிரமா கொழம்பு வை. பசி கொடல கிள்ளுது.... அதுக்குள்ள மேலவளி வரைக்கும் போயிட்டு வந்துர்றன்."

அலமேலுக்கு புரியும் சாராயக் கடைக்குதான் போறான்னு. "என்க்குங் கொஞ்சம் வாங்கிட்டு வாய்யா. பொழுதேனிக்கும் குனிஞ்சிகிட்டே நட்டது முதுவு எலும்பே முறிஞ்சிடுராப்ல யிருக்கு."

ஊட்ட தாண்டி பறையங் குட்டகிட்ட வந்தான். கோளாரு கோட்டி புள்ளு வெளயாண்டுகிட்டிருந்தான். "எலா... இன்னம் என்னடா வெளயாட்டு... ஓடுறா ஊட்டுக்கு. பொழுது போன நேரத்துல கோட்டி அடிச்சி மண்டய ஒடச்சிகிட்டினா இங்க யாரு முடிச்ச அவுக்குறது. ஓடுறா."

எவ்வளவு நாளாச்சி அலமேலுவோட படுத்து. வீரமணி பொறந்து அஞ்சாரு வருசமாயிட்டுது. அதுக்குப் பொறவு ஒரு தரம் உண்டாச்சு. அதுவும், வேணா வேணான்னு சொல்ரப்பவே பெரசண்டு கொல்ல திருத்த மண்ணு தட்டு தூக்கப்போனா. போன எடத்துலயேகலஞ்சிடுச்சு.

படிப்பகம்

www.padippakam.com



இன்னும் ஒரு பொட்டப் புள்ள பெத்துகிட்டா போதும். பொண்டாட்டிகிட்ட படுக்கவே முடியாம இருந்தது பொழப்பு. தெனமும் ராத்திரியானா மோட்ருக்கு ஓட வேண்டியதாயிருக்கு. பகல்ல ரெண்டு பேரும் வேலய்க்கு போயிட்டா முன்னேரத்துல தான் கொஞ்ச நேரம் சேந்தாப்ல இருக்க முடியும். வேல செஞ்சுட்டு வார அசதியிலே அப்ப ஒண்ணும் செய்ய தோணாது. புல்லா இன்னக்கி ஏத்திக்கிட்டு, கோழிக்கறிய ஒரு வெட்டு வெட்டிட்டு ராத்திரி ஜாலியாயிருக்கணும்... சாராயக் கடைக்கு வந்துவிட்டான்.

ரெண்டு கிளாசை காலி பண்ணிட்டு நடக்கிறப்ப கால பின்னிக்கிற மாதிரி யிருந்தது. ஆண்ட குடியிருக்கிற தெருவுல லைட்டு எறிஞ்சிகிட்டிருக்கு. இந்த நெலமயில போனா திட்டுவாரு. ஒடம்பு சரியில்லன்னு மோட்ரு ஓட்ட வ்ராம யிப்புடி குடிச்சிட்டு ஆட்டம்மட்டும்போட முடியுதாம்பாரு. அதுவுமில்லாம மரியாதையா யிருக்காதுன்னு இந்த போதையிலும் அவனுக்கு தோணியது. ஒழுங்கியால போயிடலாம்னு நெனச்சான். ஒழுங்கியின் மேற்கால ஓரம்தான் ரெண்டு மூணு ஊடுவ இருந்தது. மத்தபடி ஒரே பீக்கருவ காடா வளந்திருந்தது. ஆண்ட சாதிவ பொம்பளங்க அங்கதான் வெளிய வாசல போவாங்க. தள்ளாடி தள்ளாடி நடந்தான். ஒரே இருட்டாயிருந்தது. காலை யாரோ பிடித்து பின்னாலிழுப்பது மாதிரியிருந்தது. பாத சரியாவே புரியல. கோழிக் கறிய நெனச்சா வயித்துக்குள்ள கப கபன்னு வந்தது.

மெதக்குராப்ல வந்தது சின்னய்யனுக்கு. நெறயா கெட்ட வார்த்தய்கள உளறினான். தட்டு நெறயா புழுங்கரிசி சோத்த போட்டு சொள சொளன்னு கொழம்பு ஊத்தி ஒரு வாய்க்கு ஒரு கறித்துண்டா கடிச்சிகிட்டே திங்கணும். நாக்கு செச்சங் கெட்டு கெடந்தது. சப்புகொட்டி கொண்டான்.

கால் ரெண்டும் மோசமாய் பின்னிச்சு. அடி வய்க்கிறதுக்கு செரமப்பட்டான். கோழிக்கறி வாசத்த நெனச்சா போத அதிகமாச்சி. சப்பை எலும்ப எடுத்து கடிச்சியிழுத்து நல்லா உறிஞ்சணும். கால் எதிலோ பட்ட மாதிரியிருந்தது. மெத்துன்னு அழுந்தினதுதான் தெரிஞ்சது. வள்ளுன்னு பல் பதிய கடித்து புடுங்கியது. கடிச்சிட்டு *ஓடுறது நல்லா தெரிஞ்சுது இருட்டிலும். செத்த நாழிக்கெல்லாம் ஒண்ணும் புரியாம சுத்திகிட்டு வந்தது.

''ஊரு ஒலகத்துல யாரு குடிக்கில. இவனாட்டமா கண்ணு மண்ணு தெரியாம குடிச்சிட்டு நாய் கிட்ட கடிபட்டு வந்து கெடக்குறானே. அய்யோ கையும் புரியல காலும் புரியலயே. கிளி சோசியக்காரஞ் சொன்னது சரியாப் போச்சே. இன்னும் ஒரு மாசத்துக்கு கெரகம் சரியில்லன்னு சொன்னானே!''

''தே... யாந்தானிப்பிடி ஒப்பாரி வச்சி ஊர கூட்ரயோ. நம்ப பண்டாரம் பச்சல கொடுத்தா யெல்லாம் சரியாப் போயிடும்.'' பொன்னன் பண்டாரத்த கூப்புட ஓடினான்.

எதப்பத்தியும் கவலைப்படாதவனாய் கோளாரு உள்ள ஒ

க்

படிப்பகம்

www.padippakam.com



காந்து கறிசோறு சாப்பிட்டு கொண்டிருந்தான். அவனுக்கு நாய்க்கடி பெரிய விஷயமில்லை. சின்ன வயசுல நாய் வாயை பொளந்து உள்ளாற கைய உட்டு பாப்பான். அலட்டிக்காம வறுத்த கறித்துண்ட எடுத்து கடிச்சான்.

பண்டாரம் நாடிய புடிச்சி பாத்தான். மந்திரிச்சி தாயத்து போட்டான். உள்ளுக்கு பச்சல கொடுத்தான்.

"ஊசியெல்லாம் ஒண்ணும் வேண்டாம். பச்சல வெஷத்த முறிச்சிடும். அஞ்சு நாளய்க்கு பத்தியங் கெடக்கணும். உப்பு, புளி மொளாயெல்லாம் சேத்துக்க கூடாது. முக்கியமா கோழிகறி சாப்டக் கூடாது. அவ்ளோ பக நாய்கடிக்கும் கோழி கறிக்கும்." கிளம்பி போயிட்டான்.

வெறும் சோத்ல கஞ்சி தண்ணிய ஊத்தி பசயா கடஞ்சி கொடுத்தா அலமேலு. சின்னய்யனுக்கு கொமட்டிகிட்டு வந்தது. கெண்டக்கா சதயில வலி உசுர வாங்குச்சி. பல்ல கடிச்சிகிட்டான்.

ராகெடந்தா கோழி கறிய தொடக்கூடாது. வீணா போயிடுமேன்னு வறுத்தகறி வச்சிருந்த சட்டியில அப்படியே சோத்த போட்டு பெசஞ்சு தின்னா அலமேலு.

கயித்துக்கட்டுல்ல வாசலில் சின்னய்யன் படுத்திருந்தான். சாராய போதையில் கண்ணை யிழுத்தது. எங்கோ கனவுல வர்ரமாதிரி காத்துல மெதந்து வந்தது கோழிக்கறி வாசனை. ●

---

மின்சாரம் தடை பட்டிருக்கும் அகால வேளை;
மெழுகுவத்தியின் ஆடும் நிழல் வெளிச்சங்கள்;
பேய் உருவங்களாய்ப் பயமுறுத்தும்
வேட்டை நாயின் குரூரத்துடன்
நோக்கும் பார்வை, நீர் சொட்டும் நாக்கு;
என்னைக் கொன்றவளுக்கான
காத்திருப்பில் கழிகிறது.

அர்த்தங்களை இழந்த அபத்தக் கவிதையாய்
நின்றுகொண்டிருக்கிறேன்
பயமூட்டும் பிரம்மாண்ட மைதானத்தில்
தனியனாய்.
எனக்கென நீ கொடுத்துச் சென்றது
சில புலம்பல்கள்;
சில கவிதைகள்;
சில காத்திருப்புகள்.

ஸ்ரீராம் சுந்தர்

படிப்பகம்

www.padippakam.com

தொடர் 15

# நினைவுத் தடங்கள்

## வல்லிக்கண்ணன்

என் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த சக மாணவன் ஒருவனைப் பார்ப்பதற்காக அவன் வீட்டுக்குப் போயிருந்தேன். 'நாலாவது பாரம்' படித்துக் கொண்டிருந்த வருடம். 1934இல்.

அப்போது மணி 10 - 30. அவன் வீட்டில் இல்லை. 'உட்கார்ந்திரு, இப்ப வந்துவிடுவான்' என்று அவன் அம்மா சொல்லி, மாடி அறையைக் காட்டி விட்டுப் போனாள்.

அங்கே நிறையப் புத்தகங்கள் இருந்தன. காலேஜ் பாடப் புத்தகங்கள். (கல்லூரி என்று சொல்கிற- எழுதுகிற வழக்கம் அப்போது இருந்ததில்லை.) என் நண்பனின் அண்ணன் படிக்கிற புத்தகங்கள். அவற்றில் ஒரு பெரிய தமிழ் கதைப் புத்தகமும் இருந்தது.

கா. சி. வேங்கடரமணி எழுதிய நாவல். 'முருகன் ஓர் உழவன்.' அது காலேஜில் துணைப்பாட நூலாக இருந்தது. அதை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன். ரசமாக அது என்னை ஈர்த்தது.

புதுமையான விஷயங்கள். லட்சிய எண்ணங்கள். இனிய வர்ணனைகள். சுவாரஸ்யமான கதா பாத்திரங்கள். அவற்றிலேயே நான் ஆழ்ந்து விட்டேன்.

அந்த அறைக்கு யாருமே வரவில்லை. பரிபூரணத் தனிமை. வேங்கடரமணி சித்தரித்த உலகிலே நான் லயித்திருந்தேன்.

'முருகன் ஓர் உழவன்' தமிழ் நாவல்தான். ஆனால் அது கா.சி.வேங்கடரமணியால் தமிழில் எழுதப்படவில்லை. 'Murugan the tiller' என்று ஆங்கிலத்தில் அவர் எழுதிய நாவல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதாகும். தமிழாக்கியவர் ஒரு பெண்மணி. (கிருஷ்ணகுமாரியோ, கிருஷ்ணவேணியோ - நினைவில்லை.)

புத்தகத்தில் பெரும் பகுதியை படித்து விட்டேன். அப்போது வந்து சேர்ந்தான் நண்பன். 'ஏ நீ இங்கயா இருக்கே?' என்று வியப்புடன் கேட்டான். 'அப்பவே வந்துட்டியா?' என்றான்.

'பத்தரை மணியிலிருந்து இங்கதான் இருக்கேன். முருகன் ஓர் உழவன் அருமையாக இருக்கு. அதையே படிச்சுக்கிட்டிருந்தேன்.'

'பசிக்கலே? சாப்பிட வீட்டுக்குப் போகலே?...நான் உங்க வீட்டுக்குப் போயிருந்தேன். உன்னை காணோம். மத்தியானம் சாப்பிடவும் வரலேன்னு அம்மா சொன்னா. வீட்டிலே தேடிக்கிட்டு இருக்காங்க. சீக்கிரம் போ' என்று அவசரப்படுத்தினான்.

'இப்ப மணி என்ன?'

படிப்பகம்

www.padippakam.com



'மூனரைக்கு மேலாகுது. இன்னும் சாப்பிடாமல் இருக்கியே!' என்றான் அவன்.

'இன்னும் கொஞ்சம்தான் இருக்கு. இதை முடிச்சிடலாம்னு பார்க்கிறேன்.'

'வேண்டாம். இன்னொரு நாள் படிக்கலாம். இப்ப போ' என்று கட்டாயப்படுத்தி என்னை அனுப்பி வைத்தான் சிவசுப்பிரமணியன் என்ற அந்த நண்பன்.

நான் ஐந்தாவது பாரம் படித்துக் கொண்டிருந்த சமயம்.

என்னோடு படித்த ஹென்றி எனும் நண்பன் கதைப் புத்தகங்கள் கொண்டு தருவான். ஒரு சமயம் ஸர் வால்டர் ஸ்காட் எழுதிய சரித்திர நாவல் 'ஐவான்ஹோ', லார்ட் லிட்டன் எழுதிய 'தி லாஸ்ட் டேய்ஸ் ஆஃப் பாம்பே' முதலிய சில புத்தகங்கள் (மாணவர்களுக்காக சுருக்கி எழுதப்பட்டவைதான்) தந்திருந்தான்.

அவற்றை நான் படித்து முடிப்பதில் சிறிது கால தாமதம் ஆயிற்று. புத்தகங்களை வாங்கிப் போகலாம் என்று ஹென்றி வீட்டுக்கு வந்தான். நான் இன்னும் படிக்கவில்லை; படித்துவிட்டுத் தருகிறேன் என்றேன்.

நான்படித்து முடித்த புத்தகங்களை மட்டும் எடுத்துக் கொண்டு 'மற்றதை எல்லாம் நீயே எடுத்துக்கொள். நீ தான் படிப்பதிலே ரொம்ப ஆர்வமாக இருக்கிறே!' என்று சொல்லிப் போனான்.

பரமக்குடியில், 'சர்க்கார் விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர் ஆபி'சில் குமாஸ்தாவாகச் சேர்ந்த புதுசு. 1937 கடைசி. ஆபீஸ் கட்டிடத்தில் நான் தனியாக இருந்தேன். புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்த அலுவலகம். வேலை அதிகம் இல்லை.

அவ்வூர் சப் ரிஜிஸ்ட்ரார் ஒரு திருநெல்வேலிப் பிள்ளை. ஆபீசுக்கு வந்த அவர் என்னைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டார். 'உனக்கு பொழுது போகனும் அல்லவா? என்னிடம் நல்ல புத்தகங்கள் இருக்கு. கொடுத்து அனுப்புகிறேன்' என்று சொல்லிப் போனார்.

விவசாய ஆபீஸ் வேலையாள் அவர் வீட்டுக்குப் போய் வருவது வழக்கம். அவனிடம் ஒரு புத்தகம் கொடுத்து அனுப்பினார்.

'தி ஸிட்டிஸன் ஆஃப் தி ஒர்ல்ட்'- ஆலிவர் கோல்டுஸ்மித் எழுதியது.

கோல்டுஸ்மித் சிறந்த நாவலாசிரியர்; கட்டுரையாளர்; நாடகாசிரியர்; கவிஞரும் கூட. அவர் நடந்து நடந்தே ஐரோப்பா முழுதும் சுற்றிப் பார்த்தார். தனது அனுபவங்களை, தான் கண்ட புதுமைகளை, தான் சந்தித்த விந்தை மனிதர்களைப் பற்றி எல்லாம், சுவையான கடிதங்களாக விரிவாக எழுதினார். சீனாவில் உள்ள ஒரு கற்பனை நண்பனுக்கு எழுதப்பட்டதாக அவை அமைந்திருந்தன. எதையும் நகைச்சுவையோடு எழுதும் ஆற்றல்

படிப்பகம்

www.padippakam.com



பெற்றவர். 'எழுத்தில் அவர் தொடாததுமில்லை; அவர் தொட்டுப் பொன்னாகாதிருந்தது எதுவுமில்லை' என்று அவர் காலத்திலேயே அவரைப் பற்றி வழங்கப்பட்டது ஒரு மதிப்புரை. அவர் பயங்கர வறுமையினால் சிரமப்பட்டார். ஆயினும், நல்ல உள்ளமும் மனித நேயமும் மிகுதியாகப் பெற்றிருந்தார்.

இப் பண்புகள் அவர் கடித வடிவில் எழுதிய கட்டுரைகளில் நன்கு புலனாகும். 'ஸிட்டிஸன் ஆஃப் தி ஒர்ல்ட்' பொடி அச்சில் இருந்த பெரிய புத்தகம். நான் தினசரி ஒரு கட்டுரையாகப் படித்திக் கொண்டிருந்தேன்.

திருநெல்வேலி அபிமானத்தில் எனக்குப் படிக்க புத்தகங்கள் உதவ முன வந்த உயர்திரு. பிள்ளை, நான் அவ்வப்போது அவர் வீட்டுக்கு வரவேண்டும் என்று விரும்பினார்; எதிர்பார்த்தார். நேரிலும் அழைத்தார். வேலையாள் மூலமும் அடிக்கடி சொல்லி அனுப்பினார்.

எவர் வீட்டுக்கும் போவது எனக்குப் பிடிக்காது. வீட்டு விசேஷங்களுக்கோ கூட்டங்களுக்கோ போவதும் எனக்குப் பிடிப்பதில்லை. எனவே, நான் அவர் வீட்டுக்குப் போகவில்லை.

என் போக்கு அவருக்குக் கோப மூட்டியது. அவர் திரும்பத் திரும்பக் கூப்பிட்டும், நான் போகாமல் இருந்ததை அவர் தவறாக எடுத்துக் கொண்டார். அவருக்கு நேர்ந்த அவமரியாதையாக, அவரை நான் அலட்சியப் படுத்துவதாக அவர் மதிப்பிட்டார். நான் அகம்பாவம் பிடித்தவன் என்றும் கருதினார். 'கூப்பிட்டும் வீட்டுக்கு வராதவன் என் புத்தகத்தை மட்டும் வைத்திருப்பதேன்? உடனே வாங்கி வா' என்று ஆளிடம் சொல்லி அனுப்பினார்.

உடனேயே நான் புத்தகத்தை திருப்பிக் கொடுத்து விட்டேன்.

இப்படிப்பட்ட நிகழ்வுகளுக்கெல்லாம் முன்பிருந்தே நான் புத்கங்கள் படித்துக் கொண்டிருக்கிறேன்.

—இப்பவும் நீங்கள் அதிகம் படிக்கிறீர்கள். கண்ணாடி போட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதில்லையா?

என்னை சந்திக்கிறவர்கள் அவ்வப்போது இப்படி கேட்கிறார்கள்.

'ரொம்ப காலமாகப் படித்துக் கொண்டிருக்கிறீர்களே? படிப்பது உங்களுக்கு அலுத்து விட வில்லையா? அதில் சலிப்பு ஏற்படவில்லையா?' என்று கேட்கிறார்கள்.

எதற்காக அலுப்பும் சலிப்பும் ஏற்பட வேண்டும் படிப்பதிலே?

மேலும், படிப்பது எனக்கு பொழுது போக்கு இல்லை. அது என் வாழ்க்கையின் ஒரு அம்சம். படிப்பது எழுதுவது, ஊர் சுற்றுவது இவற்றை என் வாழ்க்கையாக விரித்துக் கொண்டிருக்கிறேன் என்று எத்தனையோ தடவைகள் சொல்லியும் எழுதியுமிருக்கிறேன் நான்.

படிப்பகம்

www.padippakam.com

தொடர்: 1

# நானும் நாடகமும்

ஜெயந்தன்

— நாடக அரங்கிற்கு வரும் ரசிகன் முதன்மையாக எதை வேண்டி வருகிறான்? வர வேண்டும்?

நாடகத்தில் தவிர்க்க இயலாதபடி எது இருந்தாக வேண்டும் என்று அவன் எதிர்பார்க்கிறான்? எதிர்பார்க்க வேண்டும்?

—நாடக அரங்கிற்கு வரும் ரசிகன் தன்னுடைய முதன்மையான நோக்கமாக தனது சகமனிதனான நடிகன் தனது ஆதிமொழியாகிய **உடல் மொழியால் இங்கே ஒரு காவியத்தை எப்படி எழுதிக் காட்டுகிறான்** என்பதைப் **பார்ப்பதற்காக** வருகிறான்.

— மற்றபடி நாடகக் கதை, கரு, செய்தி, இசை, ஒப்பனை, உடை யலங்காரம், மேடையமைப்பு, ஒளியமைப்பு என்பதெல்லாம்?

—அவை அவனது இரண்டாம் பட்சமான, மூன்றாம் பட்சமான எதிர்பார்ப்புகளே.

— நாடகத்தில் இந்த உடல் மொழிக்கு மட்டும் ஏன் இந்த அதீத மான முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது?

—இதில் அதீதம் என்றோ, கொடுக்கப்படுகிறது என்றோ ஒன்றுமில்லை. அதுதான் இயற்கை. ஒவ்வொரு கலையுமே அதற்குரிய ஏதோ உயிரணுவை ஆதாரமாகக் கொண்டுதான் எழுப்பப்படுகிறது. மனிதனுடைய அந்தந்தப் பசிக்கு சோறு போடுவதற்காகத்தான் அந்தந்தக் கலைகள் அங்கங்கே அரும்பியிருக்கின்றன. இசைக் கலை என்றால் அது அவன் காதுக்கு விருந்து படைக்க வேண்டும். சினிமா என்றால் காமிராக் கண்ணின் சாகசங்கள் இவன் கண்ணைக் குளிர்விக்க வேண்டும். கவிதை என்றால், ஓவியம் என்றால், சிற்பம் என்றால், ஒவ்வொன்றிற்கும் ஒரு நிர்வாணமான அடிப்படை இருக்கிறது. அதன்படிதான் நாடகத்திற்கு நடிகனும் அவன் உடல் மொழியும் இருக்கின்றன.

— உடல் மொழி என்று நடிப்பைத்தானே சொல்கிறீர்கள்?

—உண்மைதான். சாதாரண உப்பை Salt, Sodium Chloride, NaCl என்று மூன்று பெயர்களில் ஏன் சொல்ல வேண்டும்? மூன்று சொற்களுக்குமே குறிப்பிட்ட தேவை இருக்கிறது என்பதால்தானே? அது போலவே நடிப்பு என்பது நடிப்புதான். ஆனால் நடிப்பு என்றால் என்ன என்ற கேள்விக்கு ‘உடல் மொழி’ என்பதுதானே பதிலாகிறது? தவிர, உடல் மொழியில் நடிப்பின் வரலாறும் இருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



— இதை 'மனிதனின் ஆதிமொழியாகிய......' என்று ஏன் சொல்கிறீர்கள்?

—இங்கு ஒரு சின்ன 'போதாமை'கூட இருக்கிறது உடல் மொழி மனிதனது ஆதி மொழி மட்டுமல்ல; இன்றும்கூட இருந்து வருவதுமாகும். 'ஆதியிலேயே உண்டாகி இன்னும் அதன் தேவையோடு நிலைத்து இருப்பது' என்பதற்கான ஒரு தனிச் சொல் இருந்தால்கூட பரவாயில்லைதான். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அப்படியொரு சொல் இல்லையென்றே நினைக்கிறேன்.

— நடிப்பு என்பதற்கு அர்த்தமாக உடல்மொழியைச் சொன்னீர்கள். உடல்மொழி என்றால் என்ன என்ற கேள்விக்கு என்ன பதில் சொல்வீர்கள்?

—உடல்மொழி என்பது மனிதன் தன் வெளிப்பாட்டிற்காக (Communication) தனது உடலை ஆளுகை செய்வதும் முக பாவம் காட்டுவதுமாகும். முகபாவமும்கூட உடலை ஆளுகை செய்கிற காரியமே என்றாலும் அதன் தனிச்சிறப்பு கருதி தனியாகச் சொல்லப்படுகிறது.

— இந்த ஆதி மொழி பற்றி இன்னும் கொஞ்சம்...?

—இதன் முதல் கட்டம் பற்றிப் பெரிதாகப் பேச ஒன்றுமில்லையென்றே நினைக்கிறேன். விஷயம் எல்லாருக்குமே சாதாரணமாகவே தெரிந்திருக்கக் கூடும். ஆதியில் மனிதனோடு இந்த வாய்மொழி இருக்கவில்லை. அவன் தன் மெய்ப்பாடுகளாலும் கூக்குரலாலும்தான் பிறருக்குத் தான் சொல்ல விரும்பியதை உணர்த்தினான். பிறகு இப்படியொரு தேவை உணர்ந்த நிலையில், பரிணாம கதியில்தான் அவனுடைய குரல் அமைப்புகள் வளர்ச்சி கொள்ள ஆரம்பிக்க, அதன் வளர்ச்சியின் முழுமையில் இன்று சாதாரணமாக 'மொழி' என்று சொல்லப்படும் வாய்மொழி அவனுக்குச் சித்தியாகியது.

ஆனால் இந்த வாய் மொழி முழுமையடைந்த பிறகும், அதற்கு வரிவடிவம் கண்ட பிறகும், அவன் வளர்ச்சியின் சிகரங்களாகப் பெரும் பெரும் காவியங்கள் எழுந்த பிறகும் இன்னும் ஏன் இந்த மனிதன் தனது தினசரி வாழ்க்கையிலும் ரொம்பச் சின்ன வெளிப்பாடுகளுக்கும்கூட வாய் மொழியோடு இந்த உடல்மொழியையும் பயன்படுத்துகிறான் என்பதுதான் வியப்பான விஷயமாக இருக்க வாய்ப்பிருக்கிறது.

— அப்படியா சொல்கிறீர்கள்? எல்லா மனிதர்களுமே தினசரி வாழ்க்கையிலும்கூட இந்த உடல்மொழியைப் பேசுகிறார்கள் என்றா சொல்கிறீர்கள்? தனது தினசரி சாதாரண தேவை

படிப்பகம்

www.padippakam.com



களைக்கூட நிறைவுசெய்ய முடியாதபடி அவனது மொழி அவ்வளவு பலவீனமாக இருக்கிறது என்றா சொல்கிறீர்கள்?

—ஆம் எந்த மனிதனாவது அவன் சமூகத்தோடு உறவு கொள்கிற சந்தர்ப்பத்தில் ஒரு நாள், ஒரு மணி நேரமாவது இந்த உடல்மொழியைப் பயன்படுத்தாமல் இருக்கிறானா என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. நீங்கள் கேட்டீர்கள், மனிதனது மொழிகள் இன்னும் அவ்வளவு பலவீனமாகவா இருக்கின்றன என்று. அது அப்படித்தான். போதாமல்தான் இருக்கிறது. இல்லாவிட்டால் அவனது இரண்டு கைகளிலும் இரு வாள்கள் எதற்காக?

— நடைமுறையிலான ஓர் உதாரணம் சொல்லுங்கள்... ?

—நல்லது. அப்போது நான் மதுரையின் ஒரு புறநகர்ப் பகுதியில் குடியிருந்தேன். ஒரு மாலை நேரம்: சாலையில் வந்துகொண்டிருந்தேன். எனக்கு முன்னால் ஏழெட்டு பேர் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு பாவாடை தாவணி. வயது 14 அல்லது 15 இருக்கும். கிராமியம். அப்போது எதிரே வந்து கொண்டிருந்த நான்கைந்து பேரிலும் ஒரு பாவாடை தாவணி. அதற்கும் அதே வயதுதான் இருக்கும். வந்துகொண்டிருந்தவளின் முகத்தில் சட்டென்று ஒரு மலர்ச்சி இதழோரம் ஒரு குறும்புப் புன்னகை. அவள் வேகமாக அடியெடுத்து ஒரு பத்தடி நடந்து, இந்தப் பெண்ணின் முன்னால் வந்து நின்று, உடல் நிமிர்த்தி, இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்து, ஒரு சர்வாதிகார தோரணையில் கழுத்தை நீட்டிக் கேட்கிறாள்: "ஏன்டி தேவ்டியா, நீ நேத்து மூணு மணிக்கி வர்றேன்னு சொன்னவளா?" சொல்லும் போதே குரலில் ஒரு கிளுகிளுப்பு.

எனக்கு வெகு காலம் ஆச்சரியம். அந்தப் பெண் ஏன் அப்படி இடுப்பில் இரு கைகளும் வைத்து அந்த மாதிரி கேட்க வேண்டும்? நேற்று மூன்று மணிக்கு இவளைப் பார்க்க வருகிறேன் என்று சொன்னவள் வார்த்தை தவறி இருக்கிறாள் தான். அதற்காக 'ஏன் நேற்று நீ சொன்னபடி வரவில்லை?' என்று கேட்டால் போதாதா?

எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் பிடிபட ஆரம்பித்தது. அந்த 'ஏன் நீ சொன்னபடி வரவில்லை' என்ற 'நீதிமன்றக்' கேள்வி இங்கு போதாதுதான். இங்கே அந்த இரண்டு யுவதிகளுக்கிடையே இருந்தது ஏதோ வெறும் Business - Like தொடர்பு அல்ல. நட்பு. ஆம், அழகான அற்புதமான நட்பு. இவளைக் கண்ட அந்தக் கணத்தில் அவள் கொண்டது, அவள் நேற்று வராதது குறித்த ஆதங்கம் அல்ல. இவளைக் கண்டது

படிப்பகம்

www.padippakam.com



போதாதா என்ற பரவசம். அதுதான் முகத்தில் சட்டென வந்த மலர்ச்சி. 'ஏன்டி தேவ்டியா...'வில் அந்தத்'தேவ்டியா'வே ஒரு கவிதை. நீங்கள் அந்த வார்த்தையை எடுத்துவிட்டு பதிலுக்கு 'அன்புத் தோழி, பிரிய சகி, டியர் சங்கரி, சங்கரி டார்லிங்' என்று எதை வேண்டுமானாலும் போட்டுப் பாருங்கள். இவள் உள்ளத்தில் இருக்கும் 'அவள்' வந்துவிடுகிறாளா பார்ப்போம்.

இடுப்பில் அந்தக் கை எதற்கு? அவளைக் கூப்பிட்டு நடுத்தெருவில் நிற்க வைத்து கேட்கும் அதிகாரம் இவளுக்கு இருக்கிறதாம். அந்த உடல் நிமிர்வு? கழுத்துத் தூககல்? அந்த அதிகாரத்திற்குத் தகுதியான உடல்வாகு தனக்கு வந்து விட்டதான பாவனை.

உண்மையில் அந்தக் கேள்வியே, கேள்விக்காகவோ, பதிலுக்காகவோ அல்ல, அது ஒரு சாதனம். அன்று அப்போது கிடைத்த சாதனம். தங்கள் நட்பை மீண்டுமொரு முறை அனுபவித்துக் கொள்ளக் கிடைத்த இன்னொரு சாதனம். உண்மையில் அந்தத் 'தேவ்டியா'வுக்கு My Mother expired— Selvaraj என்கிற தந்தி அர்த்தம் மட்டுமே இருந்திருந்தால் கேட்டுக் கொண்டவள் சிரிக்கவா செய்திருப்பாள்? கட்டிப் புரண்டிருக்க மாட்டாளா அந்த ரோட்டிலேயே!

அந்தப் பெண் அங்கே தனது 'வாய்மொழி' போதாது என்பது தெரிந்துதான் உடல் மொழியையும் எடுத்துக்கொண்டிருக்கிறாள். இவ்வளவுக்கும் அவள் ஒரு பாமரப் பெண்!

— நீங்கள் சொன்னதும் ஞாபகம் வருகிறது: போன வாரம் நடந்தது. ஒரு முப்பது வயது இளைஞன் பஸ் நிலையத்திலுள்ள சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்திருந்தான். ஒரு பாதம் தொங்கப் போட்டு, மறு பாதத்தைப் பலகையில் வைத்து, கால் நகத்தில் ஏதோ நோண்டிக் கொண்டிருந்தான். அதே நேரம், கூட இருப்பவர்களோடு பேசிக்கொண்டுமிருந்தான். ஒரு கட்டத்தில் திடீரென்று சொன்னான்: "அடடே, அவனா? அவன்கூட பெரிய தல வலிப்பா." அவன் சொன்னதோடு நிற்கவில்லை. சொல்லிக்கொண்டே, இடது கைப் பெரு விரலாலும் கண்டு விரலாலும் நெற்றிப் பொட்டு இரண்டையும் அழுத்தி, உள்ளங் கையால் அணைத்தபடி தலையைத் தாழ்த்திக் கொண்டான். இது கொஞ்சம் ஆச்சரியமான விஷயம்தான் இல்லையா? இவ்வளவுக்கும் 'தலைவலி' என்பதே மொழியின் அடர்த்தியில் கொஞ்சம் கூடுதலான நிலைதான். ஒரு குறியீட்டு லாபம் அது. அசலான தலைவலி அல்லவே. இருந்தும் அவன் மெய்ப்பாடும் செய்து காட்டினான். இது நீங்கள் சொன்னது போலவே, தான் தெரிவிக்க வந்ததற்கு மொழி மட்டுமே போதாது என்ற உணர்வின் காரணமாகத்தான் இருக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



அப்புறம் காய்கறிக் கடையோரம் ஒரு 45 வயது அம்மாள். எதிரே அதே வயதில் இன்னொரு அம்மாள். இந்த அம் மாள் மவுண்ட்ரோடு அண்ணா சிலை மாதிரி கையையும் ஆட் காட்டி விரலையும் நீட்டி, பாயிண்ட் பாயிண்ட்டாக அடிக்கி றாள். 'நீ ஆம்பளன்னா அப்பிடி செய்யி. யாரு சொத்து அது? ஒங்கப்பன் சம்பாதிச்சதா? ஒங்க அண்ணன் சம்பா திச்சதா? இல்ல, ஒன் பொஞ்சாதி கொண்ணாந்ததா? அது எங்கப்பன் எனக்கு இஷ்டதானமா கொடுத்தது. எந்த யோக் கியதையில வந்து பங்கு கேட்குற நீ?' அந்தம்மாள் வசனங்க ளில்தான் சட்டமும் கனலும் பறக்கிறதே.

அப்புறம் அந்த ஆட்காட்டி விரல் வேறு எதற்காக அந்தப் பாடு பட வேண்டும்?

—இதில் இன்னுமொரு விசேஷம். நாடகம் என்பதே Make believe பாவனை. இல்லாத ஒன்றை இருப்பதாகப் பாவனை செய்து கொண்டு, மேலே போவது. இதில் இந்த அம்மாவைப் பாருங்கள். எதிரே இருக்கும் பெண்ணையே ஆணாகப் பாவித்துக்கொண்டு வெளுத்து வாங்கியிருக்கிறாள்! நல்ல நாடகம்தான் இல்லையா?

— இப்படிப் பார்த்தால் நாம் நாடக அரங்கிற்குப் போகாமலேயே நிறைய நாடகங்கள் பார்க்கலாம் போலிருக்கிறதே?

—உண்மைதான். கவிதையைப் போலவே நாடகமும் தெருவெல்லாம் கொட்டித்தான் கிடக்கறது. பார்க்கவும் கேட்க வும்தான் நமக்கு திராணி வேண்டும்.

— கவிதையும் கூடவா தெருவெல்லாம் கொட்டிக் கிடக்கிறது என்று சொல்கிறீர்கள்?

—ஆமாம். ஆனால் அதைப்பற்றி இன்னொரு சந்தர்ப்பத் தில், அநேகமாக அதன் தளத்தில் வைத்துப் பார்க்கும்போது பேசிக்கொள்ளலாம்.

இந்த உடல் மொழியை, நடிப்பை, நாடகத்தை மனிதர் கள் வேறு வேறு சந்தர்ப்பங்களில், ஒரு உபயோகமாக மட்டு மின்றி சந்தோஷமான காரியமாகவும் அறிந்தோ அறியா மலோ செய்கிறார்கள்.

ஒரு இடம் எவ்வளவு கலகலப்பாக இருக்கிறது என்பதே அங்கே எவ்வளவு நாடகம் நடக்கிறது என்பதைப் பொறுத்தே இருக்கிறது. ஒரு திருமண வீட்டிற்குப் போய்ப் பார்த்தால் தெரியும்.

மச்சானைக் கண்ட மச்சான், என்னமோ கோபுரக் கல சத்தையை கும்பிடுவது போல கை தூக்கி உயர்த்தி 'வாங்க

படிப்பகம்

www.padippakam.com



வாங்க' என்று இழுப்பவன் கடைசியாகச் சொல்கிறான் '...வெங்காயம்.'

முதலிரவுக்கு முன்னால் மணமகளைச் சுற்றி தோழிகள் கூட்டம். மணமகள் பெயர் காமாட்சி என்று வைத்துக் கொள்ளுங்கள். அவளுக்கு அலங்காரம் நடந்து கொண்டிருக்கிறது. இந்தத் தோழிகள் போடும்- வசன கர்த்தா எழுதாத, யாரும் டைரக்ஷன் செய்யாத, ஒத்திகையே பார்க்காத நாடகம் பாருங்கள்!

'காமாச்சி!'

'ம்.'

'தூங்கிட்டியா?'

'இல்லியே.'

'அதானே.'

(சிரிப்பில் வீடே அதிரும்.)

'ஏன் காமாச்சி, எனக்கொரு சந்தேகமில்ல?'

'— '

அட என்னானுதான் கேளேன்.

'சரி, அவளுக்குப் பதிலா நான் கேக்குறேன். ஒனக்கு என்னா சந்தேகம்?'

'இப்ப இவ எங்க போறா?' (இடிச் சிரிப்பு)

'இது என்னாடி பெரிய சந்தேகம்? அவ, அவ புருஷனப் பாக்கப் போறா.'

'எதுக்குப் பாக்கப் போறா?'

'இதுதானே வேணாங்கறது. அவ எதுக்கு வேண்ணா லும் போவா. ஒங்கிட்ட சொல்லணுமா? அவ அவருக்கு சோறு போடக்கூட போவா.'

'ஏ காமாச்சி, உள்ள போனதும் அய் கெடச்சுப் போச்சுடானு ஓடி கட்டில்ல விழுந்துடாதே.'

'சீச்சீ அப்பிடியெல்லாம் செய்ய மாட்டாடி. அவளுக்கும் கிராக்கிப் பண்ணத் தெரியும். அவ ஒண்ணும் பச்சக் கொழந்த இல்ல.'

'அடி என்னாடி இவளுக்கு இப்பவே இப்பிடி வேக்குது?'

இவர்களை விடுங்கள். நமது காதலர்களைப் பாருங்கள். ஒரு மாலை நேரத்தில் அவர்கள் மூன்று மணி நேரம் பேசிக் கொண்டிருந்தால், இரண்டே முக்கால் மணி நேரம் என்ன தெரியுமா? நாடகம் நாடகம் நாடகம்!

'தேவியம்மா சொன்னா சரி.'

'அய்யே, மூஞ்சியப் பாரு.'

'பாத்துக்கிட்டுதான இருக்கேன்.'

படிப்பகம்

www.padippakam.com



'போ.. யி .. டு .. வேன்.'

'வேண்டாம் தாயி, கண்ணக் கொடுத்துட்டு பிடுங்குன மாதிரி செஞ்சுடாதே அம்மா.'

உண்மையில் நம்பர் ஒன் நடிப்பு இந்தக் காதலர்களுடையதுதான். மூன்று வருஷம் - நாலு வருஷம் இவர்கள் சலிக்கச் சலிக்கப் பேசிப் பழகியிருப்பார்கள். திருமணப் பேச்சை வீட்டில் ஆரம்பிக்கலாமா என்று கூட பேசியிருப்பார்கள். அந்த நிலையிலும் இவன் பஸ்டாண்டில் நின்று கொண்டிருக்கும்போது அவள் அம்மாவோடு வருவாள். அப்போது இவர்கள் இருவரும் பார்த்துக் கொள்வதை நாம் பார்க்க வேண்டும்!

தெரிந்துதானே வள்ளுவன் அன்றே சொன்னான்.

'ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலர் கண்ணே உள.'

தமிழில் என்பான் சுவை. வடமொழியில் நவரசம். 'சாந்தம்' என்ற ஒன்று கூடுதல். 'சாந்தம்' என்பது 'சும்மா இருப்பது.' நான் நவரசத்தின் கட்சியே. நாடகத்தில் சாந்தம் சும்மா இருப்பதல்ல. நடிகர் கந்தசாமி புத்தபிரான் சாந்தியை முகத்தில் கொண்டுவர நடித்துத்தான் ஆக வேண்டும். நமது காதலர்களில், ஓடி அணைத்துக்கொள்ளும் அளவுக்கு அவர்கள் உள்ளம் துடித்துக் கொண்டிருந்தாலும் அவள் அம்மாவின் பொருட்டு நீ யாரோ நான் யாரோ என்று நடித்தபடி தானே நின்று கொண்டிருந்தார்கள்!

இவர்களையும் விடுங்கள். ஒரு பத்து வயதுப் பையனைப் பாருங்கள். இவன் வீட்டிற்குள் இருக்கிறான். தெருவில் 'பழய்ய்.. ய.. பாத்திரம்.. பேரீ..ச்சம் பழம்' போகிறது. இவன் இங்கிருந்து அதை சுத்தமாக அதே குரலில் கொடுக்கிறான். 'பழய்..ய்ய.. பாத்திரம்.. பேரீ..ச்சம் பழம்.'

தெருவில் யாராவது நொண்டிக் கொண்டு போனால், இவன் பின்னால் போய் அந்த மாதிரியே நொண்டி நடந்து காட்டுகிறான்.

இவனையும் விட்டுவிடுங்கள். ஒரு ஆறு மாத இடுப்புக் குழந்தையைப் பாருங்கள். அம்மாயி முகம் எப்படியிருக்கு என்ற கேள்விக்கு, என்னமாய் உதட்டைக் குவித்து பிதுக்கி காட்டி அம்மாயியை பரிகாசம் செய்து விடுகிறது.

— இதுவரை நீங்கள் சொன்னதை வைத்து ஒரு Recaputulationல் இப்படியொரு வரையறை செய்யலாம் என்று தோன்றுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



'உடல் மொழி' மனிதனது ரத்தத்தில் கலந்து விட்டிருக்கிறது. நடிப்பு அவனது பசிகளில் ஒன்றாக இருக்கிறது. அது அவனது தேவை மற்றும் சந்தோஷம். 'வாய் மொழி'யில் மற்றவர்கள் காவியம், நாவல், கதை, கவிதையென்று எட்டிய சிகரங்களைப் போல தானும் தனது நடிப்பால் சில சிகரங்களை எட்ட வேண்டும்; தனது உடலைத் தானே ஆண்டு, தன்னையே வெளியே எடுத்து நிறுத்தி, ரசிகனை மந்திரத்தால் கட்டியது போல் கட்டிப்போட வேண்டுமென்ற வேட்கையில் நடிகனும், அதைப் பார்த்து பசியாற வேண்டுமென்ற ஆவலில் ரசிகனும் நாடக அரங்கிற்கு வருகிறார்கள்.

—சரிதான்.

— அப்படியானல் முழுக்க Mime அல்லது Phanto mime கொண்டதொரு நிகழ்ச்சி மட்டுமே நாடகமாகிவிடுமா?

—வளரும்:

---

# சேரிடம்

வடிவமைப்பும் தொகுப்பும்:
**ஜெயந்தன்**

31 - 7 - 94 ஞாயிற்றுக்கிழமை திருவல்லிக்கேணி ரங்கநாதன் ஹாலில், 'மையம்' மற்றும் 'விருட்சம்' சார்பாக கவிஞர் ஞானக் கூத்தனின் கவிதைத் தொகுப்பான 'மீண்டும் அவர்கள்' நூல் வெளியீட்டு விழா நடந்தது. எதனாலோ அதை 'நூல் உரைக் கூட்டம்' என்று அழைப்பிதழில் வகைப்படுத்தியிருந்தார்கள்.

நிறைய இலக்கியவாதிகளும் நண்பர்களும் வந்திருந்தார்கள். (நாற்காலிகள் போதவில்லை).

இந்திரா பார்த்தசாரதி தலைமை வகித்துப் பேசி நூல் வெளியிட, சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு. விஜய திருவேங்கடம் முதற் பிரதி பெற்றுக் கொண்டு பேசினார்.

அழைப்பிதழில் 'உரை ஆற்றுவோர்' பட்டியலில் ஒன்பது பேர் இருந்தனர். முதல் பெயராக சுஜாதா இருந்தார். பேசினார்.

கூட்டம் முடிவடைகிற தருணத்திலும் (முன்னதாக சிலர் கிளம்பி கீழே வந்து கொண்டிருந்தார்கள்.) முடிந்த பிறகும் அங்கு நிலவியிருந்த Harmonyக்கும் மகிழ்வான சூழ்நிலைக்கும் எந்தக் குந்தகமும் நேர்ந்துவிடாமல், சில இலக்கியவாதிகளைக் கொஞ்சம் தனியாக அழைத்துப் போய், நட்போடு, ஒரு ரகசியம் போன்ற மெல்லிய தொனியில் 'கவிதாசரணுக்காக ஒரு, ஒரு நிமிஷப் பேட்டி கொடுக்க முடியுமா?' என்று கேட்டு, தயாராக தட்டச்சில் எழுதியிருந்த கீழ்க்கண்ட கேள்வி கையில் கொடுக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



—ஞானக்கூத்தன், கவிதை என்னும் தவத்தில் 25 ஆண்டுகளை செலவிட்ட ஓர் அசலான கவிஞன். மாறாக, தாங்கள் செய்வது மோசடி என்பது தெரிந்தே, 'மாயக் காம உறுப்புகளை மாட்டிக் கொண்டு, ரசிகனிடம் போய் உரசி, பிராபல்யம் எய்திய அல்பங்களின்' தனித் தலைவன் சுஜாதா, சரியாகச் சொல்லப்போனால், ஞானக்கூத்தன் போன்ற அசலான இலக்கியவாதிகள் பக்கமே லட்சோப லட்சம் இளைஞர்களை அண்ட விடாது, இந்த 25 வருடமும் அவர்களை எதிர்முனைக்கு விரட்டிக்கொண்டே இருக்கும் (இப்போதும் குமுதம் பதிப்பாசிரியர்) அ-இலக்கிய சீரழிவு சக்தி சுஜாதா.

தற்போது இவ்விருவரும் ஒரே நேர்க்கோட்டில் வந்தது எப்படி? இவ்விழாவில் (நூல் கருத்தரங்கு) முதல் வரிசையில் முதல் இடத்தில் சுஜாதாவுக்குப் போடப்பட்ட ஆசனத்தின் தத்துவமென்ன?—

ஒலிப்பதிவு செய்யப்பட்ட பதில்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## 1. பரீக்ஷா ஞாநி

இன்றைய சமூகத்தில் 10 வருஷம் அல்லது 20 வருஷம் முன்ன இருந்த மாதிரி இல்லாத ஒரு போக்கு பொதுவா ஏற்பட்டிருக்கு. என்னன்னா, இன்றைய சமூகத்துலதான், பெருவாரியான இலக்கிய வாசகர்கள் உட்பட, மனிதர்கள் எல்லாருமே தங்களுக்குள் எந்த முரண்பாடும் இல்லாமல், இரட்டை வாழ்க்கை வாழ்வதென்பது சகஜமான விஷயமாக, ஏற்கப்பட்ட விஷயமாக இருக்கு. அதனுடைய பல வெளிப்பாடுகளைப் பல இடங்களில் பார்க்க முடியும். அதில ஒரு வெளிப்பாடுதான் இதுவும்னு நான் பார்க்கிறேன். இதுல வந்து, இந்த வெளிப்பாட்டுல, பாத்திங்கன்னா, ஞானக் கூத்தனிடமும் மோசமான விஷயங்களைப் பார்க்க முடியலாம். சுஜாதாவிடமும் சரியான விஷயங்களைப் பார்க்க முடியலாம். ஆனா, அந்த அடிப்படைகள்ல இருவர் பற்றிய முடிவுகளுக்கும் வர முடியாதுங்கறது மாதிரியான சிக்கல்கள ஏற்படுத்திட்ட ஒரு சமுதாய அமைப்பு இன்னிக்கு, இந்தப் பத்துப் பதினஞ்சு வருஷத்துல, குறிப்பா, தமிழ்ச் சமூகத்துல மாறியிருக்கு.

தனி வாழ்க்கை, பொது வாழ்க்கை இவற்றுக்குள் உள்ள முரண்கள் அல்லது தனி வாழ்க்கைக்குள்ள இருக்க முரண்கள், இதையெல்லாம் வந்து பொருட்படுத்தாமல், வாழ்க்கை வாழலாம் என்கிற ஒருமுறை ஏற்பட்டிருக்கிறது. அத அடிப்படையா வச்சுதான் இத விளங்கிக் கொள்ளணும்னு நெனைக்கிறேன். இத விளங்கிக்கிற ஒரு அடையாளமா வேண்ணா இந்தக் கூட்டமோ, ஞானக்கூத்தனோ அமையலாமே ஒழிய, இவங்களே விஷயங்கள்னு நான் நெனைக்கல.

## 2. கவிஞர் புவியரசு

புவியரசு: இதுல நமக்கு ஒண்ணும் சம்பந்தமில்ல.

படிப்பகம்

www.padippakam.com



பேட்டியாளர்: உங்களோட கருத்து என்ன?

புவியரசு: என்னோட கருத்து ஒண்ணுமில்ல. நான் இதுல தலையிடுறது இல்ல. இந்த விஷயத்தில், நீங்கள் எழுதியிருக்கிற விஷயத்தில் நான் தலையிடுறதில்ல. ஏன்னா இது அவர்கள் விஷயம்.

## 3. எஸ். பொன்னுதுரை இலங்கை எழுத்தாளர்

எல்லா வட்டத்தோடயும் நான் நேரடியான தொடர்பு வச்சிருக்கேன். ஒரு வட்டத்தைப் பற்றியோ, ஒரு சிலரைப் பற்றியோ நான் அபிப்ராயம் சொன்னால் மற்றவர்களுக்குப் பிடிக்காது. இது தப்புதல் எண்ணம் அல்ல. நான் சில குறிப்பிட்ட இலக்குகளை அடைய வேண்டுமென்ற ஒரு தூதுவனாக வந்திருக்கிறேன்.

## 4. ‘வெளி’ ரெங்கராஜன்

இலக்கியத்தில் ஒருவன் Establishmentக்கு எதிராக கலகக் கொடி தூக்கி வரும்போது, இந்த Establishmentஇன் அடியாட்களான வியாபார எழுத்தாளர்கள் அவனைக் கண்டு கொள்வதில்லை. அவனோடு உறவு வைத்துக் கொள்வதில்லை. அவனை identify செய்வதில்லை.

ஆனால் ஒரு mild protest சமூகத்தின் கவனத்தைப் பெறுகிற மாதிரி தெரிந்தால், அதைப் project பண்ணி, தாங்களும் அப்படித்தானாக்கும் என்று காட்டிக்கொள்ளவும் அவர்கள் தயங்க மாட்டார்கள். (ஆனால் அந்தப் protest ரொம்ப அதிகமாகவும் போய்விடக் கூடாது. அது அவர்கள் முதலாளிமாரை சங்கடப் படுத்திவிடும்.) இந்த லேசான எதிர்ப்புணர்வு கொண்ட படைப்புகள் பற்றி அவர்கள் முதாளிகளுக்கும் ஆட்சேபணை இல்லை. வியாபார ரீதியில் லாபம் என்றால் சரிதான்.

ஏதாவதொரு கால கட்டத்தில், முன்பு கலகக் கொடி தூக்கியவன் கொஞ்சம் கூர் மழுங்கி, இவர்களுக்குத் தலையாட்டத் தயார் என்று தெரிந்தால் இவர்களுக்கு சந்தோஷம்தான். ஓடி வந்து கை குலுக்கி, ‘நீயும் நானும் ஒண்ணு அறியாதவன் வாயில் மண்ணு’ என்று போஸ் கொடுப்பார்கள். ஞானக்கூத்தன் - சுஜாதா விஷயத்தில் இதுதான் நடக்கிறது.

இதே ஞானக்கூத்தன், 20 வருஷத்துக்கு முன்னால் என்றால் இதே சுஜாதாவை ‘நீ யாருய்யா என் கவிதையைப் பத்திப் பேச’ என்று கேட்டிருப்பார்.

இது சோகம்தான். ஆனால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

## 5. சா. கந்தசாமி

இது வந்து எல்லாத்துக்கும் நேரக் கூடிய விஷயம்தான். இந்த Mass media வுல வெற்றி பெறுகின்ற போதும் அவங்க இருக்க

படிப்பகம்

www.padippakam.com



# மேலும் சில விமர்சனங்கள்...

இந்தக் கூட்டத்திற்கு நானும் போனேன். அப்போது ஞானக் கூத்தன் தன் வரவேற்புரையை முடித்துக் கொண்டிருந்தார். கூட்டத்தில் 40, 50 பேர் இருக்கலாம். அத்தனை நாற்காலிகள்தாம் இருந்தன. எனக்குப் பிறகும் வந்தனர். அமர இருக்கைகள் இல்லை. அறையின் பின் பகுதியில் வெற்றிடம் இருந்தது, தாமதங்களைப் பிடித்து வைத்துக்கொள்ள. பின்னால் வந்த ஜெயந்தனோடு என் நாற்காலியைப் பகிர்ந்து கொள்ள முடிந்தது. ஆனால், இருக்கைகள் 'இல்லை' என்பதையோ, 'தருவிக்கலாம்' என்பதையோ ஒரு பொருட்டாகவே யாரும் எடுத்துக் கொள்ளவே இல்லை. இது போன்ற சம்பிரதாயங்களில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை போலும்.

பேச்சாளர் வரிசைக்குப் பின்னால் உள்ள சுவரில் ஒரு படம் (சாமி படமாயிருக்கும்.) அதன் மூன்று மூலைகளின் ஒட்டுத்தாள் பெயர்ந்து, காற்றில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. அதை யாரும் சட்டை செய்யவே இல்லை. சிறிது நேரத்தில் அது தரையில் விழுந்துவிட்டது. பிறகு என்ன ஆனது என்பதை நான் தொடர்ந்து கவனிக்க முடியவில்லை. ஒரு துரும்பை எடுத்துப் போடுவது கூட உடலை வருத்திச் செய்கிறவர்களின் வேலை என்பதான நியதி அங்கே இருக்கும் போலப்பட்டது.

பொதுவாகவே, கோயிலைச் சுற்றியுள்ள மனைகள் காரை பெயர்ந்து, கூரை சரிந்து, படிகள் உடைந்து, சுவர்கள் பிளந்து, சில செடிகள் முளைத்து, தரை சிதைந்து, பழுது பட்டிருக்கும். கோயிலைச் சேர்ந்த பிராமணர்கள் அங்கு குடியிருப்பார்கள். தாங்களே அவற்றைச் சீர் செய்துகொள்வது பற்றிக் கவலைப் படாமல், தங்கள் நியம நிஷ்டைகளுக்குக் குறை வராமல், தங்கள் போஜனப் பிரியத்தை தொலைத்து விடாமல், உடைபாடுகளின் எந்த உறுத்தலுக்கும் ஆட்படாமல் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

தன் வீட்டு வெளி வாசல் முன் செத்துக் கிடக்கும் தெரு நாயை அப்புறப்படுத்தக் கோரி, கார்ப்பரேஷன்காரர்களுக்குத் தொலைபேசி எண்களைச் சுழற்றிச் சுழற்றி விரலைத் தேய்த்துக் கொண்டதாகக் கவிதை எழுதிய வைரமுத்துகூட, காசு பணத்தோடு இறக்குமதி செய்து கொண்டது இந்தக் கலாச்சாரத்தைத்தான் என்பது நினைவுக்கு வந்தது.

இந்தக் கருத்தரங்கச் செயல்பாடுகள் அதையே ஒத்திருந்தன. அந்தக் கட்டிடத்தைத் தற்செயலாய் அண்ணாந்து பார்த்தேன். அங்கங்கே கொஞ்சம் காரை உதிர்ந்துதான் இருந்தது. அறிவு ஜீவிகளின் இலக்கிய வெளிப்பாடுகளுக்கு இவையெல்லாம் அற்பமான விஷயங்களாய்ப் படலாம்தான்.

இரண்டு நாட்களுக்கு முன் நடந்த 'சிந்து' பதிப்பக வெளியீட்டு விழாவும் ஓர் ஒப்பீடாக நினைவுக்கு வந்தது. அங்கே நூலுக்

படிப்பகம்

www.padippakam.com



தளம் அவங்களுக்கு திருப்தியளிக்கறதில்ல. ஆகையால் ஒரு சிறு பான்மையான கருத்துகள எடுத்துக்கறதுக்கு அவங்க முயற்சி பண்ணுவாங்க. இது தொடர்ந்து நிகழக் கூடியதுதான்.

## 6. பெரியவர் சிட்டி

நான் சுஜாதா கதைகள படிச்சதே இல்லை.

## 7. ந. முத்துசாமி

எனக்கொண்ணும் அபிப்ராயம் கிடையாது. என்னோட அபிப்ராயம் வந்து, ஞானக்கூத்தன் நல்ல கவிஞர் என்பது என் அபிப்ராயம். இது யாராலயும் உருவாகல. அது எனக்குள்ளயே உருவானது. இடையில் என்ன நடக்குது, என்ன போவுதுங்கறதப் பற்றி எனக்கு அக்கறை கிடையாது.

## 8. அழகியசிங்கர் விழா அமைப்பாளர்

இத வந்து ஒரு பெரிய விஷயமா நான் நெனைக்கல. இதுல சுஜாதாவுக்கு உள்ள interestஐத்தான் நாம பாக்குறோம். அவர் popular magazinesல எழுதிட்டார்ங்கறது விஷயமில்ல. புதுக் கவிதை மேலே அவருக்கு இன்ட்ரஸ்ட் இருக்கு. அத popular பத்திரிகையில எடுத்துப் போய் பரவறதுக்கு முயற்சி பண்றாரு. அந்த முயற்சியதான் நாம பாராட்டுறோம். அந்த விதத்துலதான் சுஜாதாவைப் பாராட்டுறோம்.

கேள்வி: அவரோட pastஐப் பத்தி அக்கறையில்லையா நமக்கு?

அ. சிங்கர்: கவிதைகளைப் பத்தி அவருக்கு இப்ப உள்ள change. முன்னாடியே கவிதை மேல ஒரு interest அ எடுத்திருக்காரு. அந்த interest அ வந்து அவரு popular level அ எல்லாருக்கும் தெரியப் படுத்தணும்னு ஒரு sincere ஆன முயற்சி....

கேள்வி: sincere ஆன முயற்சியா, இல்ல ஒரு தந்திரமா? அங்கயும் கால வச்சுக்கலாம் இங்கயும் கால வச்சுக்கலாம்னு...

அ. சிங்கர்: அப்படியெல்லாம் நாம்....

கேள்வி: அவரோட pastஅ பத்தி உங்களோட கணக்கு என்னா? விரும்பத்தக்கதா வெறுக்கத்தக்கதா?

அ. சிங்கர்: அவர் pastஐ பற்றி நாம ஏன் கவலைப்படணும்?

கேள்வி: (வியப்புடன்) பட வேண்டாமா?

அ. சிங்கர்: அவரு வந்து அந்த pastல இருந்தா கூட அவரோட கவிதைகள் மேலுள்ள அக்கறை, ஞானக்கூத்தன் கவிதைகளைப் பற்றி எப்பவுமே அவரு சொல்லிக்கிட்டு வர்றாரு. கவிதையிலதான் நம்ம...

படிப்பகம்

www.padippakam.com



கேள்வி: கவிதையப் பத்திச் சொல்றப்ப ஒரு உதாரணம். இந்த Underworld Dons எல்லாம் பிச்சைக்கார விடுதி மாதிரி எதை யாவது செய்வான். அந்த மாதிரி நாவல், சிறு கதையில தன் னோட நிலைய மறைக்கறதுக்கு அவர் கவிதையப் பத்தி பேசலாம் இல்லியா? ஏன்னா இதுல அவர் Corrupt பண்ண முடியாது. கவிதை யெழுதியெல்லாம் எங்கயும் காசு பண்ணவும் முடியாது.

அ. சிங்கர்: அப்படியெல்லாம் (எங்களுக்குத்) தோணல.

கேள்வி: மொத்தமா, உங்க பிரியம், அவர் கவிதையைப் பாராட்டத் தெரிஞ்சவர் அப்படிங்கறது. சரி அதுக்காக இந்த மாதிரி விழாவுல முதல் இடம் கொடுக்கணுமா?

அ. சி: முதல் இடம் இரண்டாவது இடம், அந்த மாதிரியெல்லாம் ஒண்ணுமில்ல.

கேள்வி: அப்புறம் ஏன் அழைப்பிதழ்ல முதல் பெயரா அவரு பேரு இருக்கு? செல்லப்பா எல்லாம் இல்லியா? செல்லப்பாவ எல் லாம் ஏன் விட்டிட்டிங்க?

அ. சி: அந்த மாதிரியில்ல. பெயரெல்லாம் கையில வந்த மாதிரி தான் எழுதுனோம். சுஜாதாவுக்கு முதல் இடம். வேறொருத்த ருக்கு கடைசி இடம் அந்த மாதிரியெல்லாம் இல்ல. பாருங்க பேசும்போது சுஜாதா மொதல்ல பேசல.

கேள்வி: அது ஒரு சிஸ்டம். அழைப்பிதழ்ல மொதல்லயும் பேசும் போது கடைசியலயும் அப்படிங்கறது Star Speakrs' Status.

அ. சிங்கர்: இல்ல அந்த மாதிரியெல்லாம் நினைக்கத் தோணல.

## 9. விஜய திருவேங்கடம்

(வானொலி நிலைய இயக்குநர்)

தயவு செய்து Record பண்ண வேணாம்.

இதனால் அவரது கருத்துகள் இங்கு வெளியிடப்படவில்லை.)

## 0. ஞானக்கூத்தன்

(எழுதியே கொடுத்துவிட்டார்.)

கூட்டத்தில் நான் சொன்னது போல என் கவிதைகள் அச் சக் காணும் முன்பே ரசித்து ஊக்கம் காட்டியவர் நண்பர் ஜாதா. எல்லாருக்கும் போலவே அவருக்கும் ஓர் ஆசனம்.

இந்தக் கேள்வி குறித்தும், பதில்கள் குறித்தும், இந்தக் கேள்வி தங்களிடம் கேட்கப்பட்டிருந்தால், தங்கள் பதில் என்னவாக இருக்கும் என்பது பற்றியும் வாசகர்களிடமி ருந்து எதிர்வினைகள் வரவேற்கப்படுகின்றன. (ஆ - ர்.)

படிப்பகம்

www.padippakam.com



குரிய கவிஞர் இலக்குமி குமாரன் ஞானதிரவியம் மேடையில் ஏற்றப்பட்டிருந்தார். பேச்சாளர்கள் குளிர் பானங்கள் அருந்தி வைத்த கண்ணாடி போத்தல்கள் எங்கே கைபட்டுச் சிதறிவிடுமோ என்று, தன் கைக்கெட்டிய தூரத்தில் இருந்தவற்றைப் பொறுப்போடு சேகரித்துப் பின்புறம் வைத்தார். அவர் கவிஞர்தான் என்றாலும் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர். அவரால் இதுபோல விட்டேற்றியாய் இருக்க முடியவில்லை. இங்கே பேசப்பட்ட கவிஞர் அந்த வகையில்லை என்பதும், என் மக்களின் அடையாளங்களை எப்படியெல்லாம் தேடித் திரட்ட வேண்டியுள்ளது என்பதும் என்னுள் கூடுதல் வெளிச்சமாகியது.

மூத்த எழுத்தாளர் சிட்டி வந்தபோது, மாலன் தன் இருக்கையிலிருந்து எழுந்து வந்து, நுழை வாயிலிலிருந்து கையணைவாக அழைத்துச் சென்று அமர வைத்தார். 'தமிழன்' செய்கிற வேலைதான் அது என்று பட்டது. அதன் பிறகு வந்த பாலகுமாரன், பேச்சாளர் வரிசைக்குப் போகாமல், அறையின் பின் பகுதியிலேயே துணியை விரித்தமர்ந்து, சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார். தவிர்க்க முடியாமல் அவரைத் திரும்பிப் பார்த்த போது, அவர் விடும் புகைமட்டுமே எல்லாரைவிடவும் உயரமாய் மேலோங்கி வளர்ந்து கோலோச்ச முயன்றதாகப்பட்டது. ஆனால் இது காற்றில் கரையும்தானே என்று நினைத்த போது, புகையிலை நெடி கொஞ்சம் மூக்கில் உறைக்கவே செய்தது. இவரிடமும் வந்து சில நிமிஷம் இருந்து மகிழ்ந்துவிட்டுப் போனார் மாலன். சடங்குகள் மாலனுக்குப் பலம்தான் என்று தெரிந்தது. பாலகுமாரன் பேசியபோது, முதலில் சுரத்குமாருக்கு ஸ்தோத்திரம் சொல்லித் தொடங்கினார். கடைசியில் பார்வையாளர்கள் உயரமாய்த் தான் தெரிந்தனர்.

நிறைய பேச்சாளர்கள். தலைமை தாங்கிய இந்திரா பார்த்தசாரதி, சென்ற இரவில்தான் புத்தகம் முழுவதையும் படித்ததாகச் சொன்னார். நூலைப் பெற்றுக் கொண்ட விஜய திருவேங்கடம், 'கவிதைகளை அப்படி ஒரு அமர்வில் படித்துவிட முடியாது' என்றார். இந்த ஒரு வாக்கியம்தான் அந்தக் கூட்டத்தில் கவிதை சம்பந்தமான சிறந்த விமர்சனமாக இருந்திருக்க முடியும். அவரே, தன் பேச்சினூடே, சுஜாதா பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு குமுதம் தரம் கூடி விட்டது என்றார். அதைக் கேட்டு குதூகலம் கொள்ள முயன்ற போது, பீறிட்டுக் கிளம்பிய மலவாய்ச் சிரிப்பை அவை நாகரிகம் வெகுவாக முயன்று அடக்கும்படியாயிற்று.

சுஜாதா பேசும் போது, 'இப்போ இந்தக் கவிதையின் சிறப்பை நான் சொல்கிறேன், பாருங்கள்' என்ற அறிவிப்போடு சில சொன்னார். கூட்டத்தில் மாணவர்கள் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை.

ஒரு நாலைந்து தடவை, "ஞானக்கூத்தன், ஒரு மேஜர் கவிதான். அதில் ஒன்னும் சந்தேகமில்லை,'' என்று, ஏதோ கட்டுத்

படிப்பகம்

www.padippakam.com



தறி மாட்டுக்கு வைக்கோல் பிடுங்கிப் போட்ட மாதிரி உதிர்த்தார். ('இதோ மூலவரைப் பார்த்துக்கோ!' என்று தீபத்தட்டைத் தூக்கிக் காட்டின மாதிரி - என்றுகூடச் சொல்லலாம் பிறர்.) சுந்தர ராமசாமி கொடுக்க மறுக்கும் ஒன்றைத் தன்னால் கொடுக்க முடியும் என்பது போன்றதான பிரகடனம் அது.

இறுதியில் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுக்கு பிஸ்கட்டும் காபியும் வழங்கினார்கள். அந்த 'வழங்கல்' எல்லாவற்றையும் நிரவிக் கொண்டது.

★

வெற்றிகரமான பேட்டிக்கான சாத்தியப்பாடு கருதி, ஜெயந்தன் தன் கேள்வியை வடிவமைத்துக்கொண்டார் என்று தோன்றுகிறது. மேலும், "கால் நூற்றாண்டுக்கு மேலாகக் கவிதை எழுதும் அவர் Sinceretyஐ நாம் சந்தேகிக்கக் கூடாதல்லவா?" என்றார். கூடாதுதானாக்கும்.

ஆனால் ஜெயந்தன், தனக்கானதும் தனக்குப் பிடித்ததுமான இலக்கியப் பரிமாணங்களைத் திரட்டிக்கொண்டு, சுஜாதாவுக்கும் ஞானக்கூத்தனுக்கும் இடையே இட்டு நிரப்ப முடியாத பெரும் பள்ளத்தை ஏன் எதிர்பார்த்தார் என்பது கொஞ்சம் ஆச்சரியமான விஷயம்தான். இந்த ஆச்சரியம் பற்றியோ, ஞானக்கூத்தனின் 'அசலான கவிஞன்' முகம் பற்றியோ பேட்டியளித்த யாரும் கேள்வி எழுப்பவில்லை என்பது அதைவிட அதிசயம். இதற்குத்தான் 'என்பதாய் இருக்கிறது' பொருத்தமோ. ஞானதிரவியத்தைக் கேட்டால் விளங்கும்.

நமக்குத் தெரிந்தவரை சுஜாதா - ஞானக்கூத்தன் இருவருக்கும் இயங்கு விசைக்கான இடைவெளி ரங்கராஜனுக்கும் ரங்கநாதனுக்கும் உள்ள மெல்லிய இழைதான். தட்டில் உணவும் வயிற்றில் பசியுமான துவைத நிலையின் அடுத்த கட்டம் விசிஷ்டாத்வைதமான செரிமானம்தானே.

'சுஜாதா ஒரு அசலான ஸிஞ்ஞானியாகலாம். ஆனால் படைப்பாளி என்ற அளவில் கம்ப்யூட்டர் கீ போர்டில் தட்டச்சு பயிலத் தெரிந்த வடுவூரார் வழித்தோன்றல்தான்' என்று ஒரு நண்பர் சொன்னார். 90 சதவீதம் அது சரியாகத்தான் இருக்கும் என்று படுகிறது. மீதி 10 சதவீதம்? மனிதப் பிறவி முழுதுமே 10 சதவீதம் உத்தமப் படைப்பாளிகள்தாம்; கவிஞர்கள்தாம். அந்த 10 சதவீத உத்தமக் கவிஞராக ஞானக்கூத்தனும் நிற்கிறார். மற்ற 90 சதவீதம் துக்கடா கவிதையெழுதி, வாய்ச்சாலம் புரிந்த கவி காளமேகத்தின் நேர் வாரிசாகத்தான் அவர் நிற்கிறார்.

பாரதிக்குப் பிறகான மேஜர் கவியைத் தேடும் முயற்சியில் ஞானக்கூத்தனை ஊடிழையாக்கிய மர்மம் என்னவென்று விளங்க

படிப்பகம்

www.padippakam.com



வில்லை. ஒரு வேளை பார்ப்பனச் சாதியில் பிறந்த பாரதியோடு ஒரு பார்ப்பனனைத்தான் ஒப்பிட வேண்டும் என்பதாலா?

பாரதி பார்ப்பனன்தான். "பார்ப்பானை ஐயர் என்ற காலம் போச்சே," என்று பொட்டில் அறைந்தாற் போலப் பகடி பேசி, சமூகச் சீரமைப்பைச் சுட்டிக் காட்டிய பார்ப்பனன். அவன் கவிதைகள், "புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி, மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சி தந்து, விண்ணை வெளியாக்கி விந்தை செயும் சோதி." வசனத்தில் தன் சுற்றத்து மொழியையே பற்றத் தெரிந்தவன், தன் கவிதையில் பல்லாயிரம் 'இன்னல்கள் வந்துற்ற போதும் உள்ளுடைவின்றி உழைத்திடும் நெறியறிந்த தமிழ்ச் சாதியின்' மைந்தனாகத் தன்னைத் தூக்கி நிறுத்திக் கொண்டவன்.

ஒருவன் கவிஞனாயிருக்கக் குறைந்த பட்சம் அவன் தன் மொழி மீது சத்தியம் மிக்கவனாய் இருக்க வேண்டும். பாரதி அப்படி இருந்தான். சொன்னானே, "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்" என்று!

தமிழில் எழுத வாழ்த்தப்பட்டவன் பாரதி.

ஆனால் ஞானக்கூத்தன்?

இவர் எப்போதும், 'இது வக்கிரமோ?' என்று ஐயுறும் அளவுக்கு, அதன் எல்லைக்கோட்டிற்கு நூலிழைத் தூரத்தில் நின்று கொண்டு வக்கணை பேசும் வைதிகர். கடல் தாண்டிப் போகாத செம்மங்குடி சீனிவாசய்யர் தம் ஆசார அனுஷ்டானங்களை விட்டுக் கொடுக்காத வைதிக பிராமணர். ஆனால் ஞானக்கூத்தனோ தன் சிந்தனையையே வைதிகத்தில் முடக்கிப் போட்டுத் தரம் பார்க்கும் பிராமணர். தரம் பார்ப்பதும் மற்றும் பிரிப்பதும் இவர் தொழில் என்பதால்- தமிழ், சமஸ்கிருதம் இரண்டையும் வரிசைப் படுத்த நேரும் போதெல்லாம் முதலில் சமஸ்கிருதம், பிறகு தமிழ் என்றே தரப்படுத்துபவர். ஒரு சொல், 'சமஸ்கிருதம்' எனில் சட்டென்று ஒத்துக்கொள்வார். 'தமிழ்' என்றால் ஒத்துக் கொள்ளத் தயக்கமாய் இருக்கிறது என்பார். 'ஆரிய பாரம்பரியத்தை இடையில் எக்காரணத்தாலோ கைவிட்டதினால் தீட்டாகிப் போனவர்கள் அடித்தட்டு மக்கள்' என்று சொல்லி, இந்த நாட்டில் ஆரியமரபு ஒன்றுதான் அசல் மரபு என்று பித்தலாட்டம் செய்ய முனையும் அசல் பார்ப்பனர். "உயிர்களின் வேதனையைப் பாராமல் (மாடடித்துத் தின்று கொண்டு) பயிர்களின் வேதனையைப் பேச என்ன உரிமை இருக்கிறது?" என்று ஜீவகாருண்யம் பேசுகின்ற— இவர் வீட்டுப் பசுவைப் பூஜித்துக்கொண்டு பஞ்சமர்களை ஊனப் பிறவிகளாக்கி ஒதுக்கிய ஈனக் கலாச்சாரத்தின் வாரிசு இவர். "பச்சை புள்ளயாட்டம் வளர்த்த பயிர் சாவும் வேதன"யை அவன் அனுபவிக்காமல் போனால், பசுவின் கோமயந்தான் இவருக்கு உணவாகும்

படிப்பகம்

www.padippakam.com



என்பதை மறந்து போய்விட்டு சமய ஒழுக்கம் பேசும் ஸ்மார்த்தர். கணையாழி கவிதை வட்டத்தில் வேத ஸ்லோகம் பாடிப் பொருள் விளக்கி, பின்னரே தமிழில் புதுக்கவிதை பேசும் இந்த ஞானக் கூத்தன், ஓலைக் கொட்டகையில் 'ஆகாரம்' வேகாது, மாற்றாக 'கூழ்' காயும் அல்லது 'சோறு' பொங்கும் என்று சொல்லாடக் கூசி, 'குடிசைக்குப் பக்கத்தில்/ ஓலைக் கொட்டகையில்/ ஆகாரம் வேகிறது' என்று, 'பாரதம் முழுதும் ஆரியப் பாரம்பரியம்தான்' எனக் கண்ணாமூச்சி காட்ட வந்த ஞானக்கூத்தன், பேனா பிடித்த காலத்திலிருந்து கோணல் பார்வை பழகி, 'கோணல்' பத்திரிகை நடத்தி, கோணல் ல்ககாட்டியாகவே மாறிப்போன ஞானக்கூத்தன் தமிழில் கவிதை எழுதப் பாரதியைப்போல் வாழ்த்தப்பட்டவரல்லர், மாறாக சபிக்கப்பட்டவர். இல்லாமலா,

எல்லா மொழிகளும் நன்று
கோவிக்காதீர் நண்பரே
தமிழும் அவற்றில் ஒன்று.

என்று ஊனப் பாட்டுப் பாடுகிறார்?

இவர் மேஜர் கவி ஆக ஒரு வழியுண்டு: இவர் பேசாமல் தன் பெயரை அப்படி மாற்றிக்கொள்ளலாம்; இன்னும் கொஞ்சம் கூடுதல் உத்திரவாதமாக சுஜாதர்வை விட்டு, அதையே பட்டமாக வழங்கச் சொல்லி மாட்டிக்கொள்ளலாம். இதனைப் பிரகடனப்படுத்துவதற்காக, தமிழவனை விட்டு மேடை போட்டு விழா எடுத்து மாலை போட்டுக் கொள்ளலாம். இந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் ஆளாகாமல் காளமேகம் போய்ச் சேர்ந்துவிட்டான். அவன் வாழ்க!

★

இதன் தொடர்பாகவே '... **என்பதாய் இருக்கிறது**' பற்றியும் நம் கருத்தைச் சொல்லிவிடத் தோன்றுகிறது.

நூலாசிரியர் இலக்குமி குமாரன் ஞானதிரவியம் சுஜாதா- ஞானக் கூத்தன் ஜோடியின் 'படு சுகம்' போற்றும் கவியெனத் தெரிகிறார். இந்த இருவருக்கும் பிடிக்கும்படி, குறிப்பாக சுஜாதாவுக்குப் பிடிக்கும்படியாகக் கவிதை புனைவதுதான் இனிவரும் காலத்தின் இவர் இலட்சியம் என்றாகிவிடாமல் இருந்தால் சரி. காரணம், வேறு வேறு தளங்களும் அடையாளங்களும் ஒன்றுபோலாக முனைந்தால் மிஞ்சுவது வேஷங்களும் பல்லிளிப்புகளுமாகிப் போகலாம்.

நூலின் தலைப்பில் கவிதையைத் தேட முனைந்த போது, 'என்பதாய் இருக்கிறது' எல்லாம் கவிதையாகிவிடாது என்பதாயிற்று. கவிதையைப் பார்க்கப் பழகுவதும் கவிதையாய் ஆகப் பழகுவதும் பக்குவம் சார்ந்த, பாசாங்கு தவிர்த்த, 'நான்' தொலைத்த ஞானம்

படிப்பகம்

www.padippakam.com



வழங்கும் திரவியம் ஆகலாம். இந்தக் கவிஞரும் அப்படியொரு ஞானதிரவியமாகத் திரளக் கூடியவர்தான்.

இவர் தனது கவிதைகளில் 'இவை வேர்கள், இவை தழைகள், இவை மலர்கள்' என்று பேதம் பாராமல், பார்க்கப் பழகாமல்கூட, எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டி மாலையாக்கியுள்ளார். அவர் அதிர்ஷ்டம், வேர்கள் வெட்டிவேர்களாகவும், தழைகள் மருக்கொழுந்துகளாகவும் வாசம் ஏற்றிக்கொண்டு, மலர்களின் சுகந்தத்தை உச்சப்படுத்துகிற மாதிரி அமைந்துள்ளன. ஆனால் இந்த அதிர்ஷ்டம் அறியாமையின் கொடையாகவே அனுமதிக்கப்படுமானால், காலச் சக்கரத்தின் சுவடுகளற்றுப் போகும் அதிவேகத்தில், வேரும் தழையும் விறகும் சருகுமாகிப் போகலாம். பூக்களும் சருகாகும் தான் எனினும் அவை பிறக்கும்போதே 'பூக்கள்' என்று முடி சூட்டிக் கொண்டவை.

இவரின் முன்னுரை இவர் கவிதைகளை விட நன்றாய் வந்திருப்பதாக என் நண்பர்கள் சிலாகிக்கிறார்கள். மொழிப்பாட்டில் திராவிடப் பிசிறுகளின் ஒத்தடச் சுகங்கள் விட்டுச் சென்ற மாயப் பதிவுகளை அழிக்கத் துடிக்கும் அன்பர்கள் அவர்கள்.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்று சொல்லிக்கொண்டே, தன் ஆளுமையை நிராகரிக்கும் கவசங்களாய் கொள்கையும் கோட்பாடும் வகுத்துக்கொள்கிறவனை என்ன செய்யலாம்?

இலக்குமி குமாரனைக் கேட்டால், 'கவிதை எழுத அனுமதிக்கலாம்' என்பார். என்னைக் கேட்டால் பல்லைக் கடித்துக்கொண்டு 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்பேன். விளங்கவில்லை என்றால் பல்லை உடைத்துக்கொண்டா விளக்க முடியும்?

எனக்கு இந்தக் கவிஞரின் முன்னுரையில் வேறொன்று தெரிகிறது. இவர் இன்னும் ஒரு சிட்டிகை 'நான்'ஐக் குழப்பி, இன்னும் ஒரு கார்வை குரலை உயர்த்தி, இன்னும் ஒரு விரற்கடை கழுத்தை நிமிர்த்தினால், ஒரு ரசவாதம் போல நல்ல அரசியல்வாதியாய்ப் பிறவியெடுக்கக் கூடும். திராவிடப் பாரம்பரிய மாயாவினோத அரசியல்வாதியாகத்தான். அதைத் தவிர்ப்பதும் வளர்ப்பதும் கவிஞரின் விருப்பம்.

இப்போதைக்கு, குறைந்த பட்சம், முதற்கவிதையின் சாராம்சத்தை என்னதான் பொதுமைப் படுத்தினாலும், அதன் எதிர்ப்பக்க சமர்ப்பணத்தைக் கேள்விக் குறியாக்குவது போன்ற வைப்பு முறைகளையேனும் தவிர்க்கப் பழகலாம்.

---

**இந்த இதழையும் இனி வரும் இதழ்களையும் விமர்சியுங்கள். சிறந்த இரு விமர்சனங்களுக்கு ஈராண்டு சந்தா வழங்கப்படும்.**

படிப்பகம்

www.padippakam.com

## வளர்மதி

அப்பாவை உதாரணமாக வைத்து
நல்ல பையன் என்று பேரெடுக்கச் செய்த
பிரயத்தனங்களத்தனையும் வீணாகிப் போனபின்
சின்ன வயதிலிருந்தே எந்தப் பழக்கத்திற்கும்
அடிமையாகாமல் போனது இப்போ
எத்தனை அபத்தமாகத் தோணுகிறது!

பகிர்ந்துகொள்ள
இருந்த நாட்கள் ஒன்றிரண்டும் கூட
கல்யாணமாகிக் கால்கட்டுடன்
ஒதுக்கமான பின்னால்,
நான் காதலித்தவளும் என்னைக் காதலித்தவளும்
கிட்ட வராமலேயே முறித்துக்கொண்டு
விட்ட பின்னால்,
ஆளில்லாமல் தவிக்கிற நேரங்களில்
எந்தப் பழக்கமும் இல்லாமலிருப்பது
எவ்வளவு சிரமமாய் இருக்கிறது!

தண்ணி அடித்து,
சுவருக்கு முன்னால் உட்கார்ந்து,
மனசில் இருப்பதையெல்லாம் கொட்டித்
தீர்த்துவிடவோ,
குறைந்தபட்சம் கோணலான உதட்டில்
ஒன்று சொருகி, பற்றவைத்து,
புகையோடு சேர்த்து எல்லாத்தையும்
ஊதித் தள்ளிவிடவோ முடியாமலிருப்பது
எவ்வளவு வேதனையாக இருக்கிறது!

குடிப்பவன் பாக்கியவான்.
கூத்தடிப்பவன் ஞானி.
பார்த்துக்கொண்டிருக்கிற நானோ
பேமானி.

படிப்பகம்

www.padippakam.com

Kavithaasaran, September, 1994, Regd. No. TN/MSN 746
CREATIVE LITERARY MONTHLY IN TAMIL. R. Dis. 5479/90

## சுப்ரபாரதிமணியன்

வந்து போகும் எந்தப் பறவைக்கும்
என் நிலை தெரியவில்லை.
சிதறிக் கிடக்கும் தானியம் பொறுக்கவோ,
சிறு குச்சிகள் சேர்த்துப் பாதுகாப்பாய்
இடம் தேடவோ,
யார்மீதான எரிச்சலிலோ
என் வீட்டு மேஜையை எச்சிலிடவோ,
என் நம்பிக்கைகளைச் சந்தேகப்படுத்தி
எச்சரிக்கை தந்துவிடவோ...
வழுக்குப் பாறை நுனியின்
என் நிலையை யார்யாரிடமோ
சொல்ல ஆசைதான்.
என் நிலையை பலவீனமாய் அறிவிக்கும்
மனிதர்களிடம் சொல்ல பயம்.
பறவைகள் பலவீனமாகத் தப்படிக்க மாட்டா
என்ற எண்ணம் என்றைக்கும்
அது தரும் ஆறுதல் வானம்போல்.
ஆனாலும் எந்தப் பறவையும்
என் நிலை கேட்க வந்ததில்லை.
மழைக்காய் காத்திருக்கும்
வளரும் புல்போல் என் காத்திருப்பு.

Printed by Mrs. Kavithasaran at 31, T.K.S. Nagar, Madras-19 and Published at 580, T.H. Road, Madras-21 & Edited by: Kavithaasaran.

படிப்பகம்